- NADep உடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் பற்றி ஆய்வு செய்தலும் தொடர்புடைய சிபாரிசுகளைச் செய்தலும்.

7. அமைச்சரவை உபகுழுவிற்கு தொடர்புபடுத்தப்பட்ட சட்ட வரைவுகள் மீது தீர்மானம் எடுப்பதற்கு சனாதிபதி செயலகத்திற்கு பங்களிப்புச் செய்தல்.

8. அமைச்சரவையினால் சனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பப்படும் புதிய சட்டவாக்கங்கள் மற்றும் சட்டங்கள் மீது தேவைப்படுமிடத்து சிபாரிசுகளை சமர்ப்பித்தல்

9. சட்ட அதிபருடனும் சட்டவரைஞர் திணைக்களத்துடனும் கூட்டிணைப்பை மேற்கொள்ளுதல்

10. நீதிகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கூட்டிணைத்தல்

11. அதிமேதகு சனாதிபதியினால் தெரிவிக்கப்படும் ஆலோசனையின் பிரகாரம் முறைமை தொடர்பில் சனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் கவனத்தைக் கோருதலும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுதலும்.

**2017 ஆம் ஆண்டில் எய்தப்பட்ட சாதனைகள்**

2016 ஆம் ஆண்டிலிருந்து முன் எடுத்துச் செல்லப்பட்ட வழக்குக் கோப்புகளின் எண்ணிக்கை. - 35

2017 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட வழக்குக் கோப்புகளின் எண்ணிக்கை - 21

**வழக்கு கோப்புகளின் மொத்த எண்ணிக்கை**

| விடயங்களின் மொத்த எண்ணிக்கை | 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை | நீதிமன்றங்களில் இன்னும் முடிவுறாத நிலையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 56 | 08 | 48 |



# உள்ளக கணக்காய்வுப் பிரிவு

## முன்னுரை

சனாதிபதியின் செயலாளரின் கீழ் நிறுவப்பட்டுளள இப்பிரிவிற்கு சனாதிபதி செயலகத்தினதும் அதன் கீழ் உள்ள பிற நிறுவனங்களினதும் உள்ளக கணக்காய்வுகளையும் சனாதிபதியின் செயலாளரினால் இப்பிரிவிற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வு புலன் விசாரணைகளையும் மேற்கொள்ளும் சிறப்புப் பணி குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

## பொதுக் குறிக்கோள்கள் / பணிகள்

- ஒழுங்கீனங்களையும் மோசடிகளையும் தடைசெய்வதிலும் வெளிப்படுத்துவதிலும் மேற்கொள்ளப்படும் உள்ளகப் பரிசோதனைகளின் கிரம நிலையையும் போதுமானவைகளாக இருக்கின்றனவா என்ற நிலையையும் பற்றி தொடர்ச்சியான அளவையை பேணுதலும் சுதந்திரமான மதிப்பீட்டைச் செய்தலும்.

- வேலையினதும் முன்மொழிவுகளினதும் கருத்திட்டங்களினதும் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதில் சனாதிபதியின் செயலாளருக்கு உதவி புரிதல்.

## 2017 ஆம் ஆண்டில் எய்தப்பட்ட சாதனைகள்

| தொடர் இல. | திட்டம் | நிலைமை | வள நூற்றுவீதம் |
|---|---|---|---|
| 01. | அபிவிருத்தி மற்றும் விசேடக் கருத்திட்டப் பிரிவின் கீழ் போதைவஸ்துகளை தடை செய்தல் சனாதிபதி சிறப்புப் பணிப்படையினால் செய்யப்பட்ட உள்ளகக் கணக்காய்வு | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 02. | நிதி முகாமைத்துவப் பிரிவினால் பேணிவைத்திருக்கப்படும் கணக்குகளும் ஆவணங்களும் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 03. | அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் கீழ் நடாத்தப்படும் சிறுநீரக நோய்களைத் தடை செய்வதற்கான சனாதிபதி சிறப்புப் பணிப்படையின் பணி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 04. | “பிவிதும பொலன்னறுவை” மாவட்ட அபிவிருத்தி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 05. | அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சுற்றாடல் பேணுகை தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மீட்பு சுற்றாடல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 06. | இலங்கை பவுண்டேசன் நிறுவகம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 07. | திறமுறை தொழில் முயற்சியாளர் நிலைக்கான முகாமைத்துவ நிறுவகம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 08. | சனாதிபதி நிதியம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 09. | சனாதிபதி செயலகத்தின் போக்குவரத்துக் கூறின் தொடர்பிலான நிதிக் கட்டுப்பாடும் நிருவாக விடயங்களும் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 10. | நெலும் பொக்குண மகிந்த ராஜபக்ஷ தியேட்டர் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 11. | திருகோணமலையிலுள்ள “சிரசர பிவிசும” மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | அறிக்கை சமர்ப் பிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளது | 75% |
| 12. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் (நடாத்தப்படுவதற்கு முன்மொழிவு செய்யப்பட்டுள்ள கூட்டம்) | 03 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன | 75% |

# ஊடகப் பிரிவு

## முன்னுரை

சனாதிபதி செயலகத்தில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆதரவுடன் நடாத்தப்படும் விசேடக் கூட்டங்கள் / கலந்துரையாடல்கள்/ வைபவங்கள் தொடர்பில் செம்மையான தகவல்களை பிற ஊடக முகவர் நிலையங்களுக்கு பொறுப்புடன் வழங்க வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## 2017ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சாதனைகள்

| பிரிவுக் கூறின் பெயர் : பதிப்புப் பிரிவு | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1. அரசாசாங்க அபிவிருத்தி நடைமுறையிலான இரண்டு ஆண்டுக்கால (2) அபிவிருத்திப் புத்தகத்தின் தொகுப்பு (சனவரி 08ஆந் திகதியின் ஞாபகார்த்தத்தைக் குறிப்பதற்கானது) | சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் 08 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்போந்த வெளியீடுகளுடன் சனாதிபதி ஊடகக் கூறினால் 21 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.<br>• தேவசாரக சங்வர்த்தன மெகேவர - இரண்டு ஆண்டுகளின் அபிவிருத்தி வேலைகள்<br>• திரசர தேவசர – (நிலைபேற்று நிலை இரண்டு ஆண்டுகள்) (சிங்களம்)<br>• திரசர தேவசர – (நிலைபேற்று நிலை இரண்டு ஆண்டுகள்) (சிங்களம்)<br>• பிவிதெமு பொலன்னறுவை<br>• மைத்திரி – திருப்புமுனை (தமிழ்)<br>• ஸ்ரீலங்காவே சங்வர்த்தன அபியோக (இலங்கையிலுள்ள அபிவிருத்திச் சவால்கள்)<br>• மொறகஹகந்த மற்றும் களுகங்கைகளிலான அபிவிருத்திக்கருத்திட்டம்<br>• மங்கள் தியவர ரெதவும் மாங்கல்ய |
| 2. அதிமேதகு சனாதிபதியின் உரைகளையும் உள்ளடக்கிய புத்தகமொன்றினை அச்சிடல் | “யுதுகம” புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. (யுதுகம) |
| 3. அதிமேதகு சனாதிபதி அவர்களின் கருதுகோகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட சமூகத்தை உள்ளிட்ட சஞ்சிகையொன்றை அச்சிடுதல் | “வெனச” சஞ்சிகையின் 06 தொகுதிகள் கடந்த ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. |
| 4. இந்நாட்டின் பல மாகாணங்களிலுள்ள பிரதேச பத்திரிகையாளர்களுக்கு கருத்தரங்குகளை நடாத்துதல் | அதிமேதகு சனாதிபதியின் செய்திகளை வெளியிடுவதில் ஈடுபட்டுள்ள பத்திரிகையாளர்களுடன் 10 கலந்துரையாடல் சுற்றுகள் நடாத்தப்பட்டுள்ளன. |
| ஏனையவை | சுகல அமைச்சுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகச் செயலாளர்களுடன் 02 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. |

| பிரிவின் / கூறின் பெயர் : வலைகடப்பிடங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1. அதிமேதகு சனாதிபதி அவர்களின் அரசாங்க கொடை முனைவுகளின் சமூக உட்சேர்ப்பு | கணிசமான அளவில் சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கத்தின் கொடைமுனைவுகள் அறிவிக்கப்பட் டுள்ளன. உத்தியோகப்பூர்வ வலைக்கடப்பிடங்கள் சர்வதேச மாநாடுகள் மற்றும் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் மூலமாக பரந்த அளவிலான சேவைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. |
| 2. அதிமேதகு சனாதிபதி அவர்களின் நிகழ்ச்சித் திட்டங்களும் கிராமங்களுக்குள் புதிய அறிவை பரப்புதலும் | அபிவிருத்திச் செய்திகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஊடாக நாட்டிலுள்ள கிராமங்களின் அபிவிருத்தியும் கிராமங் களுக்குள் புதிய அறிவுடன் முறையாக பரப்பப்பட வில்லை |
| 3. அதிமேதகு சனாதிபதியின் வலையமைப்புத் தொழிற்பாடுகளும் தரமுயர்த்தலும் இற்றை வரையான தாக்குதலும் | இது தகுந்த முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதைப் போலவே அது சிறந்த மட்டத்திற்கு தரமுயர்த் தப்பட்டுள்ளது. |
| 4. ஏனையவை | அதிமேதகு சனாதிபதி அவர்களின் தோற்றப்பாட்டை கட்டி எழுப்புதல் சமூக ஊடகங்களுக்குள் செயலாற்றுகை தரமுயர்த்தப்பட்டுள்ளது. |

| பிரிவின் / கூறின் பெயர் : நிழற்படப் பிரிவு | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1. ஒளிப்படப் பிம்பங்களை அச்சிடல் | அதிமேதகு சனாதிபதி தொடர்பிலான நிழற்படங்களையும் இந்நாட்டின் அபிவிருத்தி மீதான செய்திகளையும் அனுப்புதல் |
| 2. ஒளிப்படப் பிரதிகளுக்கு சட்டமிடுதல் | ஏறத்தாழ ஒளிப்படச் சட்டங்கள் சனவரியிலிருந்து திசெம்பர் வரை பல்வேறு அளவுகளில் அச்சிடப்பட் டுள்ளன. |
| 3. விசேட வைபவங்களின் நிழற்படங்கள் அல்பத்தை தயாரித்தல் | அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்குபற்றியுள்ள சிங்களப் புத்தாண்டு வழக்கங்களைப் புரிதல் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் நடாத்தப்பட்ட பல்வேறு பிற நிகழ்ச்சிகளையும் பொலன்னறுவையில் நடாத்தப் பட்ட இளைஞர் முகாமின் விசேட நிகழ்ச்சிகள் மற்றும் போசன் தர்மசாலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் நிழற்படங்கள் அல்பத்தின் தயாரிப்பு |

| பிரிவின் / கூறின் பெயர் : நிழற்படப் பிரிவு | |
|---|---|
| 4.வெளிநாட்டு விஜயங்களின் நிழற்படங்கள் அல்பத்தின் தயாரிப்பு | இலங்கைக்கு விஜயம் புரிந்த வெளிநாட்டுப் பிரமுகர்கள் மற்றுத் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் வெளிநாடுகளுக்கு புரியப்பட்ட விஜயங்கள் தொடர்பில் போட்டோ அல்பங்களின் தயாரிப்பு<br>● மலேசியாவிற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● கட்டாருக்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● ரஷ்யாவிற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● அவுஸ்ரேலியாவிற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● பங்களாதேஷிற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● ஐக்கிய அமெரிக்க நாடுகள் இராச்சியத்திற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● இலங்கைக்கு இந்திய முதலமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம் |
| 5.உபகரணங்களின் பழுது பார்த்தல் | லாப்ரொப், கனன் IDX புகைப்படக்கருவி, நிக்கன் கமராவின் உபகரணங்கள் மற்றும் நிழற்படப் பிரதியெடுத்தல் பொறி ஆகியவற்றின் பழுது பார்த்தல் |
| ஏனையவை | திரசரா யுகயக்க தேவசரக்கா எரபுமவைக் குறிப்பதற்காக பண்டார நாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்தப்பட்ட வைபவத்திற்குச் சமாந்தரமாக கார்ட்டூன் பொருட்காட்சியொன்று நடாத்தப்பட்டது |

| பிரிவின் / கூறின் பெயர் : சர்வதேச ஊடக மற்றும் ஆராய்ச்சிப்பிரிவு | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1.தெரிவு செய்யப்பட்ட விடயங்களுக்கு அமைவாக வட்டமேசை கலந்துரையாடல்களை / கருத்தரங்குகளை நடாத்துதல் | ஊடகத் துறையினர்களுக்கு வட்டமேசை கலந்துரையாடல்கள் நிகழ்ச்சிகளின் சுருக்கக் குறிப்புகள் வழங்கல் மற்றும் 06 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |
| 2.தொழினுட்ப உபகரணங்கள் | - |
| 3.கடிதங்களை வரைதல் / மொழி பெயர்ப்புகள் | அதிமேதகு சனாதிபதியின் கருத்திட்டங்கள் தொடர்பில் 120 கடிதங்கள் வரையப்பட்டுள்ளன. |
| ஏனையவை | - |

| **பிரிவின் / கூறின் பெயர் : வீடியோ மற்றும் பதிப்புப் பிரிவு** | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1.அதிமேதகு சனாதிபதி பங்குபற்றிய சகல வைபவங்களின் விவரங்களை ஊடகங்கள் வெளியிட்டுள்ளதுடன் அவற்றின் அதிமுக்கிய விவரங்களை ஊடகங்களின் சகல மார்க்கங்களிலும் வழங்குதல் | நாளொன்றுக்கு அளாவப்பட்டுள்ள சராசரி ஊடக மார்க்கங்கள் 03 2017ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1,100ஊடாக அளாவுகைகள் செய்யப்பட்டுள்ளன. |
| 2.தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்<br>● வெளிவாரி வளவாளர்கள் மூலமாக வாராந்தம் சில 05 நிமிட ஆவண நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்<br>● தினசரி 01 நிமிட ஆவண நிகழ்ச்சித்திட்டம்<br>● மாதந்தோறும் 30நிமிட ஆவண நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குதல்<br>● மாதந்தோறும் சனாதிபதி சிறப்புப் பணிப் படையின் நிகழ்ச்சித்திட்டங்கள் மீது பாடசாலைப் பிள்ளைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை வழங்குதல்<br>● மூன்று மாதத்திற்கொருமுறை சனாதிபதி சிறப்புப் பணிப் படையின் நிகழ்ச்சித் திட்டங்கள் மீது பொதுமக்களுக்கான விழிப் புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குதல் | இல்லை |
| 3.நேரடி வலையமைப்பு வலைக்கடப்பு மார்க்கத்தை சீராக்குதல் - இந்த இடை வலையமைப்பு வலைக்கடப்பு மார்க்கம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு எதிரான சேறு பூசும் நடவடிக்கைக்கு எதிராக நேரடியாக எதிர்த்தாக்கம் நிகழ்த்தியுள்ளது. | இது தொடர்பில் புதிய ஊடகப்பிரிவு நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றது என்பதன் காரணமாக வலையமைப்பு மார்க்கத்திற்கு தொலைக்காட்சிப் பிரிவு பங்களிப்புச் செய்யவில்லை |
| 4.உபகரணங்களின் பழுது பார்த்தல் | 1.4 மில்லியன் |
| 5.பிற செலவினங்கள் (கசெற் நாடாக்கள், DVD, XD Cam, தூக்கிச் செல்லக் கூடிய ஹார்ட் டிஸ்க், ரோயிட்டர், இணைப்புக் கருவிகள் முதலியன) | 50 கசெற் நாடாக்கள்<br>DVD = ஏறத்தாழ 750 |
| ஏனையவை | இல்லை |

# நல்லிணக்கப் பிரிவு

## முன்னுரை

2015ஆம் ஆண்டு யூன் மாதத்தில் நல்லிணக்கப் பிரிவு நிறுவப்பட்டதுடன் அது தொழிற்படச் செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின் அதிமுக்கிய வகிபாகம் பிரசை ஒவ்வொருவரும் ஐக்கியத்துடனும் பல்லினத் தன்மைகளுக்கும் தேசிய அடையாளங்களுக்கும் செலுத்தப்படும் மதிப்புடனும் சமவாய்ப்புகளுடனும் வாழக்கூடியவர்களுக்கும் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்திற்கும் அடிப்படை ரீதியாக பங்களிப்புச் செய்து அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுமான நாடாகவும் இந்நாட்டைக் கட்டியெழுப்புவதாகும். இப்பிரிவானது சனாதிபதி அலுவலகத்தின் உல்லாவற்றையும் உள்ளிட்ட வாழிகாட்டலின் கீழ் முன்னாள் சனாதிபதியாகிய மாண்புமிகு சந்திரிகா பண்டார நாயக்கா அவர்களின் பணிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## பொதுக்குறிக்கோள்கள்

இப்பிரிவின் முதனிலைக் குறிக்கோள் வெவ்வேறு சமூகங்களுடனும் சமயத் தலைவர்களுடனும் சிவில் சங்க அமைப்புகளுடனும் மாகாண சபைகளினதும் பிராந்திய அரசியல் தலைமையகப் பீடங்களுடனும் நிலை பேற்று நிலைக் கலந்துரையாடல்களை செய்வதும் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுமாகும்.

2017ஆம் ஆண்டில் மேற்போந்த குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதற்காக பின்வருவோர்களுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

1. அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்

2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் பிரதிநிதிகள்

3. சிவில் சங்க அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள்.

4. சமயத்தலைவர்கள்

5. சமூக அடிப்படையிலான அமைப்புகள்

இக்கலந்துரையாடல்களின் விளைவாக முரண்பாட்டிற்கான தீர்வைக் காண்பதற்கான நோக்கத்திற்காகவும் சமயங்களுக்கும் இனங்களுக்குமிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கான இயைபுடன் இம்முரண்பாடுகள் மீளவும் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

- இத்துடன் கூடுதலாக வெளிநாடுகளின் தூதுவர்களினாலும் ஐக்கிய நாடுகள் அமைப்பிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகளினாலும் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகிய வங்கிகளினதும் மற்றும் அரசாங்க அமைப்புகளினதும் அரசாங்கம் சாராத அமைப்புகளின் பிரதிநிதிகளினாலும் பாரிய பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் சனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்க அம்மணியின் ஆதரவின் கீழ் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள் இராச்சியம், இந்தியா, பிரான்சு, ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம், சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளைப் பிர-திநிதித்துவப்படுத்தும் உயர் ஆணையாளர்கள் மற்றும் தூதுவர்களுக்கு ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி விளக்குவதற்கும் இந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அவர்களுடைய உதவியைக் கோருவதற்குமாக அவர்களுடன் கலந்துரையாடல்கள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் குறிக்கோளுடன் புதிய அரசியலமைப்பொன்றை வகுத்தமைத்தல் தொடர்பில் இந்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் பங்குபற்றுதலுடன் பல சுற்றுக் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் கலந்துரையாடல்களின் போது உடன்பாடு தெரிவிக்கப்பட்ட தீர்மானங்கள் மீதான அறிக்கைகளுக்கு மறுமொழிகள் அனுப்பப்பட்டுள்ளன.

மேலே விவரிக்கப்பட்ட பணிகளுடன் கூடுதலாக கம்பஹா மாவட்டத்தில் அபிவிருத்தி தொடர்பில் வீடமைப்பு, விளையாட்டுகள், கழிவுப் பொருட்களின் கையாளுகை, நீர் வழங்கல் மற்றும் தொழில்சார் பயிற்சி ஆகியவற்றை வழங்குவதுடன் பொருட்கள் இயைபுள்ள அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் கூட்டிணைத்து பணியாற்றி அப்பணிகள் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் மாண்புமிகு பிரதம அமைச்சருக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து பெருந்தொகையான மக்கள் முன்னாள் சனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அம்மணிக்கு தங்களுடைய கஷ்டங்களைப் பற்றி குறிப்பிடுவதற்கு வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதுடன் பொதுமக்களினால் எதிர்நோக்கப்படும் கஷ்டங்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்வது இப்பிரிவின் பிரதான பணிகளில் ஒன்றாகவுள்ளது.

நாடுமுழுவதிலும் உள்ள மக்களிடமிருந்தும் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்தும் கிடைக்கும் கடிதங்களுக்கு மறுமொழி அனுப்புவதும் அவற்றை இயைபுள்ள அமைச்சுகளுக்கும் நிறுவனங்களுக்கும் தொடர்புபடுத்துவதும் தொலைபேசி மூலமாக பெறப்படும் செய்திகளுக்கு விடையளிப்பதுவும் கூட இப்பிரிவின் ஓர் பணியாகும்.

இப்பிரிவு 2017 சனவரியிலிருந்து திசெம்பர் வரைக்கும் 4,500ற்கும் மேற்பட்ட கடிதங்களைப் பெற்றுள்ளதும் இக்கடிதங்களுக்கு தாமதமின்றி விடயங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் விளைவாக வெவ்வேறு இனங் களுக்கிடையே உடன்பாடின்மை காரணமாக பாடசாலைகள் தொடர்பில் எழுப்பப்பட்ட அநேக விடயங்களைத் தீர்வு செய்வது சாத்தியமாகியிருந்தது.



## அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விடுக்கப்பட்டுள்ள செய்தி

சனாதிபதி செயலகமானது மக்களின் கவனத்தை மிகப் பெருமளவில் ஈர்த்துக் கொண்டிருக்கின்ற முக்கியமான அரசாங்க நிறுவனங்களில் ஒன்றாகவுள்ளது. இந்த நாட்டை அபிவிருத்தி செய்யும் நடைமுறையில் பங்குபற்றுதல் சகல அரசாங்க பணியாளர்களினதும் பொறுப்பாகும். சனாதிபதி செயலகமானது இந்த நடைமுறையின் முன்னணியிலுள்ள மையத் தொட்டியாகவுள்ளது. எனவே மக்களின் நோக்கம் என்னவெனில் சனாதிபதி செயலகமானது ஓர் ஆக்கபூர்வமானதும் வினைத்திறனுடனானதுமான நிறுவனமாக வரவேண்டும் என்பதாகும்.

நாம் மோசடிகள், ஊழல் மற்றும் கெட்ட நடத்தைகளிலிருந்து விடுபட்ட முறைமையொன்று நிலவுவதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கடமைகளை தகுந்ததும் வெளிப்படைத் தன்மை வாய்ந்ததுமானவொரு விதத்தில் பூர்த்திசெய்து இன்றும் நாளையும் வதிகின்றவர்களுக்கும் வதியவுள்ளவர்களுக்கும் சிறந்த எதிர்காலமொன்றை உருவாக்கும் மிகவும் முக்கியமான பொறுப்பை உடையவர்களாகவுள்ளோம்.

150இற்கும் மேற்பட்ட ஆண்டுக்காலப் பிரகாசமான அரசாங்க சேவை வரலாற்றையுடையதும் உயர்ந்த படிப்பறிவையும் தொழினுட்ப அறிவையும் உடைய மக்களைக் கொண்டுள்ள எமது நாட்டிற்கு உற்பத்திவள நடவடிக்கைகளையும் உள்ளடக்கி உயர்ந்த நடைமுறைகளின் விளைபயனுள்ள நடைமுறைப்படுத்தலுடன் இந்நாட்டைக் கட்டியெழுப்புவது மிகவும் கஷ்டமானவொரு பணியன்று. இந்நாட்டின் அடிப்படைத் தேவைப்பாடு உற்பத்திவளக் கருதுகோள் தகுந்த முறையில் செயற்படவேண்டும் என்பதேயாகும். இந்த இலக்கை அடைவதற்கு இந்நிறுவனத்தின் சகல பிரிவுகளிலும் உச்சத்தரத்தில் திறமை பேணப்படுதல் அத்தியவசியமானதாகும்.

எனது மேற்பார்வையின் கீழ் நடாத்தப்பட்ட ஐந்து பெரிய கருத்திட்டங்களின் வெற்றிகரமான நடைமுறைப் படுத்தல் மூலமாக சமூக நலனோம்பலை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாக விருந்துள்ளோம் என்பதைக் குறிப்பிடுவதில் நான் பெருமையடைகின்றேன். இது எமது கூட்டுச் சாதனைகளில் ஒன்றாகவிருப்பதுடன் "கிராம சக்தி" மக்கள் இயக்கம் கிராமிய பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டிருந்தமையை இடம் பெற்றுக் கொண்டிருக்கும் சாதனை காண்பிக்கின்றது. இந்த பெரு முயற்சிகள் யாவற்றினதும் இறுதி இலக்கு எமது மக்களுக்கு சிறந்த வாழ்க்கைத் தரமொன்று கிடைப்பதைப் பூர்த்தி செய்வதாகும்.

பண்டைய புகழை மீள் மதிப்பீடு செய்வது தூரத்திலுள்ள ஓர் சேரிடமாகவிருக்கின்ற போதிலும் நாம் அதை எய்துவதற்காக துணிவுடனும் பொறுப்பேற்புடனும் சரியான பாதையில் செல்ல வேண்டிய தேவையுள்ளது. எனவே கடந்த ஆண்டின் கூட்டு முயற்சிகளின் சாதனைகளைப் பாராட்டுகின்ற வேளையில் எண்ணிக்கையில் பதின்நான்காயிரத்திற்கும் மேற்பட்ட அரச பணியாளர்களின் முழுத்தொகையினர் களுக்கும் வழிகாட்டல் சக்தியாக நிரூபிப்பதற்கான புதிய அணுகுமுறையுடனான சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டதுமான வழிவகையொன்றின் தேவை பற்றிய முக்கியத்துவத்தை நான் பேரார்வத்துடன் சுட்டிக்காட்டுகின்றேன்.

**அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன**
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி.



15 - CM 26894



<u>செயலாளரினால் விடுக்கப்பட்ட செய்தி</u>

சனாதிபதி செயலகமானது மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வகிபாகத்தைப் பொறுப் பேற்கின்றது. நாம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களாகவுள்ளோம் என்பதுடன் எமது மக்களின் எதிர்காலம் தொடர்பிலான அவருடைய தொலைநோக்கு பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வது எமது பொறுப்பாகவுள்ளது.

எமக்கு வழங்கப்பட்ட கடமை என்பது நல்லிணக்கம், நிலைபேற்று நிலை, பொருளாதார அபிவிருத்தியும் சமாதானமும், சருவதேச ஒழுங்கைப் பேணுதல் மற்றும் இடர்ப்பாட்டிற்கான நிவாரணம் வழங்குதல் ஆகியவற்றை உறுதிப்படுத்தி இந்நாட்டின் அபிவிருத்திக்கு சுறுசுறுப்புடன் பங்களிப்பு செய்வதாகும் என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதைப்போலவே நாம் சமீபத்திய கடந்த காலத்தில் வலுவான இராஜதந்திரத் தொடர்புகளைக் கட்டி எழுப்புவது மீது வைத்திருந்த முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடலாகாது.

சனாதிபதி அவர்களின் நேரடித் தலையீடு மற்றும் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்பட்ட உணவு உற்பத்தி, போதைவஸ்துகளை தடைசெய்தல், சிறுவர்களைப் பாதுகாப்போம், சிறுநீரக நோயை ஒழித்தல் மற்றும் சுற்றாடல் பேணுகை ஆகியவற்றையும் உள்ளடக்கி விசேட கருத்திட்டங்கள் மூலமாக கடந்த ஆண்டின் முயற்சிகள் மற்றும் பொறுப்பேற்புகள் வெற்றியடைந்துள்ளமைக்காக நான் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

நாம் எதிர்த்துச் சமாளித்து வெற்றிபெறவேண்டியுள்ள சவால் என்னவெனில் எமது எதிர்காலத்திற்காக சிறந்த நாடொன்றைக் கட்டி எழுப்ப வேண்டியிருக்கின்றது என்பதாகும். எனவே தேவைப்பாடுகளை மீள ஒழுங்குபடுத்தி தற்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் பொருந்தக் கூடியனவாக அவற்றை சீர்திருத்த வேண்டியுள்ளது. இந்த நடைமுறையை முன்னெடுத்துச் செல்லுமாறு உங்கள் அனைவரையும் கோருவதற்கு நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகின்றேன். இந்த விடயம் தொடர்பில் பலத்தையும் நம்பிக்கையையும் வழங்குகின்ற அதேவேளையில் தேவையான வழிகாட்டலும் உதவியும் உங்களுக்கு எப்போதும் வழங்கப்படும் என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

**ஒஸ்டின் பர்ணாந்து**
சனாதிபதியின் செயலாளர்.

# பொருளடக்கம்


| | | பக்கம் இல. |
|---|---|---|
| 1. | செயலாளரின் பணியகம் | 05 |
| 2. | பிரத்தியேகச் செயலாளர் பிரிவு | 16 |
| 3. | பதவியினர்களின் பிரதானிபிரிவு | 19 |
| 4. | உள்ளக நிருவாகப் பிரிவு | 23 |
| 5. | மனித வளங்கள் அபிவிருத்திக் கூறு | 40 |
| 6. | நிறுவன ரீதியான கூட்டிணைப்புப் பிரிவு | 44 |
| 7. | நிதி முகாமைத்துவப் பிரிவு | 48 |
| 8. | அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட அலுவல்கள் பிரிவு | 50 |
| 9. | கொள்கைக் கூட்டிணைத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு | 53 |
| 10. | அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவு | 72 |
| 11. | சனாதிபதி நிதியம் | 168 |
| 12. | பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு | 172 |
| 13. | சட்டப் பிரிவு | 175 |
| 14. | உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 178 |
| 15. | ஊடகப் பிரிவு | 179 |
| 16. | நல்லிணக்கப் பிரிவு | 183 |

## முன்னுரை

சனாதிபதி செயலகமானது பழைய பாராளுமன்ற கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இக்கட்டடமானது பண்டைய கிரேக்க நாட்டில் உள்ளதும் அதீனா எனப்பெயரிடப்பட்டுள்ள பெண் தெய்வத்திற்காக கட்டப்பட்டுள்ளதுமான பதினான்கு தேவாலயத்தின் கட்டடக்கலை வடிவத்திலுள்ள கட்டடமாகும். கிரேக்க நாடு தற்கால சனநாயகத்தின் பிறப்பிடமாகவுள்ளதுடன் இப்பழைய பாராளுமன்றக் கட்டடமானது இலங்கையின் சனநாயக வரலாறு முழுவதிலுமான திருப்புமுனைகளின் மையமாக வுள்ளது.

சனாதிபதி செயலகமானது தற்போது அரசாங்கத்தின் தலைவரின் சகல கடமைகளினதும் பணிகளினதும் நிருவாகம் கூட்டிணைப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றின் முகவர் நிலைய மாகவுள்ளது. பிற சகல அரசாங்க நிறுவனங்களைப் போலவே சனாதிபதி செயலகமும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பிணிக்கப்பட்டுள்ளதுடன் அது பொது மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலையிலும் உள்ளது.

இலங்கையின் அரசியல் முறைமையில் நல்லாட்சியை நிறுவுவதில் திடசித்தத்துடன் இருக்கின்ற தற்போதைய சனாதிபதி அவர்கள் அதிகாரத்தை பெற்றதுடன் சனாதிபதி செயலகத்தின் வகிபாகம் விரிவடைந்துள்ளதுடன் இன்று அரசாங்கத்தின் தகவல்களை மக்கள் பெற்றுக் கொள்ளுதல் உரிமையொன்றாகியுள்ளதுடன் சனாதிபதி செயலகத்தின் பணிகளும் கூட அவர்களுக்கு கிடைக்கக் கூடியவைகளாகியுள்ளன.

இதன் பிரகாரம் இலங்கை சிவில் சேவையிலுள்ள அதிசிரேட்ட உத்தியோகத்தர்களில் ஒரு-வராகவுள்ளவரும் உத்தியோகபூர்வமாக நிருவாக சேவையின் தலைவராக நியமிக்கப்பட் டுள்ளவரும் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தொலைநோக்கினால் வழிகாட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றவரும் சனாதிபதியின் செயலாளரின் கீழ் முந்திய ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகளை உள்ளடக்குகின்ற செயலாற்றுகை அறிக்கையானது சனாதிபதி செயலகத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளின் சுருக்கமான விசாரணைக் குறிப்பாகும்.

இந்த அறிக்கை தேசிய அபிவிருத்தியிலும் அதன் உற்பத்திவள வீதத்திலும் சுறுசுறுப்பான பங்குபற்றுதலை புலப்படுத்துகின்றது. எனவே நிலைபேற்றுநிலை அபிவிருத்தியை எய்துவதற்காக தீர்க்கமான பாதையொன்றிற்குட்பட்டுள்ள வளர்ச்சியடைந்துக் கொண்டிருக்கும் நாடாக எமது சவால்களையும் திறமுறைகளையும் கையாளுவதில் நாம் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைக் கண்டறிவதில் இந்த அறிக்கையானது ஓர் பிரதானமான ஊற்றாகவிருக்கும்.

## தொலைநோக்கு

நல்லாட்சியினூடாக நிலையான வளம்வாய்ந்ததோர் இலங்கை

## செயற்பணி

அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அரசியல் அமைப்பினூடாக ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த பணிகளை செயல்படுத்தவும் சனாதிபதியின் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்த தேவையான வசதிகளை வழங்குவதுடன் இலங்கை அரசியல் பொறிமுறையூடாக நல்லாட்சியை நிலை நாட்டவும் நிலையான அபிவிருத்தி மூலமாக வளமான இலங்கையை கட்டியெழுப்ப அணி வகுத்தல்.

**சனாதிபதி செயலகமானது பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.**

- செயலாளரின் பணியகம்
- பிரத்தியேகச் செயலாளர் பிரிவு
- பதவியினர்கள் பிரிவின் பிரதானி
- அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்பு அலுவல்கள் பிரிவு
- உள்ளக நிருவாகப் பிரிவு
- மனித வளங்கள் அபிவிருத்திப்பிரிவு
- கொள்கை கூட்டிணைப்பு மற்றும் ஊடக கலந்துரையாடல்கள் பிரிவு
- நிதி முகாமைத்துவப் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- சனாதிபதி நிதியப் பிரிவு
- அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவு
- மக்கள் தொடர்பாடல் பிரிவு
- ஊடகப்பிரிவு
- உபசாரப்பிரிவு
- சட்டப்பிரிவு

# செயலாளரின் பணியகம்

## முன்னுரை

இப்பிரிவு அதிமேதகு சனாதிபதி அவர்களின் சார்பில் செயலாளரினால் மேற்கொள்ளப்படும் செயலாற்றுகைக்கு வசதியளிக்க வேண்டுமெனவும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை நிறைவேற்ற வேண்டுமெனவும் எதிர்ப் பார்க்கப்படுகின்றது. இதற்கமைவாக இப்பிரிவிற்கு பின்வரும் முக்கிய பணிகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

## பிரதான பணிகள் / குறிக்கோள்கள்

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் பணிப்பிற்கமைவாகவும் சனாதிபதியின் செயலாளரினால் அறிவுறுத்துரை வழங்கப்படுவதற்கு அமைவாகவும் வருகைபுரியும் வெளிநாடுகளின் தலைவர்களைக் கௌரவிக்கும் முகமாக நடாத்தப்படும் வைபவங்களை ஒழுங்குபடுத்தலும் கூட்டிணைத்தலும்.
- அழைப்பிதழ்களைத் தயாரித்தல், நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல், கலந்துரையாடல் குறிப்புகளைப் பதிவு செய்தல், கூட்டிணைத்தல், மற்றும் மேற்பார்வைகளைச் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கி செயலாளரின் பணியகத்தினால் கூட்டப்படும் கூட்டங்களுடன் இணைந்த சகல விடயங்களுக்கும் உதவி புரிதல்.
- அரசாங்கத்தின் நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இடைக்கால நீதியை எய்துவது தொடர்பில் ஆரம்ப நடவடிக்கையை எடுத்தல்.
- மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கும் ஊக்குவிப்பிற்குமாக தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2016 - 2021 ஐ நடைமுறைப்படுத்துவதற்காக பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் கீழ் உத்தியோகத்தர்கள் குழுவின் பிரதிநிதியாக நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- இயைபுள்ள நிபுணர் குழுவுடன் தேசிய நிலைபேற்று நிலை அபிவிருத்தி தொலைநோக்கு, 2030 இன் கூட்டிணைத்தல் ஒழுங்கமைப்புச் செயற்பாடு.
- அமைச்சரவையானது நெலும் குலுண குழுவையும் கருத்திட்டக் குழுவையும் நியமித்துள்ள காரணத்தினால் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அமைச்சுகளின் செயலாளர்களின் கூட்டங்களைக் கூட்டிணைத்தல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களின் பணிப்புகளுக்கு அமைவாகவும் சனாதிபதியின் செயலாளரின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாகவும் சுற்றறிக்கைகளை வெளியிடுதல்.
- மாவட்ட மற்றும் பிரதேசக் கூட்டிணைப்புக் குழுக்களின் நியமனம் தொடர்பில் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- பிரகடனங்களை அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு ஆளாகும் நிலையிலுள்ளவர்களிட மிருந்து அத்தகைய சொத்துக்கள் பற்றிய பிரகடனங்களைப் பெறுவதற்கும் அவற்றைச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- சனாதிபதி "பரிசற நியமு" தங்கப்பதக்கங்கள் வழங்குவதற்கான வேட்பாளர்களை நேர்முகப் பரீட்சை செய்யும் நீதிபதிகள் குழாமின் தவிசாளராக நடவடிக்கை எடுத்தல்.
- அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் சனாதிபதியின் செயலாளருக்கும் செய்யப்படும் முறைப்பாடு களிலுள்ள கோரிக்கைகளின் தொடர்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விடுக்கப்படும் பணிப்பிற்கு அமைவாகவும் / சனாதிபதியின் செயலாளரினால் விடுக்கப்படும் அறிவுறுத்துரைக்கு அமைவாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை ஆரம்பித்தல்.
- சனாதிபதி செயலகத்திலும் அதன் கீழுள்ள நிறுவனங்களிலும் உள்ள உத்தியோகத்தர்களுக்கு சலுகை ரீதியிலான வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.
- சனாதிபதி செயலகத்தின் சகல சுற்றறிக்கைகளின் / உள்ளக ஆவணங்களின் மற்றும் அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகளின் / நிதிச் சுற்றறிக்கைகளின் நாளது வரையான கோப்புகளையும் அத்துடன் ஏதேனும் பிற முக்கியமான சுற்றறிக்கைகளினதும் / ஆவணங்களினதும் நாளது வரையான கோப்புகளையும் பேணிவைத்திருத்தல்.
- சனாதிபதி செயலகத்தில் நடாத்தப்படும் விசேட நிகழ்ச்சிகளுக்கு வருகைபுரியும் விருந்தினர்களை அவர் களுக்கு உரிய இருக்கைகளுக்கு இட்டுச் சென்று அமர்த்துவதற்கும் வரவேற்பு அளிப்பதற் குமாக இக்குழுவினர்களை கூட்டிணைத்தலும் பயிற்சியளித்தலும் மேற்பார்வை செய்தலும்.

2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள்

➢ **இலங்கைக்கு இந்தியா ஆந்திரப்பிரதேசத்தின் முதலமைச்சர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பூர்வ விஜயம்.**



➢ இந்தியா ஆந்திரப்பிரதேசத்தின் முதலமைச்சர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்களினால் 2017 சனவரி 7ஆம் திகதியிலிருந்து 08ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட இரண்டு நாட்கள் உத்தியோகப்பூர்வ விஜயத்தின் போது அவருடைய வருகையை குறிக்கு முகமாக சனவரி 7ஆம் திகதியன்று வழங்கப்பட்ட விசேட இராப்போசன விருந்து உபசார நிகழ்ச்சியை கூட்டிணைக்கும் சிறப்புப்பணி இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

➢ **69 வது தேசிய சுதந்திர தின வைபவம்**

69வது தேசிய சுதந்திர தின வைபவத்தை கொண்டாடுவதற்காக சனாதிபதி செயலகத்தில் 2017.02.04 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட விசேட இராப்போசன விருந்து நிகழ்ச்சியை கூட்டிணைப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான சிறப்புப் பணியானது இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டது.

➢ **அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட இந்தோனேஷியாவிற்கான உத்தியோகப்பூர்வ விஜயம்.**



2017 மார்ச் 06 ஆந் திகதியிலிருந்து 08 ஆந் திகதி வரை அதிமேதகு சனாதிபதி அவர்களினால் இந்தோனேஷியாவிற்கு மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பூர்வ விஜயத்தின் கூட்டிணைப்பு இப்பிரிவினால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

➢ **அதிமேதகு சனாதிபதி அவர்களினால் ரஷ்யாவிற்கு மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பூர்வ விஜயம்.**



அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 2017 மார்ச் 22 ஆந் திகதியிலிருந்து 25ஆந் திகதி வரை ரஷ்யாவிற்கு மேற்கொள்ளப்பட்ட ரஷ்யாவிற்கான உத்தியோகப்பூர்வ விஜயத்தின் கூட்டிணைப்பு பணியானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதற்கு இப்பிரிவிற்கு ஒப்படைக்கப் பட்டிருந்தது.

- **இலங்கைக்கு இந்திய பிரதம அமைச்சர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பூர்வ விஜயம்.**



2017 சனவரி 07ஆம் திகதியிலிருந்து 08ஆந் திகதி வரையான இரண்டு நாட்கள் உத்தியோகப்பூர்வ விஜயத்தின் பேரில் இலங்கைக்கு வருகைபுரிந்த இந்திய பிரதம அமைச்சர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களுக்கு கொழும்பு கோட்டையிலுள்ள சனாதிபதி அலுவலகத்தில் வழங்கப்பட்ட விசேட இராப்போசன விருந்து நிகழ்ச்சியின் ஒழுங்குபடுத்தலும் கூட்டிணைப்புச் சிறப்புப் பணியும் அழைப்பிதழ்களின் தயாரித்தல் வேலையும் மற்றும் மே மாதம் 12ஆந் திகதியன்று கண்டியிலுள்ள சனாதிபதி அலுவலகத்தில் வழங்கப்பட்ட மதிய போசனத்தில் விருந்தினர்களின் பங்குபற்றுகையை உறுதிப்படுத்தும் பணியும் இச்செயலகத்திற்கு சிறப்புப்பணியாக ஒப்படைக்கப்பட்டிருந்தது.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அவுஸ்திரேலியாவிற்கான உத்தியோகப்பூர்வ விஜயம்.**



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து 2017 மே மாதம் 23 ஆந் திகதியிலிருந்து 26 ஆந் திகதிவரை அவுஸ்திரேலியாவிற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட நான்கு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை கூட்டிணைக்கும் பணியானது இப்பிரிவிற்கான சிறப்புப் பணியாக வழங்கப்பட்டிருந்தது.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பங்களாதேஷிற்கு மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ விஜயம்.**



2017 யூலை 13 லிருந்து 15 வரையுள்ள காலப்பகுதியில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் கூட்டிணைப்புப் பணியானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இணைப்புடன் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதற்கான சிறப்புப் பணியாக வழங்கப் பட்டிருந்தது.

- **ஐக்கிய நாடுகள் அமைப்பின் 72 ஆவது அமர்வில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் பங்குபற்றுகை**



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து 2017 செத்தெம்பர் 17ஆந் திகதியிலிருந்து 25 ஆந் திகதி வரை நியூயோர்க்கில் நடாத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின பொது மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் கூட்டிணைப்புப் பணியானது இப்பிரிவிற்கு சிறப்புப் பணியாக ஒப்படைக்கப்பட்டிருந்தது.

- **சார்க் நாடுகளின் மாண்புமிகு சபாநாயகர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் 8 ஆவது மாநாட்டில் பங்குபற்றிய பேராளகுழுவிற்கு வழங்கப்பட்ட விசேட இராப்போசன விருந்து.**

சார்க் நாடுகளின் மாண்புமிகு சபாநாயகர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் 8 ஆவது மாநாட்டில் பங்குபற்றிய பேராளர்குழுவிற்கு 2017 ஒற்றோபர் 03 ஆந் திகதியன்று கொழும்பு கோட்டையிலுள்ள சனாதிபதி மாளிகையில் வழங்கப்பட்ட விசேட இராப்போசன விருந்து நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கூட்டிணைத்தல் பணியானது இப்பிரிவிற்கு சிறப்புப் பணியாக ஒப்படைக்கப்பட்டது.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களினால் கட்டாருக்கு மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பூர்வ விஜயம்.**



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து 2017 ஒற்றோபர் 25லிருந்து 26 ஆந் திகதி வரை அதிமேதகு சனாதிபதி அவர்களினால் கட்டாருக்கு மேற்கொள்ளப்பட்ட இரண்டு நாட்கள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை கூட்டிணைக்கும் பணியானது இப்பிரிவிற்கு சிறப்புப் பணியாக வழங்கப்பட்டிருக்கின்றது.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களினால் கொரியாவிற்கு மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பூர்வ விஜயம்.**



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 2017 நவம்பர் 27லிருந்து 30 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட நான்கு நாட்கள் உத்தியோகப்பூர்வ விஜயத்தைக் கூட்டிணைக்கும் பணியானது இப்பிரிவிற்கு சிறப்புப் பணியாக வழங்கப்பட்டிருந்தது.

- **இலங்கைக்கு மலேசியப் பிரதம அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ விஜயம்**



மலேசியப் பிரதம அமைச்சர் மாண்புமிகு டாத்தோ ஸ்ரீ முகம்மது நஜீப் துன் அப்துல் ரஷாக் அவர்கள் திசெம்பர் 18 ஆந் திகதியன்று சனாதிபதி அலுவலகத்திற்கு புரிந்த வருகையையும் 2017 திசெம்பர் 17லிருந்து 19 ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட இரு தரப்பு கூட்டங்களையும் உடன்படிக்கைகளிலான கையொப்பமிடல்கள் நிகழ்ச்சிகளையும் குறிக்கு முகமாக வழங்கப்பட்ட உத்தியோக பூர்வ வரவேற்பு வைபவத்தையும் அவருக்கு சனாதிபதி மாளிகையில் வழங்கப்பட்ட மதிய போசன விருந்து நிகழ்ச்சியையும் கூட்டிணைக்கும் பொறுப்பு இப்பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இப்பணிகள் செயலாளரின் பணியகத் தினால் ஒழுங்குபடுத்தப்பட்டும் ஒன்றிணைக்கப்பட்டும் இருந்தன.

- **நத்தார் தினத்தை குறிக்குமுகமாக விசேட இராப்போசன விருந்து நிகழ்ச்சி நடாத்தப்பட்டது**



சனாதிபதி மாளிகையில் நத்தார் தினத்தை குறிக்குமுகமாக 2017 திசெம்பர் 19 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட விசேட இராப்போசன விருந்து செயலாளரின் பணியகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டும் கூட்டிணைக்கப்பட்டும் இருந்தன.

- **அதிமேதகு சனாதிபதியின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட கூட்டங்கள்**

  - **அமைச்சுகளின் செயலாளர்களுடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.**

    2017.07.19 ஆந் திகதியன்று சனாதிபதி அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் நடாத்தப்பட்ட கூட்டம் இப்பிரிவினால் ஒழுங்குபடுத்தப்பட்டும் கூட்டிணைக்கப் பட்டுமிருந்தது.

  - **காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன**

    2017 செத்தெம்பர் 06 ஆந் திகதியும் நவம்பர் 16 ஆந் திகதியும் காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் நடாத்தப்பட்ட கூட்டங்கள் இப்பிரிவினால் ஒழுங்குப் படுத்தப்பட்டும் கூட்டிணைக்கப் பட்டுமிருந்தன.



  - இலங்கையில் 2019 ஆம் ஆண்டில் ஆபத்திற்குள்ளாகும் நிலையிலுள்ள காட்டு விலங்குகள் மற்றும் தாவர இனங்களில் சருவதேச வர்த்தகம் மீதான ஒப்பந்தத்தின் தரப்புகளின் 18 ஆவது அமர்வை நடத்துவது தொடர்பில் சனாதிபதியின் ஆதரவுடன் நியமிக்கப்பட்ட உயர் மட்ட செயற்பாட்டுக் குழுவின் கூட்டமானது 2017 ஓகத்து 30 ஆந் திகதியன்று நடாத்தப்பட்டதுடன் இக்கூட்ட மானது இப்பிரிவினால் ஒழுங்குபடுத்தப்பட்டும் கூட்டிணைக்கப்பட்டுமிருந்தது.

  - கட்டார் நாட்டின் மாண்புமிகு பொருளாதார மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சருடன் 2017 ஒற்றோபர் 29 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கலந்துரையாடல் செயலாளரின் பணியகத்தினால் கூட்டிணைக்கப்பட்டிருந்தது.

- **அதிமேதகு சனாதிபதி அவர்களினால் தலைமைத்துவம் வகிக்கப்பட்ட பிற நிகழ்ச்சித் திட்டங்களும் பணிகளும்**

  - நிலைபேற்று நிலை அபிவிருத்திக்கான 2030 ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இலங்கையில் அடுத்த 3 ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நிலைபேற்று நிலை அபிவிருத்தியையும் உள்ளடக்கி “திரசரா யுகயக்” அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை பிரகடனப்படுத்தும் பணியானது சனாதிபதி அலுவலகத்தில் அதிமேதகு சனாதிபதியின் ஆதரவுடன் 2017 சனவரி 01 ஆந் திகதியன்று நடாத்தப்பட்டதுடன் இது இப்பிரிவினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

  - **“திரிசரா யுகயக்க – தேவசரக்கா எரபும” மீதான தேசிய பேரவை**

    அதிமேதகு சனாதிபதியின் ஆதரவுடன் பண்டார நாயக்கா ஞாபகார்த்த சருவதேச மாநாட்டு மண்டபத்தில் 2017.01.08 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட “திரசரா யுகய – தேவ சரக்கா எரபும” மீதான தேசிய பேரவைக் கூட்டம் இப்பிரிவினால் கூட்டிணைக்கப்பட்டும் ஒழுங்கு படுத்தப்பட்டுமிருந்தது.

- **விளையாட்டுக்கள் மற்றும் பௌதிக சுகாதாரம் மீதான தேசிய நிகழ்ச்சித்திட்டம்**



விளையாட்டுத்துறை அமைச்சினால் வருடந்தோறும் நடாத்தப்படுகின்றதும் 2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றதுமான விளையாட்டுத்துறை மற்றும் பௌதிக சுகாதாரம் மீதான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் அமைச்சுகளுக்கிடையிலான செயற்பாட்டுக் குழுவானது இப்பிரிவினால் கூட்டிணைக்கப்பட்டிருந்தது. சனாதிபதியின் செயலாளரின் ஆதரவுடன் 2017 திசெம்பர் 15 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட குழுக்களின் கூட்டிணைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் வேலையை சிறப்புப் பணியாக மேற்கொள்ளும் பொறுப்பு இப்பிரிவிற்கு வழங்கப்பட்டது. பின்னர் 2017.01.10 ஆந் திகதி தொடக்கம் அதிமேதகு சனாதிபதியின் ஆதரவுடன் இப்பணியானது இப்பிரிவினால் தொடரப்பட்டதுடன் இந்த தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வைபவ நிகழ்ச்சி 2017.02.06 ஆந் திகதியன்று அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆதரவுடன் நடாத்தப்பட்டது.

- **தேசிய விருது வழங்கல் வைபவம்**



அழைப்பிதழ்களின் தயாரித்தல் மற்றும் அழைப்பிதழ்களை விருது பெறுநர்களுக்கும் விருந்தினர் களுக்கும் அனுப்புதல் மற்றும் நெலும் பொக்குண மகிந்த ராஜபக்ஷ மண்டபத்தில் 2017 மார்ச் 20 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட தேசிய விருது வழங்கல் வைபவத்திற்குள் விருந்தினர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தல் ஆகிய பணிகளையும் உள்ளடக்கி இவ்வைபவத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் கூட்டிணைத்தல் இப்பிரிவிற்கு சிறப்புப் பணியாக ஒதுக்கப்பட்டுள்ளன.

➢ **சனாதிபதியின் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள்**

- புதிய இலங்கை நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களுக்கு தனியார்துறையுடன் இணைந்து பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்குவதற்கு இசைவாக தனியார் துறையின் தொழில் முயற்சியாளர்களுடன் 2017 செத்தெம்பர் 14 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கலந்துரையாடல் செயலாளரின் பணியகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டதுடன் கூட்டிணைக்கப்பட்டும் உள்ளது.

- அமைச்சுகளின் செயலாளர்களின் கூட்டங்கள் இப்பிரிவினால் 2017.02.17 ஆம் 2017.07.13 ஆம் 2017.09.29 ஆந் திகதிகளில் சனாதிபதியின் செயலாளரின் ஆதரவுடன் ஒழுங்கு செய்யப்பட்டு கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

- **மனித உரிமைகள் பற்றிய விசேட அறிக்கையாளர்களினாலும் பிரதிநிதிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட விஜயங்கள்**

1. சனாதிபதியின் செயலாளருடனும் மனித உரிமைகளையும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தையும் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான விசேட அறிக்கையாளராகிய திரு.பென் ஏமர்சனுடனும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

2. உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் திரும்பத் திரும்ப நிகழ்தலைத் தடுத்தல் ஆகியன தொடர்பிலான அந்தந்த வருகை புரிந்த விசேட அறிக்கையாளருடனான இறுதியான உரையாடல்கள் 2017.10.22 ஆந் திகதியன்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சரின் ஆதரவுடன் அமைச்சின் மனையிடத்தில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சனாதிபதியின் செயலாளரும் கூட பங்குபற்றியுள்ளாரென்பதுடன் இந்த நிகழ்ச்சி இப்பிரிவினால் கூட்டிணைக்கப்பட்டிருந்தது.

3. சனாதிபதியின் செயலாளருக்கும் இடைக்கால நீதி மற்றும் பொறுப்புக் கூறல் பொறிமுறை மீதான அவதானிப்பு விஜயத்தை மேற்கொள்ளும் விசேட அறிக்கையாளராகிய கலாநிதி மொட்டோ நோகுச்சிக்குமிடையே 2017 ஒற்றோபர் 30ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கலந்துரையாடலை கூட்டினைக்கும் சிறப்புப் பணியானது செயலாளரின் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

➢ **பிற நிகழ்ச்சிகளும் கூட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் கலந்துரையாடல்களும்**

- செயலாளரின் பணியகமானது நல்லிணக்க பொறிமுறைகள் அறிக்கை 2017 பற்றிய கலந்துரையாடல் சிறப்புப்பணிப்படை ஏற்றுக் கொள்ளும் நிகழ்ச்சியை 2017 ஒற்றோபர் 30 ஆந் திகதியன்று கூட்டிணைத்துள்ளது.

- இப்பிரிவு நிலைபேற்று நிலை அபிவிருத்தி 2030 இற்கான தேசிய நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதன் பொருட்டு 2017 சனவரி 30ஆந் திகதியன்று நியமிக்கப்பட்ட சனாதிபதி நிபுணர் குழுவின் கூட்டங்களையும் வேலைக் களங்களையும் கூட்டிணைப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் பங்களிப்புச் செய்துள்ளது.

- இப்பிரிவு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் கூட்டிணைப்பிற்கு பங்களிப்பதற்காக சனாதிபதி உத்தியோகத்தர்கள் குழுவின் பிரதிநிதியாக 2017.07.06 ஆந் திகதியிலும் 2017.12.14 ஆந் திகதியிலும் நடாத்தப்பட்ட கூட்டங்களில் பங்குபற்றியுள்ளது.

- பூகோள மீளாய்வின் கீழ் இலங்கை பற்றிய தேசிய அறிக்கையின் மூனாறாவது மீளாய்வு மீது 2017 நவம்பர் 15 ஆந் திகதியன்று ஜெனீவாவில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் தொடர்பிலான ஆரம்ப நடவடிக்கைகளில் சனாதிபதியின் சிரேட்ட உதவிச் செயலாளர் பங்குபற்றியுள்ளார். அத்துடன் அவர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கோரிக்கை மற்றும் சிபாரிசு ஆகியவற்றின் பேரில் 2017 நவம்பர் 13ஆந் திகதியிலிருந்து 19ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட கலந்துரையா்லில் பேராளர் குழுவின் உறுப்பினரொருவராகவும் பங்குபற்றியுள்ளார்

- இப்பிரிவு இடம்பெயர்ந்த நபர்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீளக்குடியமர்த்துதல் தொடர்பில் பிரதம அமைச்சரின் செயலாளரின் ஆதரவுடன் 2017 திசெம்பர் 19ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கலந்துரையாடலிலும் பங்குபற்றியுள்ளதன் மூலம் பங்களிப்புச் செய்துள்ளது.

- இப்பிரிவிற்கு அதிமேதகு சனாதிபதியின் ஆதரவுடன் பொல்கொல்லை அணைக்கட்டிலும் மொறகஹகந்த அணைக்கட்டிலும் 2018.10.08ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட “சலிஸ் வசரக்க மகாவலி அசிரிய” வைபவம் தொடர்பிலான அழைப்பிதழ்களில் அச்சிடல் வேலையையும் அவற்றை அனுப்புதல் வேலையையும் உள்ளடக்கி 2017 திசெம்பரில் அவற்றின் உரிய காலத்திற்கு முந்திய தயாரிப்புப் பணியும் சிறப்புப் பணியாக குறித்தொதுக்கப்பட்டது.

➢ **சலுகை வாகன அனுமதிச் சீட்டுக்களின் வழங்கல்**

இப்பிரிவினால் பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு சலுகை வாகன அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

- திருமதி கே.எச்.ஆர்.விலாசித்த – சட்ட உத்தியோகத்தர், மனித உரிமைகள் ஆணைக்குழு
- திருமதி டபிள்யு.ஆர்.ஏ.விஜயவிக்கிரம –– சனாதிபதியின் உதவிச் செயலாளர்
- திருமதி டபிள்யு.பீ.ஏ.என்.சோமரத்தின - சனாதிபதியின் உதவிச் செயலாளர்
- திரு ஜி.பி.எம்.லலித் பண்டார - சனாதிபதியின் உதவிச் செயலாளர்
- திரு ஐ.எச்.பி.ஏ.தேசப்பிரிய - சனாதிபதியின் உதவிச் செயலாளர்
- திரு ஓ.கே.எஸ்.ஏ.ஒவிற்றிகல - சனாதிபதியின் உதவிச் செயலாளர்
- திரு எம்.டபிள்யு.ஜே.குமார - சனாதிபதியின் உதவிச் செயலாளர்
- திரு யு.டி.உதயகுமார – சிரேட்ட விரிவுரையாளர், இலங்கை மன்ற நிறுவகம்

- **சுற்றறிக்கைகள் வெளியிடுதல்**

| இல. | சுற்றறிக்கை | சுற்றறிக்கை இல. | திகதி |
|---|---|---|---|
| 01 | "தேசிய விளையாட்டு மற்றும் பௌதிக ஆரோக்கிய நிலை ஊக்குவிப்பு வாரம்"– பெப்புருவரி 06-12,2017 | SP/SB/01/17 | 06.01.2017 |

- **அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் வெளியிடுதல்**

| இல. | சுற்றறிக்கை | சுற்றறிக்கை இல. | திகதி |
|---|---|---|---|
| 01 | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத் துடன் இணைக்கப்பட்ட அல்லது பிரித்தெடுக் கப்பட்ட மெருகூட்டப்பட்ட பயிற்சி நிறுவகம் | PS/CP/56/17 | 05.12.2017 |

- **தங்க விருது பெறுநர் சுற்றாடல் தலைவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் தொடர்பிலான விடயங்கள்**

சுற்றாடல் தலைவர்கள் தங்க சின்னங்கள் வழங்கப்படுவதற்காக 2017ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் குழாம்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள்

| | |
|---|---|
| 2017 மார்ச் 28ஆம் 29 ஆம் திகதிகள் | துட்டகைமுனு தேசிய பாடசாலை, மொனறாகல |
| 2017 மே 17ஆந் திகதி | பதுளை ரிதிமாலியத்த மகா வித்தியாலயம் |
| 2017 மே 18ஆந் திகதி | பதுளை உடவெல மகா வித்தியாலயம் |
| 2017 மே 22ஆந் திகதி | மாவட்டச் செயலகம், மாத்தறை |
| 2017 ஓகத்து 29ஆந் திகதி | கண்டி உடபடலவா சுதர்சன மகா வித்தியாலயம் |
| 2017 திசெம்பர் 20ஆம் 21ஆம் திகதிகள் | மத்திய மாகாண சபை அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பொல்கொல்ல |

- **நெலும் குலுண கருத்திட்டம்**

நெலும் குலுண தொடர்பில் கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானங்கள் குழுவும் கருத்திட்டக் குழுவும் அமைச்சரவைச் செயலாளரினால் நியமிக்கப்பட்டதன் காரணமாக 2017.01.30ஆந், 2017.02.23ஆம், 2017.04.21ஆம், 2017.08.03ஆம், 2017.09.26ஆம், 2017.10.16ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட கூட்டங்களில் இப்பிரிவு பங்குபற்றியுள்ளது.

- **பிரதேச கூட்டிணைப்புக் குழுக்களுக்கான இணைக் கூட்டிணைப்புத் தவிசாளர்களை நியமித்தல்**

பிரதேச இணைக் கூட்டிணைப்புக் குழுக்களுக்கு இலங்கை சுதந்திரக் கட்சியிலிருந்து 65 இணைத் தவிசாளர்களையும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 33 இணைத் தவிசாளர்களையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



16 - CM 26894

- **சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் பிரகடனம் தொடர்பிலான விடயங்கள்**

பொறுப்புகள் தொடர்பில் 2017ஆம் ஆண்டில் அதிமேதகு சனாதிபதிக்கு பிரகடனங்களைச் செய்ய வேண்டிய செயலாளரின் பணியகமானது மிகு அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், மேன்மைதங்கிய தூதுவர்கள் மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் ஆகியோர்களிடமிருந்து அத்தகைய 244 பிரகடனங்கள் கிடைத்தமை பற்றிக்குறிப்பிட்டுள்ளது.

- **சிறிய பெறுகைகள் குழுவில் பங்குபற்றுதல்**

இப்பிரிவு 2017ஆம் ஆண்டில் 30 சிறிய பெறுகைகளுக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

- **சுற்றறிக்கைகள் கோப்பை இற்றைவரையானவைகளாக்குதல்**

2017ஆம் ஆண்டில் சனாதிபதி செயலகத்தினாலும் அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினாலும் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளையும் இற்றை வரையானவைகளாக்கும் சிறப்புப் பணியானது இப்பிரிவிற்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இப்பிரிவு சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட 08 சுற்றறிக்கைகளையும் அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்ட 68 சுற்றறிக்கைகளையும் இற்றை வரையானவைகளாக்கியுள்ளது.

| இல. | நிகழ்ச்சி | திகதி |
|---|---|---|
| 01 | திரசரா யுகய பற்றிய தேசிய பேரவை – தேவ சரக்கா எரபியும | 2017.01.08 |
| 02 | 69வது சுதந்திர தின வைபவத்தை குறிக்குமுகமாக சனாதிபதி அலுவலகத்தில் நடாத்தப்பட்ட இராப்போசன விருந்து | 2017.02.04 |
| 03 | தேசிய விருது வைபவம் - 2017 | 2017.03.20 |
| 04 | கொழும்பு மாவட்ட விசேட சுற்றாடல் வேலைக்களம் | 2017.06.20 |
| 05 | சார்க் நாடுகளின் 8வது மாநாட்டில் பங்குபற்றிய மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நடாத்தப்பட்ட இராப்போசன விருந்து | 2017.10.03 |
| 06 | சமகால நிகழ்வாக வறுமை குறைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் கிராம சக்தி மக்கள் இயக்கத்தின் சமூக ரீதியான உட்சேர்த்தல் தேசிய வைபவம் | 2017.10.20 |
| 07 | இந்தவைபவம் ஏழாவது பௌத்த மாநாட்டையும் சமகால நிகழ்வாக நடாத்தியுள்ளது. | 2017.11.02 |
| 08 | இலங்கைக்கான மலேசியாவின் பிரதம அமைச்சரினால் மேற்கொள் ளப்பட்ட உத்தியோகப்பூர்வ விஜயத்தைக் குறிப்பதற்காக நடாத்தப்பட்ட மதிய போசன விருந்து. | 2017.12.18 |
| 09 | நத்தார் தினத்திற்கான விசேட இராப்போசன விருந்து. | 2017.12.19 |

- **பணிகளை முன்னெடுத்துச் செல்லுகின்ற நியமனம் செய்யப்பட்ட பதவிகள் தொடர்பிலான விடயங்களை கூட்டிணைத்தலும் மேற்பார்வை செய்தலும் அவர்களுக்கு பயிற்றியளித்தலும்**

2017ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளில் 35 நபர்களைக் கொண்ட குழுவொன்று இவ்விடயங்களை முன்னெடுத்துச் செல்லுதல் தொடர்பில் 35 நபர்களைக்கொண்ட குழுமம் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுமம் இப்பிரிவினால் கூட்டிணைக்கப்பட்டும் ஒழுங்குபடுத்தப்பட்டுமுள்ளது.

இப்பிரிவு முன்னேறிச் செல்லும் பதவியினர்களின் அறிவையும் புரிந்துணர்வையும் பரிசோதனை செய்வதன் பொருட்டு 2017.03.07ஆந் திகதியன்று எழுத்திலான பரீட்சையொன்றை நடாத்தியுள்ளதுடன் மேன்மை தங்கிய விருந்தினர்களை வரவேற்றல் மற்றும் உத்தியோக பூர்வ அரசாங்க விருந்து உபசாரத்தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளும் முன்னிலையிலுள்ளவைகளுமான உணவு பரிமாறல் ஏற்பாடுகளைச் செய்தல் ஆகியவற்றில் பயிற்சி அமர்வை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.






# சனாதிபதி பிரிவின் பிரத்தியேகச் செயலாளர்

முன்னுரை

**பிரதான குறிக்கோள்கள்**

அதிமேதகு சனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள்/பணிப்புகளும் கட்டளைகளும்/ஆவணங்களும் அறிக்கைகளும் தொடர்பில் உச்சமட்டத்திலான வினைத்திறனுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

| | நடவடிக்கைகள் | குறிக்கோள்களை எய்துதல் |
|---|---|---|
| 1 | அதிமேதகு சனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள்/ பணிப்புகளும் கட்டளைகளும்/ஆவணங்களும் அறிக்கைகளும் தொடர்பில் வினைத்திறமையின் உச்ச மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | அறிவுறுத்துரைகள் பெறப்பட்டவுடன் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 2 | அதிமேதகு சனாதிபதி அவர்களுடன் நடாத்தப்பட்ட வைபவங்கள், கூட்டங்கள் மற்றும் நேர்முக உரையாடல்கள் மீதான நாளேட்டில் செய்யப்பட்ட குறிப்புகளை இற்றைவரையானவைகளாக்குதல் | - மேற்படி - |
| 3 | அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பணிக்கப்படுவதன் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி அவர்கள் கையொப்பமிடுவதற்கான கடிதங்களைத் தயாரித்தல் | - மேற்படி - |
| 4 | அதிமேதகு சனாதிபதியின் கவனத்திற்கு பொருத்தமான குறிப்புகளுடன் ஆவணங்களை / அறிக்கைகள் மற்றும் வைபவங்கள் முதலியனவற்றை சமர்ப்பித்தலும் பணிக்கப்படுவதன் படி நடவடிக்கை எடுப்பதை தொடங்குதல் | - மேற்படி - |
| 5 | பொதுமக்களினாலும் மக்கள் பிரதிநிதிகளினாலும் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்படும் ஆவணங்கள் தொடர்பில் மேலும் நடவடிக்கைகளை எடுத்தல். | - மேற்படி - |
| 6 | பெற்றுக் கொள்ளப்படும் கடிதங்கள் தொடர்பிலான தகவல்களை நாளதுவரையானவைகளாக்குவதும் பேணிவைத்திருத்தலும் கோப்புக்கள் தயாரித்தலும் | - மேற்படி - |

## மருத்துவ சேவைகள் பிரிவு

### முன்னுரை

சனாதிபதி செயலகத்தின் மருத்துவ சேவைகள் பிரிவானது சனாதிபதி அவர்களின் செயலாளரின் கீழ் தொழிற்படுகின்றது. அதிமேதகு சனாதிபதி அவர்களினதும் அவருடைய நெருக்கமான குடும்ப அங்கத்தவர் களினதும் சனாதிபதி செயலகத்தின் ஆளணியினர்களினதும் சிறந்த உடற்சுகாதாரத்தை பேணிவைத்திருப் பதற்கு உதவுவதன் பொருட்டு தேவையான வழிகாட்டலை வழங்க வேண்டுமெனவும் சிகிச்சையளித்தலை மேற்கொள்ள வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், இப்பிரிவானது பொருளாதார ரீதியில் பிரதிகூலமான நிலையிலுள்ள பிரசைகளின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான நிவாரணமளித்தல் நடவடிக்கைகள் பற்றியும் திட்டமிடுகின்றது.

### பிரதான பணிகள் / குறிக்கோள்கள்

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் மோட்டார் வாகனத் தொகுதியுடன் உடனிணைந்து செல்லுகின்ற நோயாளர் வாகன வண்டியொன்றை (அம்பியூலன்ஸ் வண்டி) சிறந்த நிலையில் வைத்திருப்பதற்கான நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்து சரியான இடத்தில் அதை வைத்திருத்தல்.

- நோயாளர் வண்டியின் (அம்பியூலன்ஸ் வண்டி) பேணுகை மற்றும் வழங்கல்கள் மீது நிலையான கவனத்தைச் செலுத்தி தேவைப்படுமிடத்து தலையீடுகளைச் செய்தல்.

- உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிமேதகு சனாதிபதி அவர்களினாலும் அவருடன் கூட செல்லுபவர் களினாலும் மேற்கொள்ளப்படும் பிரயாணத்தின் போது அவர்களுடைய உடல் நலம் மீது சிறந்த கவனம் செலுத்துதல்.

- சிறந்த சுகாதாரத் தரத்தை பேணி வைத்திருப்பதற்குத் தேவைப்படும் அறிவுமட்டத்தை பல்வேறு அதிகரிப் பதன் பொருட்டு பதவியினர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்.

- பதவியினர்கள் மருத்துவச் சிகிச்சையையும் மருத்துவ ஆலோசனையையும் நாடிப் பெறுவதற்காக மருத்துவச் சிகிச்சையையும் மருத்துவ ஆலோசனையையும் நாடிப் பெறுவதற்காக மருத்துவ நிலைய மொன்றை பேணிவைத்திருத்தல்.

- இச்செயலகத்தின் உத்தியோகத்தர்களின் விடயத்தில் தேவைப்படுமிடத்து அவர்களை துறைசார் மருத்துவ நிபுணர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்வதன் பொருட்டு முன்னணியிலுள்ள பிற நிறுவனங்களுக்கு செல்லுமாறு அவர்களுக்கு வழிகாட்டுதல்.

- பொதுமக்களின் நன்மைக்காக குறைந்த அளவில் சேவை வழங்கப்படும் இடங்களில் திட்டமிடப்பட்டு காலத்துக்கு காலம் நடாத்தப்படும் தரமான சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்காக நடாத்துவதற்கு ஆலோசனை வழங்குதலும் சுறுசுறுப்புடன் பங்களிப்புச் செய்தலும்.

- இந்நாட்டில் எழக்கூடிய எந்த சுகாதார விடயங்களையும் எதிர் நோக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைப் பற்றி திடமிடலும் அவற்றை உரிய இடங்களில் வைத்திருத்தலும்.

### 2017 ஆம் ஆண்டில் எய்திய சாதனைகள்

- “கட்டளு மேத சத்துட்டின்” என்ற தொனிப் பொருளின் கீழ் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று 2017 சனவரி 27ஆந் திகதியன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- உடல் நலத்தை “சுகாதாரத்திற்கும் மகிழ்ச்சிக்கும் வெற்றிக்குமாக மேம்படுத்துவதன் முக்கியத்துவம்” என்ற தொனிப்பெருளின் கீழ் “தேசிய விளையாட்டுக்கள் மற்றும் உடற்தகுதி மேம்படுத்தல் வாரம்” என்பதைக் குறிக்குமுகமாக 2017 பெப்புருவரி 06ஆந் திகதியன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்படுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்காக "நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் மற்றும் குருதியில் கொழுப்பு மட்டத்தின் கட்டுப்பாடு" என்ற தொனிப்பொருளின் கீழ் 2017 மார்ச் 03ஆந் திகதியன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்படுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- அதிமேதகு சனாதிபதியின் அறிவுறுத்துரையின் கீழ் நீர்கொழும்பு மருத்துவசாலைக்கு அருகில் டெங்கு நோயாளர்களின் குருதி பரிசோதனை நிலையமொன்றை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2017 யூலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- சனாதிபதி செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்காக இலங்கை தேசிய மருத்துவசாலையுடனும் ரேடியண்ட் கண் மருத்துவசாலையுடனும் இணைந்து கண் கிளினிக்கு (மருத்துவ) நிகழ்ச்சித் திட்டமொன்று 2017 நவம்பர் 11ஆந் திகதியன்று நடாத்தப்பட்டுள்ளது.

# பதவியினர்களின் பிரதானியின் பிரிவு

**முன்னுரை**

பதவியினர்கள் பிரிவின் பிரதானிக்கு சனாதிபதி அவர்களின் பதவியினர்கள் தொடர்பிலான முகாமைத்துவம், அதிமேதகு சனாதிபதி தொடர்பிலான பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களின் கூட்டிணைப்பு மற்றும் கொழும்பிலும் பிற பிரதேசங்களிலும் நடாத்தப்பட்ட வைபவங்கள் மற்றும் கூட்டங்கள் ஆகிய விடயங்கள் மற்றும் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பெற்றுக்கொள்ளப்படும் கடிதங்கள், முன்மொழிவுகள் மற்றும் பிற செய்திகள் தொடர்பில் தேவையான நவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியன பிரதான பொறுப்பாக குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

பொதுவான குறிக்கோள்கள்

1. சனாதிபதி அவர்களின் பதவியினர்களை தகுந்த முறையில் முகாமைத்துவம் செய்தல்.
2. அதிமேதகு சனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
3. கொழும்பிலும் பிற இடங்களிலும் அதிமேதகு சனாதிபதி அவர்களின் கூட்டங்களையும் பணிகளையும் கூட்டிணைத்தல்.
4. அதிமேதகு சனாதிபதி அவர்களின் கூட்டங்களும் கலந்துரையாடல்களும் ஆக்கப்பூர்வமானவைகளாக நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அவற்றைக் கூட்டிணைத்தல்
5. அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் விடயங்களின் தீர்வுகளைக் கூட்டிணைத்தல்.
6. “பௌத்த மறுமலர்ச்சி நிதியினால்” பௌத்த கலாசார மற்றும் கல்விச் சேவை நிறுவனங்களுக்கும் தற்போதைய பௌத்த குருமார்களுக்கும் வழங்கப்படும் நலனோம்பலை அதிகரித்தல்.
7. கம்பஹா மற்றும் யாகொட பிரிவிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
8. “பிவிதெமு பொலன்னறுவையினால்” (நாம் பொலன்னறுவையை விழித்தெழுப்புவோமாக) அபிவிருத்திக் கருத்திட்டம் 2016 – 2020 என்பதன் மூலம் பொலன்னறுவை மாவட்டத்தில் நிலைபேற்று நிலை அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.

## 2017ஆம் ஆண்டில் எய்தப்பட்ட சாதனைகள்

1. **சனாதிபதியின் பதவியினர்களைக் கையாளுதல்**

   சனாதிபதி செயலகத்துடன் இணைக்கப்பட்ட பதவியினர்களின் உளச்சார்பு அபிவிருத்தி, விடய அறிவு, அலுவலக முறைமைகள் மற்றும் ஒழுக்காறு மீது வேலைக்களங்களை நடாத்துதலும் அத்தகைய நடவடிக்கைகளைக் கண்காணித்தலும்.

2. **அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்**

   வெளிக்களத்திலும் அலுவலகத்திலும் உத்தியோகபூர்வ வதிவிடத்திலுமான கடமைகள் தொடர்பில் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலைச் செய்து கூட்டிணைப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை வகுத்தல். அதிமேதகு சனாதிபதி மற்றும் சனாதிபதி அலுவலகம் தொடர்பிலான தகவல்கள் விரும்பத்தகாத தரப்பினர்களுக்கு கசிந்து சென்றடைவதை தடை-செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நிறுவுதலும் இப்பிரிவின் பணியாகும். அலுவலகத்திற்கு செல்லிடத் தொலைபேசிகள் மற்றும் இலத்திரோனிக் (மின்னணு) உபகரணங்கள் கொண்டு செல்லப்படுவதை மட்டுப்படுத்துவதற்கும் அலுவலகத்திற்கு வருகையாளர்களினால் மேற்கொள்ளப்படும் வருகைகள் மற்றும் வெளியேறிச் செல்லுதல்கள் மீது கண்காணிப்புச் செய்வதற்குமாக வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றை உரிய இடத்தில் வைத்தலும் இப்பிரிவின் பணியாகும்.

**3. அதிமேதகு சனாதிபதி அவர்கள் கொழும்பிலும் பிற இடங்களிலும் பங்குபற்றும் கூட்டங்களையும் பணிகளையும் கூட்டிணைத்தல்**

அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்குபற்றியுள்ளவைகளும் கொழும்பிலும் வெளியிடங்களிலும் நடாத்தப்படவுள்ளவைகளுமான கூட்டங்களுக்கான ஒழுங்குகளையும் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கான விருப்பத்தையும் அக்கூட்டங்களில் நடாத்தப்படவுள்ள உரைகளைப் பற்றியும் அக்கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரங்களைப் பற்றியும் அக்கூட்டங்களில் தங்களுடைய பங்குபற்றலை ஏற்கனவே உறுதிப்படுத்தியவர்களின் விவரங்களையும் கூட்டத்தின் நோக்கம் மற்றும் கூட்டம் நடாத்தப்படவுள்ள இடம், ஊடகவியலாளர்களின் விவரங்கள் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றி நாம் எம்மை முழுமையாக பரிச்சயப்படுத்திக் கொண்டதன் பின்னர் அந்த விடயங்கள் பற்றி சனாதிபதி அவர்களுக்கு சுருக்கமாகத் தெரிவித்தல் வேண்டும்.

இந்த குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகனை எதிர் நோக்குவதன் பொருட்டு சனாதிபதி அவர்களின் கூட்டிணைப்புச் செயலாளர்களுக்கு மாவட்டங்களுக்கான பொறுப்புக்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன என்பதுடன் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்தும் சனாதிபதி பாதுகாப்பு பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் அவ்வண்ணம் சேகரிக்கப்பட்ட தகவல்களை மாவட்டச் செயலாளர்களினால் உறுதிப்படுத்துவதற்கும் கூட நினழ்ச்சித்திட்டமொன்று செயற்பாட்டிலுள்ளது.

**4. ஆக்கப்பூர்வமான முறையில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் நடாத்துவதை உறுதிப்படுத்தல்**

அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்குபற்றவுள்ள கூட்டங்களின் குறிக்கோள்கள் பற்றியும் அக்கூட்டங்களில் எடுக்கப்படவுள்ள விடயங்கள் மற்றும் கோரிக்கைகள் ஆகியவற்றுடன் பங்குபற்றும் தரப்பினர்கள் மற்றும் இக்கூட்டங்களுடன் நேரடியான தொடர்புடைய நிறுவனங்கள் பற்றியும் கூட்டங்களின் குறிக்கோள்களிலிருந்து தெளிவாக தெரிந்து கொண்டு அந்த முன்னறிவுடன் அந்த விடயம் பற்றி சனாதிபதிக்கு இப்பிரிவு சுருக்கமாக அறிவிக்கும்.

இப்பிரிவானது நிகழ்ச்சிநிரலையும் பங்குபற்றுபவர்களின் விவரங்களையும் இக்கூட்டத்தின் குறிக்கோள் தொடர்பிலான பின்னணி விடயங்களையும் மற்றும் குறிப்பேடு ஆகியவற்றையும் அதிமேதகு சனாதிபதி அவர்களின் வருகைக்கு முன்னதாக மேசசையில் தயாராக வைத்திருக்கப்பட வேண்டிய பணியையும் ஊடக செய்தியாளர்களுக்கு தேவையான வசதிகள் செய்யப்படுவதையும் பார்த்துக் கொள்ளும்.

**5. அதிமேதகு சனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள தனியார் கடிதங்களுக்கும் கருத்திட்ட முன்மொழிவுகளுக்கும் பிற செய்திகளுக்கும் மறுமொழி அனுப்புதல்**

அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பெறப்பட்ட பொது மக்களின் கோரிக்கைகளை கண்டறிந்து அக்கோரிக்கைகளை வகைப்படுத்தி அவற்றை இயைபுள்ள பிரிவுகளுக்கு அனுப்புவதும் தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் எய்தப்படும் முன்னேற்றத்தை கண்காணிப்பதுவும் பொது மக்களின் தேவைகளுக்கு சேவையளிப்பதுவும் எத்தடையையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து பொது மக்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதுவும் இப்பிரிவின் பொறுப்பாகும். இதன் பிரகாரம் 2017ஆம் ஆண்டில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏறக்குறைய 9,000 கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**6. செயற்பாட்டிலுள்ள “பௌத்த மறுமலர்ச்சி நிதியம்”**

1. “பௌத்த மறுமலர்ச்சி நிதியம்” வங்கிக் கணக்கிற்கு உள்நாடு மூலமாகவும் வெளிநாடு மூலமாகவும் நேரடி நன்கொடை ஊடாக பங்களிப்பை பெறுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

   இதன் பிரகாரம் 2017.12.31 ஆந் திகதியில் பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தினால் பெற்றுக்கொள்ளப் பட்ட மொத்த நன்கொடைத் தொகையானது 102,360,136.97 ரூபாவாகும்

   பின்வரும் அட்டவணை முப்படைகளின் தொழிலாளர் பங்களிப்பின் கீழ் 2018ஆம் ஆண்டில் நிருமாணங்களை ஆரம்பிப்பதற்காக 2017ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கையையும் மதிப்பிடப்பட்ட பணத்தொகையையும் காண்பிக்கின்றது.

2. பின்வரும் அட்டவணை முப்படைகளின் தொழிலாளர் பங்களிப்பின் கீழ் 2018 ஆம் ஆண்டில் நிருமாணங்களை ஆரம்பிப்பதற்காக 2017ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கையையும் மதிப்பிடப்பட்ட பணத்தொகையையும் காண்பிக்கின்றது.

| தொழிலாளர்களின் பங்களிப்பு | கருத்திட்ட அமைவிடங்களின் எண்ணிக்கை | ரூபாவில் மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகைகள் |
|---|---|---|
| இலங்கை தரைப்படை | 09 | 3,840,271.56 |
| இலங்கை விமானப்படை | 08 | 6,520,570.88 |
| இலங்கை கடற்படை | 09 | 3,783,522.60 |
| மொத்தம் | 26 | 14,144,365.04 |

7. **கம்பஹா பகல யாகொட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

இப்பிரிவிற்கு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு கம்பஹா மாவட்ட செயலகத்தையும் பிரதேச செயலகத்தையும் பிற இயைபுள்ள தரப்புகளையும் கூட்டிணைக்கும் சிறப்புப்பணி வழங்கப்பட்டுள்ளது.



8. **“பிவிதெமு பொலன்னறுவை”யின் கூட்டிணைத்தல் - மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

சமூகம், சமூக அமைப்புகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடனும் கல்விமான்களின் வழிகாட்டலுடனும் சமவாயத் தலைவர்களின் ஆலோசனைகள் மற்றும் ஆசீர்வாதங்களுடனும் “பிவிதெமு பொலன்னறுவை” என்ற மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மக்களின் வாழ்க்கையின் சகலதுறைகளிலுமான கண்டறியப்பட்ட அபிவிருத்தித் தேவைப்பாடுகளின் முன்னுரிமை நிரலொன்றின் அடிப்படையில் 2016 லிருந்து 2020ஆம் ஆண்டுகள் வரையான ஐந்து ஆண்டுத் திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இந்த அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான அபிவிருத்தி வெளிக்களங்கள் கண்டறியப் பட்டுள்ளதுடன் 2017ஆம் ஆண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்திட்டத்திற் கமைவான கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் வேலைகளும் கூட உள்ளன. 2017ஆம் ஆண்டில் பிரதான அபிவிருத்தி வெளிக்களங்களும் குறித்தொதுக்கப்பட்ட ஏற்பாடுகளும் செலவினமும் பின்வருமாறு காண்பிக்கப்படலாம்.

| அபிவிருத்தி வெளிக்களங்களின் எண்ணிக்கை | 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 2017ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 2017ஆம் ஆண்டில் செலவினம் |
|---|---|---|---|
| 26 | 2338 | 1781 | 5,630,903,126.14 |





# உள்ளக நிருவாகப் பிரிவு

**முன்னுரை**

இப்பிரிவிற்கு சனாதிபதி செயலகத்தின் சகல பிரிவுகளினதும் கூறுகளினதும் தேவைகளை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறமையுடனும் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிருவாக உதவியையும் அலுவலக இடவசதியையும் பௌதிக வளங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கான சிறப்புப் பணி குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

**பின்வரும் கூறுகள் உள்ளக நிருவாகப் பிரிவின் கீழ் வருகின்றன.**

- உள்ளக செயற்பாட்டுக்கூறு
- பெறுகைக்கூறு
- பொறியியல்கூறு
- கட்டடம் பராமரிப்புக்கூறு
- அஞ்சல் I கூறு
- அஞ்சல் II கூறு
- பிரதான தொலைபேசி பரிமாற்றக்கூறு
- வரவேற்புக்கூறு
- சுவடிக்கூறு
- விமானப்படை களியாட்டக் கூறு
- சனாதிபதி இல்லம் (கொழும்பு கோட்டை, கண்டி, அனுராதபுரம், நுவரேலியா, மகியங்கனை, கதிர்காமம்)
- மொழிபெயர்ப்பாளர்கள் கூறு
- தகவல் தொழினுட்பவியல் கூறு
- போக்குவரத்து

**பிரதான பணிகள் / குறிக்கோள்கள்**

- ➢ சகல பிரிவுகளுக்கும் கூறுகளுக்கும் அலுவலக இடவசதியையும் உபகரணங்களையும் சேவைகளையும் வழங்குதல்.
- ➢ விசேட அரசாங்க வைபவங்களை ஒழுங்குபடுத்துதலும் சொல்லப்பட்ட நோக்கத்திற்காக தேவையான வசதிகளை வழங்குவதில் பிற உள்ளக மற்றும் வெளிவாரித் தரப்புகளுடன் இணைந்து பணியாற்றுதலும்.
- ➢ உடனடியாக நீர்/மின்சார/ தொலைபேசி சிட்டைக் கட்டணங்கள் செலுத்துவதை உறுதிப்படுத்தி தண்டப்பணத்தொகைகள் செலுத்துவதை ஆகக் குறைத்தல்.
- ➢ அளவைச்சபைகளின் அறிக்கைகளில் செய்யப்பட்டுள்ள சிபாரிசுகளின் பிரகாரம் சேதமடைந்த பொருட்களை ஏலத்தில் விடல் / அழித்தல் மூலம் பொருட்களின் அனுப்பு பொருட்பட்டியல்களை தகுதி வாய்ந்த முறையில் பேணிவைத்திருப்பதன் பொருட்டு வருடாந்த அளவைச் சபைகளை நியமித்தலும் அளவைச் சபைகளை நடாத்தலும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும்.
- ➢ சகல பிரிவுகளிலிருந்தும் /கூறுகளிலிருந்தும் பதிவேட்டு அறைக்கு அனுப்பப்படும் கோப்புகளை சேமித்து வைத்திருப்பதற்கு / பேணி வைத்திருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- வெளியே அனுப்புவதற்கும் உள்ளே எடுத்துக் கொள்ளப்படுவதற்குமான தபால்கள் தொடர்பில் முறைமை யானவைகளும் பொறுப்பு வாய்ந்தவைகளுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- கடற்படையின் பொறியியல் பிரிவுகளின் ஒத்துழைப்புடன் செயலகத்தின் சகல கட்டடங்களினதும் பராமரிப்பிற்கும் புதுப்பித்தலுக்கும் முன்னுரிமை வழங்குதல்.

- வருடாந்த பெறுகை நடைமுறையைப் பின்பற்றி மதிப்பீடுகளைத் தயாரித்தலும் வழங்குபவர்களைப் பதிவு செய்தலும் பொருட்களுக்கான தருவித்தல் கட்டளைகளைச் செய்தலும் பொருட்களை வழங்குதலும்.

- சனாதிபதி செயலகத்தினால் தயாரிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள, அமைச்சரவைப் பத்திரங்கள், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மீதான அவதானிப்புரைகள், வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் அனுப்பப்படும் கடிதங்களையும் ஆவணங்களையும் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளில் மொழிபெயர்த்தலும் மும்மொழிகளிலும் சமகால பேச்சு உரை பெயர்ப்புச் சேவை வழங்குதலும்.

- பிரமுகர்களின் மரணச் சடங்கு வைபவங்கள் தொடர்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் சார்பில் செலவினத்தைத் தீர்வு செய்தலையும் உள்ளடக்கி பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

**2017ஆம் ஆண்டில் எய்தப்பட்ட சாதனைகள்**

- உள்ளக செயற்பாட்டுப் பிரிவு

1. விசேட அரசாங்க வைபவங்களை / கூட்டங்களை ஒழுங்குபடுத்தலும் இயைபுள்ள வசதியளித்தலுக்கு தேவையான உள்ளக மற்றும் வெளிவாரித்தரப்புகளை கூட்டிணைத்தல் மூலமாக சிறப்புப் பணிகளைச் சாதித்தல்

- **இராஜதந்திர வைபவங்கள்**

இத்தொடர்பில் இராஜதந்திர வைபவங்களை ஒழுங்கு செய்தலும் தேவையான வசதிகளை வழங்குதலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசேட கடமைகளாகும். பின்வரும் விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்துவதன் மூலம் இப்பிரிவானது மேற்பார்வையையும் பின்னூட்டத்தையும் பேணுகின்ற அதே வேளையில் தேவையான வசதிகளையும் வழங்குகின்றது.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் முதனிலை கூட்டமொன்றை நடாத்துதல்.

- சனாதிபதியின் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் பாதுகாப்பு படைகளுடனும் போக்குவரத்து பொலிசாருடனும் பிறதரப்புகளுடனும் கலந்துரையாடல்களைச் செய்தல்

- தரைப்படை அணிவகுப்பிற்கான விசேட மேடையைத் தயாரித்தலும் சிவப்பு கம்பளங்களை விரித்தலும் கௌரவ அணிவகுப்பு மேற்கொள்வதற்கும் பீரங்கி வெடி முழக்கம் மூலம் மரியாதை செலுத்துத லுக்குமான தயார் செய்தல்.

- நாடுகளின் தலைவர்களின் சந்திப்புகளுக்கும் இருதரப்புக் கலந்துரையாடல்கள் செய்யப்படுவதற்கும் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்வதற்கு வசதிகள் வழங்குதலும்

    - சிற்றுண்டி உபசரிப்புகளையும் அலங்காரங்களையும் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்.

    - விசேட சிற்றுண்டி விருந்தை / அரசாங்க சிற்றுண்டி விருந்தை வழங்குவதற்கான உள்ளக / வெளிவாரித் தரப்பினர்களை கூட்டிணைத்தல்.

    - தேவைப்படும் போது பல்வேறு நிறுவனங்களை கூட்டிணைப்பதற்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

**2017ஆம் ஆண்டில் செயலகத்தில் நடாத்தப்பட்ட இராஜதந்திர வைபவங்கள்**

- 2017.01.07 - இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட இந்தியா ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சரின் வருகை



- 2017.05.11 - இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட இந்தியாவின் பிரதம அமைச்சரின் வருகை



- 2017.05.15 - இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட நேபாள சனாதிபதி அவர்களின் வருகை



- 2017.12.18 - இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட மலேசியா பிரதமர் அவர்களின் வருகை



➢ பிற வைபவங்கள்

இப்பிரிவு பல்வேறு நிறுவனங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பின்வரும் வைபவங்களுக்கு மண்டபங்கள் / இருக்கைகள் / சிற்றுண்டிகள் போன்ற வசதிகளை வழங்கியுள்ளது.

- 2017.01.02ஆந் திகதியன்று சனாதிபதி அலுவலகத்தில் நடாத்தப்பட்ட நிலைபேற்று நிலையான அபிவிருத்தி குறியிலக்கு வைபவப் பிரகடனத்திற்கு வசதி வழங்கியுள்ளது.
- 2017.01.02ஆந் திகதியன்று சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட கோவில்களுக்கான நிதி நன்கொடைகளைப் பங்களிப்பு வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.01.08ஆந்திகதியன்று கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில் 1000 துறவிகளுக்கு வழங்கப்பட்ட மெச்சத்தக்க நற்பணியாகிய அன்னதான வழங்கல் வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.01.08ஆந் திகதியன்று கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்தப்பட்ட "திரசர யுகய தேச சாரக்க எரம்பும" வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.02.04ஆந் திகதியன்று கொழும்பு கோட்டையிலுள்ள சனாதிபதி மாளிகையில் சுதந்திர தினத்தைக் குறிக்குமுகமாக நடாத்தப்பட்ட இராப்போசன விருந்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.02.22அந் திகதியன்று சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட உலக சுகாதார அமைப்பின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இராப்போசன விருந்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.03.20அந் திகதியன்று கொழும்பு நெலும் பொக்குன மகிந்த ராஜபக்ஷ மண்டபத்தில் நடாத்தப்பட்ட தேசிய விருந்து வழங்கல் வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.04.03ஆந் திகதியன்று கலைஞர்களுக்கு சனாதிபதி மாளிகையில் வழங்கப்பட்ட தேநீர் விருந்து வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.04.25ஆந் திகதியன்று கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில் கல்விமான்களுக்கு நடாத்தப்பட்ட இராப்போசன விருந்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.05.04ஆந் திகதியன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்தப்பட்ட கிராம சக்தி மக்கள் இயக்கத்தின் வைபவம் ஆரம்பிக்கப்படுவதற்கு வசதிகளை வழங்கியுள்ளது.





- 2017.05.10ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட அரசாங்க வெசாக் வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.05.21ஆந் திகதியன்று கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில், ஐக்கிய நாடுகள் வெசாக் ஞாபகார்த்த வைபவத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்ட இராப்போசன விருந்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.06.20ஆந் திகதியன்று கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட இப்தார் வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.08.08அந் திகதியன்று கண்டியில் தலதா மாளிகையின் பெரஹெர வைபவம் முடிவுற்றதைக் குறிக்குமுகமாக 2017.08.08ஆந் திகதியன்று கண்டி சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட தலதீர்த்த வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.08.09ஆந் திகதியன்று சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட சர்வதேச தேயிலை மாநாட்டு வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.09.06ஆந் திகதியன்று கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட “நாம் பிள்ளைகளைக் காப்பாற்றுவோம்” என்ற நிலைபேற்று நிலை பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.





- 2017.10.19ஆந் திகதியன்று கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில் கொண்டாடப்பட்ட தீபாவளி பண்டிகைக்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.10.20ஆந் திகதியன்று சுகததாச விளையாட்டு அரங்கில் நடாத்தப்பட்ட கிராம சக்தி மக்கள் இயக்கத்தின் ஆரம்ப விழாவிற்கு வசதிகளை வழங்கியுள்ளது.
- 2017.11.10ஆந் திகதியன்று கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட பௌத்த கூட்டமைப்பின் கூட்டத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.

- 2017.12.19ஆந் திகதி கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட நத்தார் பண்டிகை வைபவத்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.



- 2017.12.20ஆந் திகதியன்று கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில் "பிம்ஸ்ரெக் (BIMSTEC)" விருந்திற்கு வசதிகளை வழங்கியுள்ளது.



➢ நியமனக் கடிதங்கள் வழங்கல் வைபவங்கள் தொடர்பிலான வசதிகளை வழங்கியுள்ளது.

- 2017.01.24ஆந் திகதியன்று சனாதிபதி மாளிகையில் நியமனக்கடிதங்களை சமர்ப்பித்துள்ள நாடுகள் பின்வருமாறு :-
    - மொங்கோலியா
    - லிதுவேனியா
    - பனாமா
    - இந்தியா



- 2017.06.28ஆந் திகதியன்று கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையில் நியமனக் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ள நாடுகள் பின்வருமாறு :-
  - துனிஷியா
  - சீசெல்ஸ்
  - ஸ்பெயின்
  - ஜோர்ஜியா



- 2017.09.11ஆந் திகதியன்று கொழும்புக் கோட்டை சனாதிபதி மாளிகையில் நியமனங்களைச் சமர்ப்பித்துள்ள நாடுகள் பின்வருமாறு :-
  - எஸ்தோனியா
  - பெரு
  - தாய்லாந்து



➢ பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பில் செயலகத்தில் 2017ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 155 கூட்டங்களுக்கு வசதிகளை வழங்கியுள்ளது.

2. பின்வரும் நீர் / மின்சார செலவுச் சிட்டைக் கட்டணங்கள் உடனடியாகத் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

   இப்பிரிவு சனாதிபதி செயலகத்தின் கீழுள்ள 34 கட்டடங்களுக்கான 2017ஆம் ஆண்டிற்கான நீர் செலவு சிட்டைக் கட்டணத்தைத் தீர்வு செய்வதற்காக 296,680,804.13 ரூபாவும் மின்சார செலவுச் சிட்டைக் கட்டணங்களைத் தீர்வு செய்வதற்காக 103,212,952.12 ரூபாவும் செலவு செய்துள்ளது.

3. தொலைபேசிக் கட்டணங்கள் உடனடியாக தீர்வு செய்யப்பட்டுள்ளன.

   புதவி நிலைத்தர உத்தியோகத்தர்களின் தொலைபேசி செலவுச் சிட்டைக் கட்டணங்களைத் தீர்வு செய்வதற்கு 7,288,029.91 ரூபா வினைக் கொண்ட மொத்த பணத்தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.

4. சிறந்த அளவைச்சபை அறிக்கையின் நியதிகளின் பிரகாரம் வருடாந்த பொருட்கள் அளவைச் சபையின் நியமனமும் பொருட்களின் அளவைச் செய்தலும் பொருட்களை ஏலத்திற்கு விடுதல் மற்றும் பொருட்களை அழித்தல் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன.

   - பொருட்களின் அளவையைச் செய்வதற்கு 42 உத்தியோகத்தர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் இந்த அலுவலகத்தினதும் அதன் பிரிவுகள், கூறுகள் மற்றும் கட்டடங்கள் யாவற்றையும் அளவை செய்துள்ளனர்

இது இந்த அலுவலகத்திற்கு 479,960/-ரூபா வருமானத்தை வழங்கியுள்ளது.

5. சனாதிபதி அலுவலகத்திலுள்ள பல்வேறு பிரிவுகளுக்கும் இணைக்கப்பட்டுள்ள 213 உத்தியோகத்தர் களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

6. இந்த மாவட்டத்திற்கு வெளியே நடாத்தப்பட்ட கூட்டங்களில்/வைபவங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு 23,530,039.00 ரூபாவை முற்பணமாக வழங்குவதற்கு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

7. அதிமேதகு சனாதிபதி அவர்களின் சார்பில் 190 பிரமுகர்களின் மரணச் சடங்குகளுக்கு அனுதாபச் செய்திகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கட்டடங்கள் பராமரித்தல் பிரிவு

- சனாதிபதி அலுவலகத்தின் சகல கட்டடங்கள் பராமரிப்பிற்கு 143,846,811.03 ரூபாவைக் கொண்ட பணத்தொகை செலவழிக்கப்பட்டுள்ளதுடன் பழைய கட்டடத்துடன் இணைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தின் நிருமாண வேலை கடற்படையின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- சனாதிபதி அலுவலகத்தின் கீழுள்ள கட்டடங்களினதும் வீடுகளினதும் பழுதுபார்த்தல் / பராமரித்தல் வேலையை கடற்படையின் உதவியுடன் மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## பெறுகைக்கூறு

- 2017ஆம் ஆண்டின் தொடர்பில் பெறுகை நடைமுறையின் கீழ் மதிப்பீடுகளைத் தயாரித்தலையும் வழங்குநர்களை பதிவு செய்தலையும் பொருட்களைத் தருவித்தலுக்கான கட்டளைகளை செய்தலையும் பொருட்களை வழங்குதலையும் இப்பிரிவு மேற்கொள்ளுகின்றது.
- இந்த அலுவலகத்திற்கான பொருட்களையும் சேவைகளையும் சில்லறை பெறுகை நடவடிக்கை களுக்காக 290,852,815.70 ரூபாவையும் பெரிய அளவிலான பெறுகைகளுக்கு 329,539,042.96 ரூபாவையும் செலவழித்து தரமான பெறுகை நடைமுறைக் அமைவாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அஞ்சல் I ஆம் அஞ்சல் II ஆம் பிரிவுகள்

சனாதிபதி அலுவலகத்தின் அஞ்சல் II ஆம் பிரிவில் கடிதங்கள் பின்வருமாறு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதுடன் அவை கிரமமாகவும் உடனடியாகவும் இயைபுள்ள பிரிவுகளுக்கு அனுப்பவும் உடனடியாகவும் இயைபுள்ள பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ● பதிவுத் தபால் | 8652 |
| ● சாதாரண அஞ்சல் | 14633 |
| ● சனாதிபதியின் கூட்டிணைப்பு செயலகப்பிரிவு | 56182 |
| ● கை மூலமாக | 6235 |
| ● பாக்ஸ் (தொலைநகல்) மூலமாக | 5485 |
| ● மொத்தம் | 91,187 |

- சனாதிபதி அலுவலகத்தின் அஞ்சல் I ஆம் பிரிவு 2017ஆம் ஆண்டில் கடிதங்களை கிரமமாக அனுப்பியுள்ளதுடன் அது சனாதிபதி அலுவலகத்தின் கடிதங்களை தகுந்த முறையில் வெளியே அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது

  அங்கு சாதாரண தபாலில் மற்றும் பதிவுத் தபாலில் கடிதங்களை அனுப்புவதற்காக செலவு செய்த முத்திரைக்கான தொகை ரூபா. 3,411,000.00 ஆகும்.

- சுவடிக்கூடம்

  இது சனாதிபதி அலுவலகத்தின் பழைய ஆவணங்களையும் கோப்புகளையும் பராமரித்தலையும் பேணலையும் தகுதிவாய்ந்த முறையில் சேமித்து வைத்தலையும் செய்வதுடன் தேவைப்படும் போது அவற்றை வழங்கும் வேலையையும் செய்கின்றது.

- பொது தொலைபேசி பரிவர்த்தனை மற்றும் வரவேற்புப் பிரிவு

  - சனாதிபதி அலுவலகத்திற்கு வருகைபுரியும் நபர்களை வரவேற்று அவர்களுக்கு தேவையான அறிவுறுத்துரைகளை வழங்குவதுடன் அவர்களை இயைபுள்ள பிரிவிற்கு அனுப்புகின்றது.

  - சனாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகளுக்கு பணிவாகவும் உடனடியாகவும் மறுமொழி பகர்ந்து வினைத்திறமையுள்ள சேவையை வழங்குகின்றது.

  - சனாதிபதி அலுவலகத்தின் உள்ளக உத்தியோகத்தர்களுக்கிடையே தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படுவதற்கு உதவி வழங்குகின்றது.

- விமானப் படையின் களியாட்டக்கூறு

  - இக்கூறு சனாதிபதி அலுவலகத்தில் நடாத்தப்பட்ட சகல வைபவங்களுக்கும் கூட்டங்களுக்கும் உரிய நேரத்தில் மிக ருசியானவைகளும் அந்தரங்கமானவைகளுமான உணவுகள் மற்றும் பானங்கள் வழங்கும் சேவையைப் புரிந்து அதன் மூலம் அரசாங்கத்திற்கு பெரிய பணத் தொகைகளைச் சேமித்துள்ளது.

- மொழிபெயர்ப்பாளர்கள் கூறு

  இப்பிரிவு சனாதிபதி செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச் சரவைப் பத்திரங்கள், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மீதான அவதானிப்புரைகள், வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகள் ஆகியவற்றையும் பல்வேறு நிறுவனங்களினாலும் நபர்களினாலும் சனாதிபதி செயலகத்திற்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட ஏறத்தாழ 850 கடிதங்களுக்கும் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்பை வினைத் திறமையுடன் செய்துள்ளது.

## போக்குவரத்துப் பிரிவு

1. **போக்குவரத்துப்பிரிவின் வகிபாகம்**

   - அதிமேதகு சனாதிபதி அவர்களின் பயன்படுத்தலுக்காகக் கருதப்பட்ட வாகனங்கள் தொடர்பிலான சகல வகையான வேலைகளையும் செய்தல்.

   - நாளாந்த போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.

   - சனாதிபதி செயலகத்தின் உடைமையாகவுள்ள வாகனத் தொகுதிகளின் பராமரிப்பு.

   - சனாதிபதி செயலகத்தின் வாகனத்தொகுதி தொடர்பில் காப்புறுதிச் சான்றிதழ்களையும் வருமான உத்தரவுச் சீட்டுக்களையும் வாகனப் புகைவெளிவிடுதல் பரிசோதனைச் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளுதல்.

   - வீதி விபத்துகளில் சம்பந்தப்பட்ட வாகனங்களின் தொடர்பில் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

- எரிபொருள் பெறுவதற்கான கட்டளைகளை வழங்குதல் மற்றும் நுண்ணாய்வு செய்ததன் பின்னர் கொடுப்பனவிற்காக வாகனங்களின் பழுது பார்த்தல் மற்றும் செப்பனிடுதல் செலவுப்பட்டியல்களை நிதிமுகாமைத்துவ பிரிவிற்கு சமர்ப்பித்தல்.

- எரிபொருள் தருவித்தல் கட்டளைகள் தொடர்பிலான நடப்பு போக்குவரத்து நேர அட்டவணை களையும் எரிபொருள் மீது செய்யப்பட்ட செலவுகளை தக்கமுறையில் நுண்ணாய்வு செய்தல்.

- வாகனங்களின் பொறுப்பேற்றலையும் தீர்வு செய்தலையும் உள்ளடக்கி வாகனங்களினதும் கைமாற்றல்களினதும் இற்றைவரையானவைகளாக்கப்பட்ட அனுப்பு பொருட் பட்டியலை பேணி வைத்திருத்தல்.

- சனாதிபதி செயலகத்தினால் வெற்றிடங்கள் உள்ள பிரிவுகளுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சாரதிகளை இணைத்து வைத்தல்.

- மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் உழைப்புடன் சாரதிகளுக்கும் பதவியினர்களுக்கும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல்.

## 2. பதவியினர்கள்

- போக்குவரத்துப் பிரிவின் பதவியினர்கள் அணியானது அரசாங்க சேவைக்கான புதிய சேராட்களையும் பிற அரசாங்க நிறுவனங்களிலிருந்து இந்த அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களையும் கொண்டுள்ளது. இதன் பிரகாரம் அலுவகப் பதவியணியில் இரண்டு (2) வெற்றிடங்கள் நீங்கலாக சகல வெற்றிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. தேவைப்படும் பயிற்சி வழங்குதல் மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்படுகின்றது. சாரதிகளின் பதவியணியில் கணிசமான வெற்றிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் உள்ளூராட்சித் தேர்தல் - 2018 இற்குப் பின்னர் புதிய ஆட்சேர்ப்புகளைச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

- சாரதிகளின் பதவியணி புதிய சேராட்களையும் பிற அரசாங்க நிறுவனங்களிலிருந்து இந்த அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த சாரதிகளையும் கொண்டுள்ளது. சகல சாரதிகளுக்கும் இலங்கை – ஜேர்மன் தொழிநுட்ப நிறுவகத்தினாலும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையி-னாலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கு தொழிநுட்ப அறிவு மற்றும் வீதி விதிகள் மீது வேலைக்களம் நடாத்தப்பட்டதுடன் கூடுதலாக ஆக்கப்பூர்வமான சிந்தனை மற்றும் மன அழுத்தத்தை கையாளுதல் ஆகிய விடயங்கள் மீதான நிகழ்ச்சித்திட்டங்களும் இலங்கை மன்ற நிறுவனத்தில் நடாத்தப்பட்டுள்ளன. இந்த வேலைக்களங்களின் முடிவில் பங்குபற்றியவர்களுக்கு வழங்கப்பட்ட பின்னூட்டம் மிகவும் உற்சாகத்தை வழங்கியுள்ளதாகக் காணப்பட்டது.

- இதுபோலவே தற்போதுள்ள சாரதிகளின் பதவியணியும் கூட புதிய சேராட்களையும் பிற அரசாங்க நிறுவனங்களிலிருந்து இந்த அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட சாரதிகளையும் கொண்டிருந்தது. சகல சாரதிகளுக்குமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கை – ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவகத்திலும் இலங்கை மன்ற நிறுவகத்திலும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையிலும் நடாத்தப்பட்டுள்ளன. இத்துடன் கூடுதலாக தொழிநுட்ப மற்றும் போக்குவரத்து விதிகள் பற்றிய அறிவு ஆக்கப்பூர்வமான சிந்தனை மற்றும் மன அழுத்தத்தை கையாளுதல் மீதான வேலைக்களங்களும் இலங்கை பவுண்டேசன் நிறுவகத்தில் நடாத்தப்பட்டுள்ளன. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் முடிவில் பெற்றுக்கொள்ளப்பட்ட பங்குபற்றுபவர்கள் பற்றிய பின்னூட்டம் மிகவும் சிறப்பானதாகவிருந்தது.

- இரவுக்கடமையில் ஈடுபடுத்தப்பட்ட சாரதிகளுக்கு வழங்கப்பட்ட இடவசதி போதாததாகவிருந்ததுடன் பகல் நேரத்தில் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு பொருத்தமான ஓய்வறை இல்லாமலிருந்தது. இந்நோக்கத்திற்காக இரண்டு பொருத்தமாக சீராக்கப்பட்ட கொள்கலன்களிலிருந்து ஓரளவிற்கு இடவசதி வழங்கப்பட்டுள்ளது.

- இரண்டு தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்கும் கூட அப்போதைக்கு என்ற அடிப்படையில் கொள்கலனொன்றில் இடவசதி வழங்கப்பட்டுள்ளது.

## 3. சேவைகளை வழங்குதல்

கிடைக்கத்தக்கவைகளாகவிருந்த பௌதிக மற்றும் மனிதவளங்களைப் பயன்படுத்தி போக்குவரத்துப் பிரிவு திருப்திகரமான சேவையை வழங்கக்கூடியதாகவிருந்தது. தற்போது சாரதிகளுக்கான பதவி யணியில் 30 வெற்றிடங்கள் உள்ளனவென்பதுடன் லீவு பெறுவதற்கான அவர்களுடைய கோரிக் கைகள் மீது ஓரளவு கட்டுப்பாட்டை பிரயோகிக்க வேண்டியிருந்தது.

**4. அலுவலகத்திற்கு மெருகூட்டல்**

அலுவலகத்தின் புதுமெருகூட்டல் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சனாதிபதி செயலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியல் பிரிவின் உதவியுடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிருவகத்தினால் வடிவமைக்கப்பட்ட கணனி மென்கலமொன்று நிறுவப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட முறைமைக்கு தரவு பதிவு செய்தலும் அதை பரிசோதனை அடிப்படையொன்றில் பயன்படுத்துதலும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.முகாமைத்துவ பீடத்தினால் தீர்மானம் எடுப்பதற்கும் தினசரிக் கடமைகளைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ள பெருமளவு எழுத்து வேலையின் அளவைக் குறைத்து கடமைகளை கூடுதலான வினைத்திறனுடன் புரிவதற்குமாக தேவைப்படும் அறிக்கைகளைத் துரிதமாகக் கிடைக்குமாறு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**5. வாகனங்களின் பழுதுபார்த்தல்**

- தொழிநுட்ப உத்தியோகத்தர்களினால் வாகனங்களின் தகுந்த பரிசோதனையொன்று செய்யப்பட்டதன் பின்னர் மட்டுமே வாகனங்கள் பழுதுபார்த்தல்களுக்காக அனுப்பப்படும். இதன் மூலம் தேவையற்றவை எனக் காணப்பட்ட பழுதுபார்த்தல்களுக்காக கோரிக்கைகள் மீது ஓரளவு கட்டுப்பாடு பிரயோகிக்கப்பட்டுள்ளது. பழுது பார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் கூட வாகனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் வாகனங்களிலிருந்து அகற்றப்பட்ட உதிரிப்பாகங்கள் எடுக்கப்பட்டு சேமித்து வைக்கப்படுகின்றன.

- சனாதிபதியின் அலுவலகத்தில் பயன்படுத்துகைக்காக அகற்றப்பட்ட வாகனங்களுக்காக தற்போது பதிலீட்டு வாகனங்காளாக புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்படவில்லை. பிற அரசாங்க நிறுவங்களில் திருப்திகரமான நிலமையிலிருந்த வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் சனாதிபதி அலுவலகத்திலுள்ள வாகனத்தொகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

**6. எரிபொருள்களின் நுகர்ச்சி**

பின்வரும் புள்ளி விவரங்களினால் காண்பிக்கப்படுவதன் பிரகாரம் முந்திய ஆண்டில் ஏற்பட்ட எரிபொருள் நுகர்ச்சியளவுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டில் எரிபொருள் நுகர்ச்சியின் அளவை திருப்திகரமான மட்டத்திற்கு வெட்டிக் குறைக்கக் கூடியதாகவிருந்தது.

| ஆண்டு | எரிபொருள் மீது செய்யப்பட்ட செலவினம் (ரூபா) |
|---|---|
| 2015 | 120,000,000.00 |
| 2016 | 140,000,000.00 |
| 2017 | 180,000,000.00 |

(பண உறுதிப்பத்திரங்கள் கொடுப்பனவு செய்யப் படுவதற்காக நிதி முகாமைத்துவப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இப்புள்ளி விவரங்கள் செலவுச் சிட்டைகளுடன் பண உறுதிப்பத்திரங்களின் தொடர்பில் அண்ணளவாகக் கணக்கிடப்பட்டுள்ளன.)

**7. விபத்து உரிமைக்கோரிக்கைகள் மற்றும் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளின் தொடர்பில் எய்தப்பட்ட முன்னேற்றம்**

- விபத்துக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று காணப்படுவதன் நிமித்தம் விபத்துக்கள் தொடர்பில் தகுந்த புலன்விசாரணை மேற்கொள்ளப்படுவதைத் துரிதப்படுத்துவற்கும் விபத்துகளுக்கு பொறுப்பான சாரதிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குமாக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் இரண்டு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளகாப்புறுதி உரிமைக் கோரிக்கைகள் பின்வருமாறு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன (அண்ணளவாகக் கணக்கிடப்பட்டுள்ளன.)

| ஆண்டு | உரிமைக்கோரிக்கை (ரூபா) |
|---|---|
| 2017ஆம் ஆண்டிற்கு முன்னர் இடம்பெற்ற விபத்துகளுக்காக 2017ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட நட்ட ஈடு | 13,000,000.00 |
| 2017ஆம் ஆண்டில் இடம்பெற்ற விபத்துகளுக்கான 2017ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட நட்ட ஈடு | 10,100,000.00 |

- கடந்த சில ஆண்டுகளுக்கான தேறாத காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள் இருந்ததாகவும் கடந்த சில ஆண்டுகளின் தீர்வு செய்யப்படாதவைகளும் (2014ஆம் ஆண்டு அதற்கு முந்திய ஆண்டுகளும்) சனாதிபதியின் செயலாளரின் சார்பில் காசோலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன எனவும் ஆனால் மடுவங்களுக்கான (கராஜ்கள்) கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு தீர்க்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- சனாதிபதியின் செயலாளர் செயலாற்றுகையின் மதிப்பீட்டிலும் சம்பள ஏற்றங்களின் கொடுப்பனவு வழங்குவதிலும் ஓர் கவனஞ் செலுத்தாத வாகன ஓட்டம் ஓர் பிரமாணமாக்கப்பட வேண்டுமென அறிவுறுத்துரை வழங்கியுள்ளார்.

8. **உயர் பாதுகாப்பு வாகனங்கள்**

- திருத்தியமைக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வாகனங்கள் தீர்வு செய்யப்படுவதற்கான அல்லது தனிப்பட்ட சொந்த உபயோகத்திற்காக கருதப்படாத வாகனங்களாகவிருப்பதன் காரணமாக கைமாற்றம் செய்யப்பட முடியாத வாகனங்களாகும். இதுவரை அவ்வாகனங்கள் தொடர்பில் பின்பற்றப்பட்ட முறையியல் என்னவெனில் அவற்றை அழித்து விடுதல் அல்லது

- பொறுப்புரிமையளிக்கப்பட்ட வழமையான வாகனங்களை அகற்றியதன் பின்னர் விதிமுறையான முறையியலின் கீழ் வாகனங்களை விற்பதற்கும் அகற்றுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

9. **வாகனங்களை கைமாற்றம் செய்தல்**

- ஏறத்தாழ 95 வாகனங்களை சிவில் பாதுகாப்புத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் மற்றும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் ஆகிய திணைக்களங்களையும் உள்ளடக்கி 16 அரசாங்க நிறுவனங்களுக்கு கைமாற்றம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

10. **நீதிமன்ற நடவடிக்கைகளில் கட்டுக்காப்பிலுள்ள வாகனங்களின் உடைமையைப் பொறுப்பேற்றல்.**

- நீதிமன்ற நடவடிக்கைகளில் கட்டுக்காப்பிலுமுள்ள வாகனங்களினதும் அத்தகைய மனை யிடங்களில் விபத்துக்கள், துஷ்பிரயோகம், காணாமல் போனதாக கண்டுபிடிக்கப்பட்டு சட்ட விடயங்கள் தீர்வு செய்யப்பட்டவுடன் எடுத்துக்கொள்ளப்பட்ட வாகனங்களினதும் உடைமை.

11. **புதிய கொள்வனவுகள்**

- ஏறத்தாழ 10 பாதுகாப்பு வாகனங்களை கொள்வனவு செய்ய வேண்டிய அவசரத் தேவை இருந்துள்ளதுடன் இக்கோரிக்கையானது மேலதிகச் செயலாளரினால் (உள்ளக நிருவாகம்) கவனத்திற் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **புதிய கருத்திட்டத்திற்கு ஏற்றியிறக்கல் வசதிகளை வழங்குதல்**

- தேவைப்பாடு ஒவ்வொன்றுக்கும் ஏற்ப பிவிதெமு பொலன்னறுவை, அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள், விசேட கருத்திட்டங்கள், தேசிய கமநல தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் போன்ற சனாதிபதி செயலகத்தின் நோக்கெல்லையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களின் கீழுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஏற்றியிறக்கல் வசதிகள் வழங்கப்படுகின்றன.

13. **கணக்காய்வு**

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தில் போக்குவரத்துப் பிரிவிலுள்ள கடமைகளை கூடுதலான திறமையுடனும் தகுதிவாய்ந்த முறையிலும் நிறைவேற்றுதல் மீதான முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது. எய்தப்பட்ட தீர்மானங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் முன்னேற்றம் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

  - ❖ தேசிய உற்பத்திவள விருதைப் பெறும் நோக்குடன் போக்குவரத்து பிரிவு தரமான சுற்று வட்டத்தை ஆரம்பித்தல், தரமான முறையில் கோப்புகளின் தயாரிப்பு மற்றும் தேவையற்ற பொருட்களை அகற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றையும் கூட ஆரம்பித்துள்ளதுடன் இப்பிரிவு எதிர்கால நடவடிக்கைகளுக்கு பங்களிப்பைச் செய்யும்.

# தகவல் தொழினுட்பவியல் கூறு

## முன்னுரை

உள்ளக நிருவாகப் பிரிவின் கீழ் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் கூறுக்கு சனாதிபதி செயலகத்திலும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சகல முகவர் நிலையங்களினதும் கணனிகள், தொலைபேசிகள் மற்றும் பிற தொழினுட்ப உபகரணங்களின் பராமரிப்பு, வலை கடப்பிடங்கள், மென்பொருட்களின் வடிவமைப்பு மற்றும் வலையமைப்பாக்கம் ஆகிய சிறப்புப் பணிகளை மேற்கொள்ளும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

## பிரதான குறிக்கோள்களும் முன்னேற்றமும்

பின்வரும் பணிகளே சனாதிபதி செயலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் கூறுக்கு 2016ஆம் ஆண்டில் குறித்தொதுக்கப்பட்ட பணிகளும் அடையப்பட்ட முன்னேற்றமும் ஆகும்.

1. **சனாதிபதி செலகத்தின் வலையமைப்பு முறைமையை ஒழுங்குறுத்தல்.**

   இந்த குறித்தொதுக்கலின் 60 நூற்று வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.




2. சனாதிபதி செயலகத்தின் வலையமைப்பு முறைமையின் முழுமையான பதிவு

   இக்கருத்திட்டம் 2016ஆம் ஆண்டில் சனாதிபதி செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள “சனாதிபதி செயலகத்திலுள்ள உட்கட்டமைப்பை தரமுயர்த்துதல்” மூலம் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப் பட்டிருந்தது. எனினும் குறித்தொதுக்கப் பணியில் 50 நூற்று வீதம் 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



03. மென்பொருள் முறைமைகளுக்கும் வலை சேவையகத்திற்கும் காப்பு முறைமை நிறுவுதல்

2017ஆம் ஆண்டில் இக்குறித்தொதுக்கப்பட்ட பணியின் 60 நூற்று வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.




04. சார்டாட் வங்கி கட்டடத்தில் அமைந்துள்ள அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவில் முகலை அடிப்படையாகக் கொண்ட சேவையகமொன்றை நிறுவுதல்

இக்குறித்தொதுக்கப்பட்ட பணி 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

05. அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவிற்கு பதிலாள் சேவையகமொன்றை நிறுவுதல்

இக்குறித்தொதுக்கப்பட்ட பணி 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

06. சனாதிபதி செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள சகல முகவர் நிலையங்களினதும் வலையமைப்பு முறைமையின் முழுமையான பதிவு

சனாதிபதி செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள சகல முகவர் நிலையங்களிலும் வலையமைப்பு முறைமையின் முழுமையான பதிவு

இக்குறித்தொதுக்கிய பணியின் 50 நூற்று வீதம் சனாதிபதி செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட “சனாதிபதி செயலகத்திலுள்ள உள்ளகக் கட்டமைப்பின் தரமுயர்த்தல்” கருத்திட்டத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



07. சனாதிபதி செயலகத்தின் முகில் அடிப்படையிலான ஓர் கோப்புச் சேவகரை நிறுவுதல்

இக்கோப்புச் சேவைகள் ஏற்கனவே அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவிற்கும் கொள்கை கூட்டிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவிற்கும் நிறுவப்பட்டுள்ளன. மேற்போந்த வசதி தற்போது சொல்லப்பட்ட பிரிவுகளில் பயன்படுத்தப்படுகின்றன

08. சனாதிபதி செயலகத்தின் உத்தியோகபூர்வ வலைக்கடப்பிடத்தை திருத்துதலும் அதன் தரவை இற்றைவரையானதாக்குதலும்.

இந்த குறித்தொதுக்கப்பட்ட பணியின் 50 நூற்று வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.




09. பொது மக்கள் தொடர்பாடல் பிரிவின் "சனாதிபதிக்கு சொல்லவும்" கருத்திட்டத்தை இற்றை வரையானதாக்குதல்.

"சனாதிபதிக்கு சொல்லவும்" கருத்திட்டத்தினால் செய்யப்பட்ட விசாரணைகளின் அறிக்கைகளை பெற்றுக் கொள்ளுதலும் இந்த முறைமையை பேணி வைத்திருப்பதற்கு உதவி வழங்குதலும்.

10. சனாதிபதி அலுவலகத்திற்கு இணைய அக முறைமையொன்றை நிறுவுதல்.

இந்த குறித்தொதுக்கப்பட்ட பணியின் 50 நூற்று வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



**11. சனாதிபதி செயலகத்துடனும் அதன் இணைக்கப்பட்ட முகவர் நிலையத்துடனும் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு கணனிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்தல்**

சனாதிபதி செயலகத்துடனும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள முகவர் நிலையங்களுடனும் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு கணனிப் பயிற்சியொன்றை ஆரம்பித்தல்.

சனாதிபதி செயலகத்துடனும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள முகவர் நிலையங்களுடனும் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு கணனிப் பணிகள் மீதான அடிப்படை பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் (E-mail) முகவரிகளின் பயன்படுத்துகை மீது பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**12. சனாதிபதி அலுவலகத்தின் பழைய கட்டிடத்திற்கும் புதிய கட்டிடத்திற்கும் முழுமையான Wi-Fi வலயமொன்றை நிறுவுதல்**

இந்த குறித்தொதுக்கப்பட்ட பணியின் 50 நூற்று வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.




**13. சனாதிபதி அலுவலகத்தின் தேசிய போசணைச் செயலகத்திற்கு பல்துறை செயற்பாட்டுத் திட்டமொன்றை நிறுவுதல்**

இக் குறித்தொதுக்கப்பட்ட பணியின் 50 நூற்று வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



14. சனாதிபதி செயலகத்தின் கோப்பு முகாமைத்துவ முறையொன்றை நிறுவுதல்

இக் குறித்தொதுக்கப்பட்ட பணியின் 50 நூற்று வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



# மனிதவள அபிவிருத்திப் பிரிவு

**முன்னுரை**

சனாதிபதி செயலகத்தின் பதவியினர்களின் ஆட்சேர்ப்புகள் / இடமாற்றங்கள் / பதவி உயர்வுகள் / ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு போன்ற தாபன விடயங்களின் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் பதவியினர்களின் உற்பத்தி வளத்தை ஊக்குவித்தலும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

**பொதுக் குறிக்கோள்கள் / பணிகள்**

- சனாதிபதி செயலகத்தின் பதவியினர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவியுயர்வு வழங்கல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகிய பணிகளை இப்பிரிவு செய்கின்றது.
- நி.ஓ 71 இன் கீழ் சனாதிபதி செயலகத்திற்கான பதவிகளை உருவாக்குவதில் தொடர்பிலான விடயங் களையும் இப்பிரிவு மேற்கொள்ளுகின்றது.
- சனாதிபதி செயலகத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதவியினர்களினதும் பிற பதவியினர்களினதும் சொந்த கோப்புக்களை இற்றைவரையானவைகளாக்குதல்.
- சனாதிபதி அலுவலகத்தின் பதவியினர்களின் பாதுகாப்பு அனுமதி வழங்குதல் தொடர்பிலான விடயங்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளின் விவரங்களைத் தயாரித்தலும் இற்றைவரையானவைகளாக்குதலும்.
- சனாதிபதி செயலகத்தின் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை பேணிவைத்திருத்தல்.
- சனாதிபதி செயலகத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதவியினர்களுக்கு உள்நாட்டு / வெளிநாட்டு மற்றும் திறனைக் கட்டியெழுப்புதல் பயிற்சி வழங்குவதற்கு ஒழுங்கு செய்தல்.
- தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்பு கடன்கள், ஆதனக் கடன்கள் மற்றும் இடர்ப்பாட்டுக் கடன்களையும் உள்ளடக்கி கடன்களை வழங்குவதற்கு சிபாரிசு செய்தல் / அங்கீகாரம் வழங்குதல்.
- சனாதிபதி செயலகத்தின் பதவியினர்களுக்கான விடுமுறை புகைவண்டிப் பிரயாண ஆணைச்சீட்டுகள் மற்றும் சலுகை ரீதியிலான புகை வண்டி பருவகால பிரயாணச் சீட்டுகள் தொடர்பிலான விடயங்களை கையாளுதல்.
- அக்கிரஹாரக் காப்புறுதி திட்டத்தின் கீழ் மானியங்கள் வழங்கப்படுவதற்கு சிபாரிசு செய்தல்.
- சனாதிபதி செயலகத்தின் பதவியினர்களுக்கு லீவு தொடர்பில் அங்கீகாரம் வழங்குதல், மேலதிக நேரச் சம்பளங்கள் மற்றும் பிரயாணப்படிகளும் பிற படிகளும் வழங்குதல் தொடர்பிலான விடயங்களை கையாளுதல்.
- சனாதிபதி செயலகத்தின் பதவியினர்களின் உற்பத்தி வளத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விமான நிலைய முடிவிடத்தில் விசேட வசதிகளையும் சிறப்புரிமைகளையும் பெறுவதற்கு உரித்துடைய பதவியினர்களுக்கு அவற்றை வழங்குதல் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விசாக்களுக்கான விண்ணப்பங்களைச் செய்பவர்களுக்கு உத்தியோகபூர்வ கடவுச் சீட்டுகளும் சேவை சான்றிதழ்களும் வழங்கப்படுவதற்கான சிபாரிசைச் செய்தல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படும் வெளிநாடுகளுக்கான விஜயங்களின் போது அவருடன் செல்லும் உத்தியோகத்தர்களுக்கு படிகளின் கொடுப்பனவை மேற்கொள்ளுதல்.
- வரி விதிக்கப்படாத வாகன அனுமதிச் சீட்டுகள் தொடர்பிலான விடயங்களை மேற்கொள்ளுதல்

- நூல் நிலையம் தொடர்பிலான நிருவாக விடயங்களை புரிதல்.
- ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்குதலும் அரசகரும மொழிகள் கொள்கையை நடைமுறைப் படுத்தலும்.
- பதவியினர்களின் வரவு மற்றும் வெளியேறிச் செல்லல் பதிவேட்டை பேணி வைத்திருத்தலும் விரல்ரேகைப் பதிவு குறித்தல் இயந்திரத்தை மேற்பார்வை செய்தலும்.
- சுறுசுறுப்பான கடமை வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள மாதாந்த நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்

## 2017ஆம் ஆண்டில் செயலாற்றுகை

- மீளாய்வுக் காலப்பகுதியில் ஆட்சேர்ப்பு சேவைக்கான அனுமதித்தல்கள், இளைப்பாறல்கள் மற்றும் ஒழுக்காற்று விடயங்களும் செய்யப்பட்டுள்ளன. மீளாய்வுக்காலப் பகுதியில் 28 நியமனங்களும் சேவை அனுமதிப்புகளும் 157 இடமாற்றங்களும் சேவைக்கான விடுவிப்புகளும் 111 அக்ரஹார மருத்துவ செலவுச் சீட்டைகளுக்கான பணமீள் நிரப்பல்களும் செய்யப்பட்டுள்ளன.

### 2017.12.31ஆந் திகதியில் இருந்தவாறான பதவியினர்கள்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி : 1497

சேவையிலுள்ள பதவியினர்கள் : 1039

### 2017.12.31 இல் இருந்தவாறான பதவியினர்களின் வகைப்படுத்தல்

| நிரந்தரம் | தற்காலிகம் | ஒப்பந்தத்தின் மீது | அனுமதிப்பின் பேரில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 691 | 172 | 70 | 106 | 1039 |



**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி**

**வெளிநாட்டுப் பயிற்சி**

2017.01.01ஆந் திகதியிலிருந்து 2017.12.31ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் வெளிநாட்டுப் பயிற்சியில் பங்கு பற்றிய பதவி நிலை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மொத்தமாக 34 ஆகும்.

2017.01.01ஆந் திகதியிலிருந்து 2017.12.31ஆந் திகதிவரையுள்ள காலப்பகுதியில் வெளிநாட்டுக் கருத்தரங்குகள், வேலைக்களங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய பதவி நிலை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மொத்தமாக 15 ஆகும்.

**உள்நாட்டுப் பயிற்சி**

பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / வேலைக்களங்கள் இச்செயலகத்தின் பிரிவு / கூறு ஒவ்வொன்றுடனும் இணைக்கப்பட்டுள்ள முதனிலை மற்றும் இடைநிலை மட்டங்களிலுள்ள பதவியினர்களின் அறிவையும் தேர்ச்சிகளையும் உளச் சார்புகளையும் மேம்படுத்துவதன் பொருட்டு நடாத்தப்பட்டுள்ளன.

| **தொடர் இல.** | **உள்நாட்டில் 2017.01.01 ஆந் திகதியிலிருந்து 2017.12.31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் நடாத்தப்பட்ட பயிற்சி பாடநெறிகள்** | **பயிலுநர்களின் வகுதி** | **மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | சேவைகள் மற்றும் கடமை மீதான விழிப்புணர்வு ஆரம்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் புதிய உத்தியோகத்தர்கள் | 25 |
| 02 | குறைந்த செலவிலான சிக்கன ரீதியான நட்புறவு ரீதியிலான சீமெந்து கலவையை பயன்படுத்தி புதிய நிர்மாண மற்றும் பழுதுபார்த்தல் வேலைகள் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பொறியியல் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் சனாதிபதி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் | 50 |
| 03 | உத்தியோகத்தர்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை சட்டம் மீதான விழிப்புணர்வு விரிவுரை | சனாதிபதி செயலகத்திலுள்ள சகல பதவிநிலை உத்தி யோகத்தர்களும் | 100 |
| 04 | சாரதிகளுக்கு நடாத்தப்பட்ட ஆரம்ப நிகழ்ச்சித் திட்டம் | சனாதிபதி செயலகத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய சாரதிகள் | 25 |
| 05 | பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவிற்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட வகிபாகமும் பொறுப்பும் மீது பதவியணிக்கு விழிப் புணர்வு ஏற்படுத்துதல் | பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் சகல உத்தியோ கத்தர்களுக்கும் | 50 |
| 06 | இடவசதி மேம்பாட்டிற்கு உதவி வழங்கிய மன அழுத்தத்தை கையாளும் முறைகள் மீதான வேலைக்களம் | இடைநிலை மற்றும் முதனிலை உத்தியோகத்தர்களுக்கு | 40 |
| 07 | ஆக்கபூர்வமான சிந்தனை மீதான விரிவுரை | ஊடகப் பிரிவிலுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் | 22 |

| தொடர் இல. | உள்நாட்டில் 2017.01.01 ஆந் திகதியிலிருந்து 2017.12.31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் நடாத்தப்பட்ட பயிற்சி பாடநெறிகள் | பயிலுநர்களின் வகுதி | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 08 | உற்பத்தி வளம் மீதான விரிவுரை | சனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு | 48 |
| 09 | புகைப்படமெடுத்தல் கருவி (கமெரா) மற்றும் வீடியோ புகைப்படமெடுத்தல் மீது சனாதிபதி ஊடகப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வேலைக் களம் | ஊடகப் பிரிவிலுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் | 70 |
| 10 | ஆக்கப்பூர்வமான அரசாங்க சேவைக்கும் வெற்றிகரமான சொந்த வாழ்க்கைக்குமான ஆக்கபூர்வமான சிந்தனை | சகல பதவிநிலை உத்தியோகத் தர்களுக்கும் | 64 |
| 11 | - மேற்படி - | இடை நிலைத் தர உத்தியோ கத்தர்களுக்கு | 250 |
| 12 | ஒப்பீட்டளவிலான நிருவாக முறைகள் மற்றும் செயலாற்றுகை அட்டவணைகள் | பதவி நிலைத் தர உத்தி யோகத்தர்களுக்கு | 75 |
| 13 | சுகாதார நீண்டகால வாழ்க்கைக்கான சிறந்த உணவு பழக்க வழக்கங்கள் | இடைநிலை மற்றும் முதல்நிலை உத்தியோகத்தர்களுக்கு | 125 |

# நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பிரிவு

## அறிமுகம்

நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பிரிவின் ஊடாக அதிமேதகைய சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் நடைமுறையிலுள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் / அமைச்சுக்கள் / சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் தாபன மற்றும் நிருவாக பணிகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இவ்வாறு ஒருங்கிணைக்கப்படும் நிறுவனங்களுக்கு மேலதிகமாக ஏதேனும் அமைச்சொன்றின் கீழ் உள்ளடக்கப்படாத திணைக்களங்களின் தாபன மற்றும் நிருவாகப் பணிகள் இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட அலுவலக பணிகள் நிறுவனங்கள் ஒவ்வொன்று சார்பிலும் வெவ்வேறாக இணைப்பு IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரதான நோக்கங்கள்

- அதிமேதகைய சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் நிலவும் அமைச்சுக்களின் ஒருங்கிணைப்பு பணிகளை தாமதமின்றி மேற்கொள்ளல்.
- அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு வசதிகளை செய்தலும் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளலும்.
- சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள், குழுக்கள் மற்றும் செயலணிகள் ஆகியவற்றின் கொள்கை, நிறுவன மற்றும் நிருவாக பணிகள் சம்பந்தமாக கிடைக்கப் பெறும் கடிதங்களுக்கு துரிதமாக பதில் வழங்குதல்.
- அதிமேதகைய சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் தாபன, நிருவாக மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல்.
- அதிமேதகைய சனாதிபதி அவர்களின் சார்பில் மாண்புமிகு பிரதம அமைச்சரினால் வழங்கப்பட வேண்டிய சகல பாராளுமன்ற வினாக்கள் சார்பிலும் உரிய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும பிரிவு-களை ஒருங்கிணைத்து பதில் வழங்குதல்.
- அதிமேதகைய சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் நிலவும் அமைச்சுக்களினதும் (அதிமேதகைய சனாதிபதி அவர்களின் செய்யப்படும் நியமனங்கள் தவிர) அமைச்சுக்களின் கீழ் எடுக்கப்படாத சுயாதீன நிறுவனங்களினதும் வெளிநாட்டு லீவுகள் மற்றும் நாட்டிலிருந்து செல்வதற்கு உரியதான பணிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- விசேட ஆட்களுக்கு இராஜதந்திர உரிமப்பத்திரங்களை வழங்குதலும் இரட்டைக் குடியுரிமை வழங்கு வதற்குரிய பணிகளும்.

### 2017 ஆம் ஆண்டில் பெற்ற வெற்றிகள்

| நிறுவனம் | நிறைவேற்றப்பட்ட பணிகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| அதிமேதகைய சனாதிபதி அவர்கள் அமைச்சர் பதவி வகிக்கும் அமைச்சுக்களில் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல். | | |
| பாதுகாப்பு அமைச்சு | அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவித்தல் மற்றும் நானாவிதமானவை | 20 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவித்தல் மற்றும் நானாவிதமானவை | 15 |
| தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு | நானாவிதமானவை | 2 |

| நிறுவனம் | நிறைவேற்றப்பட்ட பணிகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல் | | |
| தேர்தல் ஆணைக்குழு | வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள் | 21 |
| | தாபனப் பணிகள் | 09 |
| | நானாவிதமானவை | 15 |
| பகிரங்கசேவை ஆணைக்குழு | வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள் | 05 |
| | பல்வேறுபட்ட கோரிக்கைகள் | 04 |
| தேசிய பொலிசு ஆணைக்குழு | 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | |
| | பல்வேறுபட்ட கோரிக்கைகள் | 06 |
| கணக்காய்வு சேவை ஆணைக்குழு | தாபனப் பணிகள் | 02 |
| இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | தாபனப் பணிகள் | 16 |
| | பொதுமக்களின் முறைப்பாடுகள் | 05 |
| | வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள் | 16 |
| | கட்டடமொன்றைக் கொள்வனவு செய்தல் | 04 |
| | ஆட்சேர்ப்புத் திட்டத்தை அங்கீகரித்தல் | 24 |
| | நானாவிதமானவை | 13 |
| இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த் துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள் | 19 |
| | நானாவிதமானவை | 17 |
| நிதி ஆணைக்குழு | தாபனப் பணிகள் | 13 |
| | அலுவலக கட்டடத் தொகுதியொன்றை நிருமாணித்தல் | 02 |
| | வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள் | 08 |
| | நானாவிதமானவை | 08 |
| | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | |
| எல்லை நிர்ணய ஆணைக்குழு | தாபனப் பணிகள் | 06 |
| | நானாவிதமானவை | 06 |
| தேசிய பெறுகை ஆணைக்குழு | தாபனப் பணிகள் | 08 |
| அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுக்கள், சனாதிபதி செயலணிகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல் | | |



18 - CM 26894

| நிறுவனம் | நிறைவேற்றப்பட்ட பணிகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| அமைச்சரவை அலுவலகம் | வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள் | 07 |
| கணக்காய்வுத் திணைக்களம் | வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள் | 143 |
| | தாபனப் பணிகள் | 23 |
| நீதிச் சேவைகள் ஆணைக்குழு | தாபனப் பணிகள் | 03 |
| | ஆண்டறிக்கைகள் | 06 |
| தேசிய சமாதான மற்றும் நல்லிணக்கப் பணியகம் | நானாவிதமானவை | 06 |
| தேசிய கல்வி ஆணைக்குழு | தாபனப் பணிகள் | 20 |
| | நானாவிதமானவை | 11 |
| | சலுகை அடிப்படையில் வாகன உரிமப்பத்திரங்களை வழங்குதல் | 04 |
| தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழு | தாபனப் பணிகள் | 04 |
| | வெளிநாட்டு லீவுகள் | 02 |
| தகவல் அறியும் ஆணைக்குழு | தாபனப் பணிகள் | 93 |
| பாரிய முறைக்கேடுகள், ஊழல், அரசாங்க வளங்கள், சிறப்புரிமைகள், அதிகாரங்கள் என்பவற்றை முறைக்கேடாக பயன்படுத்துதல் சம்பந்தமாக புலனாய்வு செய்யும் சனாதிபதி விசாரணை ஆணைக்குழு | பற்றுச் சீட்டுக்களைத் தீர்த்தல் | 117 |
| | தாபனப் பணிகள் | 25 |
| | நானாவிதமானவை | 08 |
| அரசாங்க சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்ளல் பற்றிய சனாதிபதி செயலணி | தாபனப் பணிகள் | 49 |
| இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு | வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள் | 85 |
| | விசா வழங்குதலும் அங்கீகரித்தலும் | 100 |
| | தாபனப் பணிகள் | 64 |
| | நானாவித பணிகள் | 70 |
| இலங்கை மன்றம் | வெளிநாட்டு லீவு சம்பந்தமான பணிகள் | 28 |
| | தாபனப் பணிகள் | 18 |
| நிருவாகத்துக்கான மேன்முறையீட்டு நியாயச் சபை | தாபனப் பணிகள் | 14 |
| | ஆண்டறிக்கைகள் | 03 |
| எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மன்றம் | தாபனப் பணிகள் | 11 |
| | பல்வேறுபட்ட கோரிக்கைகள் | 04 |
| நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | தாபனப் பணிகள் | 10 |
| | நடைமுறைப்படுத்தப்படாத சிபாரிசுகள் | 08 |

| நிறுவனம் | நிறைவேற்றப்பட்ட பணிகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையம் | தாபனப் பணிகள் | 22 |
| தாமரை தடாக மஹிந்த ராஜபக்ஷ அரங்காட்ட மண்டபம் | பராமரிப்பு பணிகள் | 155 |
| | மின்சார பட்டியலைத் தீர்த்து வைத்தல் | 22 |
| | நீர்ப் பட்டியலைத் தீர்த்து வைத்தல் | 26 |
| | தொலைபேசி மற்றும் இணையப் பட்டியலைத் தீர்த்து வைத்தல் | 13 |
| | பத்திரிகை பற்றுச் சீட்டுக்களைத் தீர்த்து வைத்தல் | 12 |
| | மண்டபத்தை ஒதுக்கிக் கொள்ளல் | 36 |
| | சுத்திகரிப்பு பணிகள் சம்பந்தமான கடிதங்கள் | 16 |
| | பெறுகைக் குழுக்களை நியமித்தல் | 48 |
| | சிறு கட்டுநிதி | 45 |
| | பல்வேறுபட்ட பணிகள் | 142 |
| | பதவியணியினர் சம்பந்தமான பிரச்சினைகள் | 20 |
| | கட்டடப் பணிகள் | 07 |
| தாமரைக் கோபுரம் | பல்வேறுபட்ட பணிகள் | 11 |
| திறைசேரி பிணைமுறை வழங்கல் தொடர்பில் பரிசீலனை செய்து அறிக்கையிடுவதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழு | தாபனப் பணிகள்<br>பல்வேறுபட்ட பணிகள் | 61<br>03 |
| வரையறுக்கப்பட்ட ஐக்கிய பத்திரிகை கம்பனியை மேம்படுத்துவது சம்பந்தமாக ஆராயும் சனாதிபதி குழு | தாபனப் பணிகள்<br>பல்வேறுபட்ட பணிகள் | 07<br>14 |
| 2017 ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி மீதொட்டமுல்ல பிரதேசத்தில் குப்பைமேடு சரிந்து விழுந்தமையினால் ஏற்பட்ட சேதம் தொடர்பில் ஆராயும் குழு | தாபனப் பணிகள்<br>பல்வேறுபட்ட பணிகள் | 38<br>21 |
| திறமுறை தொழில்முயற்சி முகாமைத்துவ நிறுவனம் | தாபனப் பணிகள் | 09 |
| சிரேட்ட அமைச்சர்கள் அலுவலகம் | தாபனப் பணிகள் | 11 |
| Indian Ocean Marine Affairs Co-Operation நிறுவனம் | தாபனப் பணிகள் | 29 |
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம் | தாபனப் பணிகள்<br>பல்வேறுபட்ட பணிகள் | 18<br>10 |
| பல்வேறுபட்ட பணிகள் | | |
| பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகளை பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் | | 14 |
| பாராளுமன்ற அலுவல்கள் சம்பந்தமான நானாவித பணிகள் | | 10 |
| இராஜதந்திர உரிமப்பத்திரங்களை வழங்குதல் | | 05 |
| இலங்கை பாராளுமன்ற உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு லீவு | | 01 |

# நிதி முகாமைத்துவப் பிரிவு

**அறிமுகம்**

சனாதிபதி செயலகத்திற்குரிய நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள் யாவற்றையும் நிறைவேற்றுதல்.

**பொது நோக்கம்**

- நிரந்தர, தற்காலிக, அமய, ஒப்பந்த மற்றும் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளங்கள், படிகள் மற்றும் ஊதியங்களை வழங்குதல்.
- உத்தியோகத்தர்களின் மேலதிக வேலைநேரக் கொடுப்பனவுகளையும் பிரயாணச் செலவு கொடுப்பனவு களையும் வழங்குதல்.
- சனாதிபதி செயலகத்துக்கான சேவைகள் மற்றும் வழங்குகைகளுக்குரியதான கொடுப்பனவுகளைச் செய்தல்.
- மாதாந்த கணக்குப் பொழிப்புகள் மற்றும் வங்கி ஒப்பீடுகளைத் தயாரித்தலும் திறைசேரிக்குச் சமர்ப்பித்தலும்.
- வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கினைத் தயாரித்தலும் திறைசேரிக்குச் சமர்ப்பித்தலும்.
- வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தலும் திறைசேரிக்குச் சமர்ப்பித்தலும்.
- வரவுசெலவுத் திட்ட குழுநிலைக்குரிய பணிகள்.
- அலுவலக கணக்குகளை திறைசேரி கணக்குகளுடன் ஒப்பிடுதல்.
- பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு நிதி ஏற்பாடுகளை விடுவித்தல்.

**2017 ஆம் ஆண்டில் பெற்ற வெற்றிகள்**

2017 ஆம் ஆண்டுக்கான மொத்த நிதி ஏற்பாடுகளும் மொத்த செலவுகளும்

| விபரம் | மீண்டுவரும் ரூ.மி. | மூலதனம் ரூ.மி. |
|---|---|---|
| மொத்த நிதி ஏற்பாடு | 3,647 | 6,659 |
| மொத்த செலவு | 3,240 | 4,677 |



2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கான மொத்த செலவின் ஒப்பீடு

| ஆண்டு | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|
| மீண்டுவரும் | 2,116 | 2,081 | 3,240 |
| மூலதனம் | 1,191 | 4,779 | 4,677 |



# அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட அலுவல்கள் பிரிவு

### அறிமுகம்

அரசியலமைப்பின் மூலமும் பல்வேறுபட்ட சட்டங்கள் மூலமும் அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் நடைமுறைப்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்தாசையினை வழங்குதல்.

### பிரதான நோக்கம்

மேற்போந்த தத்துவங்களையும் பொறுப்புகளையும் நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வினைத்திறனுடனும் தாமதமின்றியும் நிறைவேற்றுதல்.

### 2017 ஆம் ஆண்டில் பெற்ற வெற்றிகள்

| I. அரசியலமைப்பின் மூலமும் பிற நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட பதவிகளுக்கான நியமனங்கள் | |
|---|---|
| ● அமைச்சரவை அமைச்சர்கள் | 01 |
| ● இராஜாங்க அமைச்சர்கள் | 04 |
| ● மாகாண ஆளுநர்கள் | 01 |
| ● உயர் நீதிமன்ற நீதிபதிகள் | 01 |
| ● மேன்முறையீட்டு நீதிபதிகள் | 03 |
| ● மேல் நீதிமன்ற நீதிபதிகள் | 06 |
| ● நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் | 01 |
| ● சனாதிபதி சட்டத்தரணிகள் | 29 |
| ● அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் | 02 |
| ● அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் (வெற்றிடமான உறுப்பினர் பதவிகள் சார்பில்) | 01 |
| ● தகவல் அறிந்துகொள்ளும் உரிமை பற்றிய ஆணைக்குழு உறுப்பினர்கள் (வெற்றிடமான உறுப்பினர் சார்பில்) | 01 |
| ● இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் | 01 |
| ● அமைச்சுக்களின் செயலாளர்கள் | |
| இளைப்பாறியதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்கள் | 12 |
| இடமாற்றம் காரணமாக செய்யப்பட்ட நியமனங்கள் | 22 |
| ● மாகாணங்களின் பிரதான செயலாளர்கள் | 03 |
| ● வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஆயுட்கால சிறைத் தண்டனையாக மாற்றுதல் | 60 |
| வெசாக் விழாவினை முன்னிட்டு சானதிபதி மன்னிப்பு வழங்குதல் | வழங்கப்பட வில்லை |
| சனாதிபதி அவர்களின் 02 ஆவது பதவியேற்பு விழாவினை முன்னிட்டு சனாதிபதி மன்னிப்பு வழங்குதல் | வழங்கப்பட வில்லை |
| ● படைக்கலம் தாங்கிய இராணுவ தலைவர்கள் | |
| பாதுகாப்பு பதவியணி பிரதானி | 02 |
| இராணுவத் தளபதி | 01 |
| கடற்படைத் தளபதி | 02 |

| | |
|---|---|
| ● பல்கலைக்கழக வேந்தர்கள் | 05 |
| ● பல்கலைக்கழக துணைவேந்தர்கள் | 09 |
| ● இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் | 01 |
| ● இலங்கை மன்ற நிறுவனத்தின் உறுப்பினர்கள் | 14 |
| ● உதவி பொது ஒப்பந்த உடன்படிக்கை பதிவாளர் | 01 |
| ● சாரணர் விசேட ஆணையாளர் | 01 |
| ● சாரணர் மாவட்ட ஆணையாளர்கள் | 05 |
| ● தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உறுப்பினர்கள் | 03 |
| ● முதியோர்களுக்கான தேசிய சபையின் உறுப்பினர்கள் | 16 |
| ● வலதுகுறைந்தோர்களுக்கான தேசிய சபையின் உறுப்பினர்கள் | 01 |
| ● வரையறுக்கப்பட்ட ஐக்கிய பத்திரிகை கம்பனியை மேம்படுத்துவது சம்பந்தமாக ஆராயும் குழுவின் உறுப்பினர்கள் | 04 |
| ● சிறுவர் உரிமைகள் பற்றி தேசிய செயற்பாட்டுக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமித்தல் | 06 |
| ● இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் சபையை நியமித்தல் | 05 |
| ● மாகாண சபை தேர்தல் எல்லை நிர்ணயக் குழுவை நியமித்தல் | 05 |
| ● இலங்கை கொள்கை கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவ சபையை நியமித்தல் | 01 |
| ● புத்தசாசன நிதியத்தின் ஆலோசகர் குழுவுக்கு உறுப்பினர்களை நியமித்தல் | 05 |
| ● மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்தல் | 11 |
| ● தகவல் அறிந்துகொள்ளும் உரிமை பற்றிய ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமித்தல் | 01 |
| II. காணி உறுதிகளும் நீண்டகால குத்தகை உறுதிகளும் | |
| ● நீண்டகால குத்தகை உறுதிகளை வழங்குதல் | 169 |
| ● அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளுக்கு கொடைப் பத்திரங்களை வழங்குதல் | 373 |
| ● ”ரணவிரு”உறுதிகளை வழங்குதல் | 13 |
| ● சுனாமி கொடைப் பத்திரங்களை வழங்குதல் | 607 |
| ● விகாரைகளுக்கான கொடைப்பத்திரங்கள் | 13 |
| ● இலங்கை முதலீட்டுச் சபைக்கு காணிகளை வழங்குதல் | 02 |
| ● நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணிகளை உடைமையாக்குதல் | 09 |
| ● வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணிகளை உடைமையாக்குதல் | 16 |
| ● மாற்றுக் காணிகளை வழங்குதல் | 18 |
| ● மகாவலி குத்தகை உறுதிகள் | 45 |
| ● மகாவலி கொடைப்பத்திரங்களை வழங்குதல் (அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகள் சார்பில்) | 80 |
| ● மகாவலி கொடைப்பத்திரங்களை வழங்குதல் (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ்) | 7822 |
| ● மகாவலி விகாரைகள் | 32 |
| ● புதிய ரண்பிம கொடைப்பத்திரங்கள் | 7437 |
| ● அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஊடாக இரத்துச் செய்தல் | 76 |

| | |
|---|---|
| ● அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவினை நீக்கி 4 (3) ஆம் பிரிவின் ஊடாக புதிய கொடைப் பத்திரங்களை வழங்குதல் | 1102 |
| ● அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவினை கீழ் அரசாங்கத்திற்கு பொறுப்பேற்றுள்ள கொடைப்பத்திரங்கள் சார்பில் புதிய கொடைப்பத்திரங்களை தயாரித்தல் | 95 |
| ● நடுத்தர வகுப்பினருக்கான காணிகள் | 26 |
| ● அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவை நீக்குதல் | 28 |
| III. கொள்வனவு மேன்முறையீட்டுச் சபை | |
| ● கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக் கூட்டங்கள் | 90 |
| IV. இராணுவ வீரர்களுக்கு வீரபதக்கம் வழங்குதல் | 5330 |
| V. முப்படைக்கும் ஆணைப்பத்திரங்களை வழங்குதல் | 511 |
| VI. ADC அழைத்தல் | 29 |
| VII. அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளினதும் உத்தியோகத்தர்களினதும் வெளிநாட்டு லீவு சார்பில் அங்கீகாரம் வழங்குதல் | 807 |
| VIII. சட்டமூலங்கள் பற்றி மாகாண சபைகளின் கருத்துக்களை கோருதல் | 02 |
| IX. அமைச்சரவை குறிப்புகள், பத்திரங்கள் மற்றும் அவதானிப்புரைகளைச் சமர்ப்பித்தல் | |
| அமைச்சரவைக் குறிப்பு | 05 |
| அமைச்சரவைப் பத்திரங்கள் | 02 |
| X. 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுதல் (பெற்றோலியம் / புகையிரத சேவை) | 02 |
| XI. (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுதல் (கழிவுகள் அப்புறப்படுத்துதல்) | 01 |
| XII. விடயங்கள் மற்றும் பணிகளின் திருத்தம் | 07 |

# கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு

## அறிமுகம்

அமைச்சுக்கள், திணைக்களங்கள் அடங்கலாக அரசாங்க நிறுவனங்கள் அதேபோன்று மாவட்ட மற்றும் மாகாண மட்டத்திலான நிருவாக அலகுகளுடன் ஒருங்கிணைந்து அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வு மற்றும் போசாக்கிற்கான பல்துறை செயற்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது இந்தப் பிரிவின் பொறுப்பாகும்.

## பிரதான நோக்கங்கள்

- கொள்கை வகுத்தலை இலகுபடுத்துதலும் ஒருங்கிணைத்தலும்.
- மாவட்ட அபிவிருத்தி பணிகளை "மைத்திரி நிருவாகம் - நிலைபேறுடைய நாடு" என்பதற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை உறுதிசெய்தல்.
- " வளர்ச்சி மற்றும் பொறுப்புடன் கூடிய அரசாங்கத்துறையினை "மைத்திரி நிருவாகம் - நிலைபேறுடைய நாடு" என்னும் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய அமைச்சுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு.
- அபிவிருத்தி கருத்திட்டங்களினதும் நிகழ்ச்சித்திட்டங்களினதும் மேற்பார்வை மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பணிகள்.
- சமூக, பொருளாதார மற்றும் கலாசார பிரச்சினைகள் மற்றும் சமூகத் தேவைகள் தொடர்பில் ஆராய்தல்.
- கொள்கை வகுப்பதற்குத் தேவையான தரவுகள் மற்றும் தகவல்களை திரட்டுதல், புலனாய்வு செய்தல் மற்றும் தேவைக்கேற்றவாறு அறிக்கைகளை வழங்குதல்.
- போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான சகல தரப்பினர்களுக்குமிடையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள், நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்தாசை நல்குதல், இதன் பிரதான நோக்கமாவது ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கிடையே உயரக் குறைவு மற்றும் எடை குறைவு என்பவற்றை 40 சதவீதத்தால் குறைத்தல் உடல் மெலிவடைவதை 5 வீதம் வரை குறைத்தல் அதேபோன்று அதிக எடைகொண்ட குழந்தைகளின் நூற்றுவீதம் மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்தல். குறைந்த எடையுடை குழந்தை பேற்றையும் பெண்களுக்கிடையில் குறைந்த எடை மற்றும் கூடிய எடை என்பவற்றின் நிலவும் மட்டங்களிலிருந்து 30 சதவீதம் வரை குறைத்தல். மந்த போஷாக்கு நிலவும் மட்டத்திலிருந்து அதனை 50 சதவீதத்தால் குறைத்தல்.

## 2017 ஆம் ஆண்டில் அதிமேதகைய சனாதிபதி அவர்களினதும் சனாதிபதி செயலாளரினதும் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் மேற்போந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்தப் பிரிவினால் ஒழுங்கு செய்யப் பட்ட கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

| விடயம் | கூட்டம் / செயற்பாடுகள் |
|---|---|
| அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் | 36 |
| சனாதிபதி செயலாளரின் தலைமையில் | 64 |
| சனாதிபதி மேலதிக செயலாளரின் தலைமையில் | 13 |
| சனாதிபதி சிரேட்ட உதவிச் செயலாளரின் தலைமையில் | 01 |
| பிற | 01 |
| மொத்தம் | 115 |

**அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்க நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு**

**01. புனர்வாழ்வளிக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களை தொழிற்பயிற்சிகளுக்காக ஈடுபடுத்துதல் - 2017.01.05**

சனாதிபதி செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்ட இந்த கலந்துரையாடலில் புனர்வாழ்வளிக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களுக்கு தொழிற் பயிற்சி அளிப்பதற்குத் தேசிய திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும் அது தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிய தரப்புகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**02. தொல்பொருட்கள் உள்ள இடங்கள் மற்றும் தொல்பொருளின் பாதுகாப்பு பற்றிய விசேட கலந்துரையாடல் - 2017.01.24**

அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் நாட்டிலுள்ள தொல்பொருட்கள் உள்ள இடங்கள் மற்றும் தொல்பொருள்களின் பாதுகாப்பு தொடர்பில் உரிய தரப்பினர்களுக்கு விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இந்தப் பிரிவானது ஆண்டு முழுவதும் இது சம்பந்தமாக தொடர் பணிகளையும் மேற்கொண்டது.



**03. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள் குடியேற்றம் தொடர்பிலான முன்னேற்ற மீளாய்வு - 2017.02.17, 2017.08.15**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல் நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துதல் தொடர்பில் அதிமேதகைய சனாதிபதி அவர்களின் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதற்கமைவாக, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்ட நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களை துரிதமா மீளக் குடியமர்த்துவதனை பிரதான குறியிலக்காகக் கொண்டு அதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் செயற்பாடுகள் சனாதிபதி செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இதன் முன்னேற்றமானது மாதாந்தம் சனாதிபதியின் செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டதோடு, காலாண்டு ரீதியில் உரிய உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டு கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

**04. அத்தியாவசிய பொருட்களினதும் அரிசியினதும் விலை அதிகரிப்பு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் - 2017.02.13**

சந்தையில் அத்தியாவசிய பொருட்களினதும் அரிசியினதும் விலை அதிகரித்துள்ளமை பற்றி அதிமேதகைய சானதிபதி அவர்களின் தலைமையில் உரிய சகல தரப்பினர்களுடன் 04 சுற்று கலந்துரை யாடல்கள் நடாத்தப்பட்டன.

இங்கு அரசி விலை உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துதல் உட்பட அரிசி இறக்குமதி செய்வது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டதோடு, உரிய கூட்டங்களை நடாத்துதல், ஒருங்கிணைத்தல் அதேபோன்று இது தொடர்பில் ஆண்டு முழுவதும் காலத்துக்கு காலம் தொடர் நடவடிக்கைகளை எடுத்தலும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.



05. **Little Hearts** கருத்திட்டம் - 2017.02.28

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட இந்த கலந்துரையாடலின் போது Little Hearts கருத்திட்டத்தின் கீழ் பொரள்லை ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் இருதயநோய் குழந்தைகள் சார்பில் ஆரம்பிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள புதிய தீவிர சிகிச்சைப் பிரிவினை நிருமாணிப்பது சம்பந்தமாக இலங்கை சிறுவர் நோய் நிபுணத்துவ மருத்துவர்களின் சங்கத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

06. கமத்தொழில் பயிர்களின் விலைகளை நிலையாக பேணுவது தொடர்பிலான கலந்துரையாடல் - 2017.03.02

கமத்தொழில் துறைகளுக்குரிய பருவகால பயிர்களின் அறுவடை பெறும் காலப்பகுதியில் விலையினை நிலையாக பேணுவது தொடர்பில் சனாதிபதியின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட தொழினுட்பக் குழுவின் அறிக்கையிலுள்ள சிபாரிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இந்தக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

07. இலங்கை இராணுவத்தினரினால் கண்டுபிடிக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ. கட்டுப்பாட்டில் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தை இலங்கை மத்திய வங்கிக்கு ஒப்படைத்தல்

இலங்கை இராணுவத்தினரினால் கண்டுபிடிக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ. கட்டுப்பாட்டில் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தை இலங்கை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கும் செயற்பாடு சம்பந்தமாக சனாதிபதியின் செயலாளரின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. உரிய செயற்பாட்டின் மேற்பார்வைக்காக இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட மேற்பார்வைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக தற்போது பாதுகாப்பு அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதோடு, இதற்கான தொடர் கூட்டங்களும் சனாதிபதி செயலகத்தினால் நடாத்தப்பட்டன.

08. குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தர்களின் தொழில்சார் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல் - 2017.05.16

பல ஆண்டுகளாக குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தர்கள் முகங்கொடுத்த அவர்களுடைய தொழில்சார் பிரச்சினைகள் அதிமேதகைய சனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு இதற்கமைவாக, இனங்காணப்பட்ட தொழில்சார் விடயங்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.



09. கண்டி தலதா மாளிகை பிரதேசம் சார்ந்த வரலாற்று சிறப்புமிக்க தேவாலயங்களின் செயற்பாடு - 2017.06.14

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் கண்டி தலதா மாளிகை பிரதேசம் சார்ந்த வரலாற்று சிறப்புமிக்க தேவாலயங்களின செயற்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. இதன் போது பெரஹராக்கள் சார்பில் யானைகளை தேவையான அளவு, பஸ்நாயக்க நிலமேக்களுக்கு பாதுகாப்பு வழங்குதல், நாத தேவாலயத்திற்குச் சொந்தமான காணி, புனரமைப்புப் பணிகள் சார்பில் மத்திய கலாசார நிலையத்தின் ஊடாக நிதி வழங்குதல் போன்ற விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

**10. இலங்கை திட்டமிடல் சேவையின் மிகையாள் அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் தொழில் மற்றும் கடமை ரீதியிலான பிரச்சினைகள் பற்றிய விசேட கலந்துரையாடல் - 2017.02.20**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலிருந்து மிகையாள் அடிப்படையில் இலங்கை திட்டமிடல் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு 2009.06.22 ஆம் திகதியிலிருந்து உள்ளீர்க்கப்பட்ட 268 உத்தியோகத்தர்களின் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் சனாதிபதியின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்டது. இந்த உத்தியோகத்தர்கள் அனைவரினதும் தகவல்கள் பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு வழங்குவதற்கும் அதன் பின்னர், இந்த அமைச்சினால் உரிய கோரிக்கை சம்பந்தமாக கொள்கைத் தீர்மானமொன்றை எடுப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டது.

**11. வட மாகாண தன்னார்வ சுகாதார ஊழியர்களின் சேவையை நிரந்தரமாக்குவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் - 2017.07.26**

சனாதிபதியின் செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்ட இந்த கலந்துரையாடலின் போது வட மாகாண தன்னார்வ சுகாதார ஊழியர்களின் சேவையை நிரந்தரமாக்குவது சம்பந்தமாக நிலவும் சட்ட ஏற்பாடுகளின் கீழ் எடுக்கக்கூடிய தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்கு உரிய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**12. கிறிஸ்தவ அலுவலகள் பற்றிய குழுக்கூட்டம் - 2017.07.28**

மதம் சார்ந்த ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்காக கிறிஸ்தவ சமயம் சம்பந்தான கல்வித்துறை மற்றும் கத்தோலிக்க மதவழிபாட்டு தலங்கள் சார்ந்த காணிகள் போன்ற விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவைக் கூட்டுதல், அதன் ஒருங்கிணைப்பு உட்பட தொடர் நடவடிக்கைகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**13. உள்நாட்டு ஓட்டு உற்பத்தியாளர்களினதும் தோல்பொருள் உற்பத்தியாளர்களினதும் சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் - 2017.09.11**

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் உள்நாட்டு ஓட்டு உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தினதும் உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்களின் சங்கத்தினதும் பிரதிநிதிகளுடன் அவர்கள் முகங்கொடுத்துள்ள தற்போதைய நிலைமை சம்பந்தமாக கலந்துடையாடப்பட்டது. இதன்போது இந்தக் கைத்தொழிலாளர்களின் மேம்பாட்டுக்குத் தேவையான ஒத்தாசையை வழங்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**14. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் - 2017.09.13**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமானது அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் சனாதிபதி செயலகத்தில் நடாத்தப்பட்டதோடு, இங்கு அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.



**15. பத்தேகம நகர அபிவிருத்தி - 2017.09.28**

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் பத்தேகம நகர அபிவிருத்தி திட்டம் சம்பந்தமான பணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இங்கு எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள அபிவிருத்தி பணிகள், மாற்று வீதிகளை நிருமாணித்தல், வசுத்தரிப்பு நிலையத்தை நிருமாணித்தல், புனித அந்தோனியார் கல்லூரியின் கூட்ட மண்டபத்தை நிருமாணித்தல், காலி பத்தேகம அபிவிருத்தி உட்பட பிற அபிவிருத்திப் பணிகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

16. டம்பிட்ட விகாரை பாதுகாப்புத் தொடர்பிலான கலந்துரையாடல் - 2017.10.13

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் இந்தக் கலந்துரையாடலானது நடாத்தப்பட்டதோடு, களனிப் பல்கலைக்கழகத்தின் மானிடவியல் பீடத்தின் ஆராய்ச்சி மையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிப் பற்றிய அறிக்கைத் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது. முன்வைக்கப்பட்ட பிரேரிப்புகளுக்கு அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்டதோடு, நாடு முழுவதும் உள்ள டம்பிட்ட விகாரைகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளையும் துரிதமாக எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. இது தொடர்பிலான தொடர் பணிகள் தொடர்ச்சியாக இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



17. உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்த மாகாண சபைகளின் எதிர்காலப் பணிகளை மேற்கொள்வது பற்றிய கலந்துரையாடல் - 2017.10.16

கலைக்கப்பட்ட மாகாண சபைகளின் (வட மத்திய / சப்பிரகமுவ / கிழக்கு மாகாண சபைகள்) எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாக அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் இந்தக் கூட்டமானது நடாத்தப்பட்டது.



18. சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் - 2017.11.01

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு அமைச்சரவை

விஞ்ஞாபனமொன்றைச் சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டது.



19. **இலங்கையில் மாணிக்க கல் தொழில் மற்றும் உள்நாட்டு மாணிக்கக் கல் வளத்தை பாதுகாத்தல் - 2017.11.01, 2017.12.13**

வெளிநாட்டு சர்வதேச கம்பனிகளின் அச்சுறுத்தல், காலங்கடந்த சில சட்டங்கள், மாணிக்கக் கல் மற்றும் சுரங்க கைத்தொழில் சாரந்த ஊழியர்களின் பற்றாக்குறை போன்ற நிலைமைகளினால் இலங்கை மாணிக்கக் கல் தொழிலுக்கு நேர்ந்துள்ள பிரதிகூலமான அச்சுறுத்தல்களை குறைக்கும் பொருட்டு அதிமேதகைய சனாதிபதி அவர்கள் விசேட கவனம் செலுத்தியுள்ளதோடு, இது சம்பந்தமாக 2017.12.13 ஆம் திகதியன்றும் 2017.11.01 ஆம் திகதியன்றும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்தக் கூட்டங்கள் கொள்கை, ஒருங்கிணைப்பு, முன்னேற்ற மீளாய்வுப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

20. **பெற்றோல் தட்டுப்பாடு தொடர்பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை - 2017.12.11**

நாட்டில் நிலவிய பெற்றோல் பற்றாக்குறைக்கு ஏதுவான காரணங்கள் மற்றும் நிலைமைகளை தீர்த்து வைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கையிலுள்ள சிபாரிசுகள் தொடர்பில் உரிய சகல தரப்புகளுடனும் அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் கலந்துரையாடப்பட்டது.

21. **கிராம உத்தியோகத்தர்களின் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் - 2017.12.15**

கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த அவர்களுடைய சேவைக்குரிய தொழில்சார் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்கு அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலை மையில் இந்தக் கலந்துரையாடலானது நடாத்தப்பட்டது. இந்த பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வுகளை சிபாரிசு செய்வதற்காக மாண்புமிகு உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு, இந்தக் குழுவின் சிபாரிசானது 2018 மார்ச் மாதம் அதிமேதகைய சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

22. **வடக்கு கிழக்கு மாகாணங்களில் காடுகளை அழித்தல் - தேசியக் குழுக் கூட்டம் - 2017.12.27**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவிய மோதல் நிலைமை முடிவடைந்ததன் பின்னர் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கும் பிற நோக்கங்களுக்காகவும் இந்த பிரதேசங்களிலுள்ள காடுகள் துரித கதியில் வெட்டப்படுவதன் காரணமாக எழுந்துள்ள சுற்றாடல் பாதிப்புகளை குறைப்பதற்கு சிபாரிசுகளைச் சமர்ப்பிப்ப தற்காக சனாதிபதியின் செயலாளரின் தலைமையில் தேசிய குழுவொன்று நியமிக்கப்பட்டதோடு, இந்த தேசிய குழுவின் இரண்டாவது கூட்டம் 2017.05.18 ஆம் திகதியன்றும் மூன்றாவது கூட்டம் 2017.12.27 ஆம் திகதியன்றும் நடாத்தப்பட்டது. இதன்போது இந்த மாகாணங்களின் மாவட்ட தொழினுட்பக் குழுக்களினால் தேசிய குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு மாவட்டத்திற்குரியதாக தொடர்புபடுத்தப்பட்ட காணிகளை விடுவித்தல் பற்றிய சிபாரிசுகள் வழங்கப்பட்டது. இந்தக் கூட்டங்கள் கொள்கை, ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வு பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டன.

23. **பிராந்திய ஊடகவியலாளர்கள் முகங்கொடுத்துள்ள தொழில்சார் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடல்கள் - 2017.12.27**

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் பிராந்திய ஊடகவியலாளர்கள் முகங்கொடுத்துள்ள தொழில்சார் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடலொன்று அமைச்சர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட ஊடகவியலாளர்களின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்டதோடு, இங்கு தேவையான சிபாரிசுகள் சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றினை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.



24. டெங்குநோய் ஒழிப்பு பற்றிய சனாதிபதி செயலணி

கடந்த ஒருசில வருடங்கள் முழுவதும் டெங்குநோயின் அதிகரிப்பு காணக்கிடைத்ததோடு, 2017 ஆம் ஆண்டு இது தீவிரமடைந்தது. இதற்கமைவாக நிலவிய தொற்று நிலைமையினால் நாட்டில் பொதுமக்களின் சுகாதார நிலைக்கு ஏற்பட்ட பிரதிகூலமான நிலைமையினை குறைப்பதற்கு அதிமேதகைய சனாதிபதி அவர்களின் ஆலோசனையின் பேரில் துரிதமாக தலையிடுவதற்கு டெங்குநோய் ஒழிப்பு பற்றிய சனாதிபதி செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.



சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் அடங்கலாக அரசாங்க தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கும் கையாள்வதற்கும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் தொழினுட்ப பங்களிப்புடன் டெங்குநோயை ஒழிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் துரித நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் 2017.05.16 ஆம் திகதியன்று டெங்குநோய் ஒழிப்பு பற்றிய சனாதிபதி செயலணியின் கூட்டம் நடாத்தப்பட்டதோடு, இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் வாராந்த மற்றும் மாதாந்த ரீதியில் சனாதிபதியின் செயலாளரினால் முன்னேற்றமானது மீளாய்வு செய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் இத்தகைய 18 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.



## 25. அனர்த்த முகாமைத்துவ செயலணி

அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் தலைமையானது அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் வகிக்கப்படுவதோடு, அனர்த்தமற்ற பாதுகாப்பான இலங்கை என்னும் தொலைநோக்குடன் இலங்கை மக்கள், சொத்துக்கள் மற்றும் சுற்றாடலை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பது இதன் நோக்கமாகும். இதன்கீழ் காலத்திற்கு காலம் நாடு முகங்கொடுக்கும் பல்வேறுபட்ட அனர்த்த நிலைமைகளை முறையாக முகாமித்தல், குறைத்தல் அத்துடன் முன் ஆயத்தம் என்பவற்றை முறைப்படுத்துவதற்காக சகல பிரிவுகளும் கூட்டாக செயலாற்றுவது அத்தியாவசியமானதாகும். இதற்காக அரச மற்றும் அரசசார்பற்ற, தனியார் அதேபோன்று சர்வதேச பங்களிப்பு உட்பட மற்றும் தொடர்பு பேணப்படுவதும் அத்தியாவசிய விடயமொன்றாகும்.

இதற்கமைவாக, 2017 ஆம் ஆண்டில் முகங்கொடுத்த பல்வேறுபட்ட அனர்த்தங்களின் போது தேவையான தலையீடானது அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் ஊடாக அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்கீழ் வறட்சி, உலர் காலநிலை என்பவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களுக்கு ஆளான மக்களை மீள கட்டியெழுப்புதல், கேகாலை மாவட்டத்தில் நிகழ்ந்த மண்சரிவு காரணமாக நிகழ்ந்த அனர்த்தம் மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிவினால் நிகழ்ந்த அவசர நிலைமை போன்ற அனர்த்த நிலைமைகளை முகாமிப்பதற்கு தலையிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் 08 கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு, இந்தக் கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது பற்றி சனாதிபதியின் செயலாளரினால் காலத்துக்கு காலம் உரிய உத்தியோகத்தர்களுடன் 05 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.



### அனர்த்த முகாமைத்துவத்தின் போதான விசேட சந்தர்ப்பங்கள்

01. குடிநீர் விநியோகத்திற்கு அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் லொறி மற்றும் டிரக்டர், பௌசர்கள் விநியோகத்தல் (இதற்காக இந்திய குடியரசின் நன்கொடையும் இலங்கையின் நிதியும் பயன்படுத்தப்பட்டது) - 2017.03.21

02. அதிமேதகைய சனாதிபதி அவர்களின் கோரிக்கையின் பேரில் வெளிநாடுகளிலிருந்து அரிசியினை நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டமை (பாகிஸ்தான், சீனா, இந்தோனேஷியா போன்ற நாடுகள்)



**அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் தாபிக்கப்பட்டுள்ள விசேட குழுக்களின் ஒருங்கிணைப்பு**

01. கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் தலைவர் களையும் நியமித்தல்.

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தகவுத்திறன்கள் அடிப்படையல் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் தலைவர்களையும் நியமிப்பது தொடர்பிலான சிபாரிசுகள் உரிய குழுக்களின் ஊடாக அதிமேதகைய சனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிப்பது இந்தப் பிரிவினால் செய்யப்பட்டு வருகின்றது.

02. **வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணிகளை விடுவிப்பதற்கு சிபாரிசுகளை சமர்ப்பிக்கும் குழு - 2017.10.03**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த சில தசாப்த காலப்பகுதியில் நிலவிய உள்நாட்டு மோதல் நிலைமை காரணமாக இந்த மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துதல், புனரமைப்பு மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளுக்குத் தேவையான அரசாங்க காணிகளை விடுவித்தல், வன ஒதுக்கங்கள், வனசீவராசிகள் பாதுகாப்பு பிரதேசங்களை இனங்காணுதல், வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் இதன்மூலம் உருவான சமூக தாக்கங்கள் என்பன பற்றி ஆராய்ந்து சிபாரிசுகளை சமர்ப்பிப்ப தற்காக நியமிக்கப்பட்ட நான்கு பேர்கள் அடங்கிய குழுவின் உரிய சிபாரிசுகளுடனான அறிக்கையானது 2017.10.03 ஆம் திகதியன்று அதிமேதகைய சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டது. இந்த குழுவுக்கும் சனாதிபதி செயலகத்துக்குமிடையிலான ஒருங்கிணைப்பு பணிகள் இந்தப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டது.





**அமைச்சுக்களின் முன்னேற்ற மீளாய்வு**

ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் சகல அமைச்சுக்களினாலும் அவற்றின் கீழுள்ள நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் ஊடாக அடைந்துள்ள முன்னேற்றமானது வெவ்வேறாக ஆராயும் பொருட்டு இந்தப் பிரிவானது தொடர்ச்சியாக அதன் பணிகளை செய்து வருகின்றது. இதன் ஊடாக தயாரிக்கப்படும் அறிக்கையொன்று ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் சனாதிபதியின் செயலாளருக்கு முன்வைக்கப்படும்.

**2017 - முதலாம் காலாண்டு**

முதலாம் காலாண்டினுள் எமக்கு அறிக்கைகளை வழங்கிய வரிசை அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் சார்பில் 539.0 பில்லியன் ‘ரூபாவைக் கொண்ட நிதி ஏற்பாடானது மூலதன அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததோடு, 108.5 பில்லியன் ‘ரூபாவானது செலவு செய்யப்பட்டிருந்தது. இது அண்ணளவாக 20 சதவீத நிதி முன்னேற்றத்தை காட்டுகின்றது. 2017.04.27 ஆம் திகதியன்று கமத்தொழில் துறைக்குரிய நான்கு அமைச்சுக்களின் உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டு சனாதிபதியின் செயலாளரின் தலைமையில் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அன்றைய தினமே அதாவது 2017.06.13 ஆம் திகதியன்று 2016 ஆம் ஆண்டிலும் 2017 ஆம் ஆண்டிலும் முதலாம் காலாண்டிலும் ஆகக்குறைந்த முன்னேற்றத் தினைக் காட்டிய அமைச்சுக்களை அழைத்து சிரேட்ட மேலதிக செயலாளரின் தலைமையில் கலந்துரையாட லொன்றும் நடாத்தப்பட்டது.



19 - CM 26894

**2017 - இரண்டாம் காலாண்டு**

இரண்டாம் காலாண்டிலேயும் எமக்கு அறிக்கைகளை வழங்கிய வரிசை அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் சார்பில் 787.5 பில்லியன் ரூபாவைக் கொண்ட நிதி ஏற்பாடானது மூலதன அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததோடு, 325.6 பில்லியன் ரூபாவானது செலவு செய்யப்பட்டிருந்தது. இது அண்ணளவாக 20 சதவீத நிதி முன்னேற்றத்தை காட்டுகின்றது.

**2017 - மூன்றாவது காலாண்டு**

மூன்றாவது காலாண்டிலேயும் எமக்கு அறிக்கைகளை வழங்கிய வரிசை அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் சார்பில் 719.7 பில்லியன் ரூபாவைக் கொண்ட நிதி ஏற்பாடானது மூலதன அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததோடு, 348.3 பில்லியன் ரூபாவானது செலவு செய்யப்பட்டிருந்தது. இது அண்ணளவாக 48 சதவீத நிதி முன்னேற்றத்தை காட்டுகின்றது.

**2017 - நான்காவது காலாண்டு**

நான்காவது காலாண்டுக்கான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதோடு, இதன் ஊடாக 2017 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சுக்களின் மூலதன நிதி ஏற்பாடுகளின் செலவு முன்னேற்றம் பற்றி கோரப்படவுள்ளது.

**கொத்தணிக் கூட்டங்கள்**

அமைச்சுக்களின் முன்னேற்ற மீளாய்வினை முறைப்படுத்தும் நோக்கில் 2017 வரவுசெலவுத்திட்ட உரையின் போது அரசாங்கத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட அமைச்சுக்கள் சார்பில் பிரதான செயலணி சுட்டெண்ணை நடைமுறைப்படுத்துவதற்கு அதிமேதகைய சனாதிபதி அவர்களின் ஆலோசனையின் பேரில் அமைச்சுக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்புக்களையும் பணிகளையும் மீளாய்வு செய்வதற்கு சகல அமைச்சுக் களும் 09 தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த ஒவ்வொரு குழுக்களுக்கும் உரிய அமைச்சுக்களின் முன்னேற்றம் சனாதிபதியின் செயலாளர் அடங்கலாக சனாதிபதி ஆலோசகர்கள், பிரதம அமைச்சரின் செயலாளர், அமைச்சரவைச் செயலாளர், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர், கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி, சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஒருவர் ஆகியோர்களைக் கொண்ட நிபுணர்கள் குழுவொன்றின் முன்னிலையில் அமைச்சுச் செயலா ளர்களின் பங்குபற்றுதலுடன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

| இலக்கம் | திகதி | அமைச்சுக்களின் விடயங்கள் | அழைக்கப்பட்ட அமைச்சுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | 2017.08.04 | கமத்தொழில் துணை விடயம் I | 5 |
| 02. | 2017.08.14 | கமத்தொழில் துணை விடயம் II | 4 |
| 03. | 2017.08.18 | கல்வி, மனிதவளம் மற்றும் தேசிய ஒற்றுமை துணை விடயம் I | 4 |
| 04. | 2017.09.08 | சுகாதாரம் | 2 |
| 05. | 2017.10.13 | பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் துணை விடயம் II | 2 |
| 06. | 2017.11.29 | பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் துணை விடயம் I | 3 |

**அபிவிருத்தி கருத்திட்டங்களினதும் நியதிச்சட்ட நிறுவனங்களினதும் பணிகள் பற்றி ஆராய்தல் - 2017.03.14**

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை தேயிலைச் சபை ஆகிய நியதிச்சட்ட நிறுவனங்களின் பணிகள் தொடர்பிலும் இந்த நிறுவனங்களின் செயலாற்றுகை தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட விழாக்களை ஒழுங்கு செய்தலும் அவற்றின் பணிகள் சகலவற்றையும் ஒருங்கிணைத்தலும்.

**01. ”நிலைபேறான யுகத்தின் மூன்றாம் ஆண்டு ஆரம்பம்” என்னும் தலைப்பில் மட்டக்களப்புக்கு உரியதாக நடாத்தப்பட்ட வெளிக்களப் பணிகள்.**

”நிலைபேறான யுகத்தின் மூன்றாம் ஆண்டு ஆரம்பம்” என்னும் தலைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத்தப்பட்ட விழாவுக்குரியதான ஆரம்ப வெளிக்களப் பணிகள் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பின் கீழ் 2017.01.10 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்டது.








02. முதலமைச்சர்களின் மாநாடு - 2017.06.19

2017.05.06 ஆம் திகதியன்று ஹபரண சினமன் லொஜ் ஹோட்டலில் நடாத்தப்பட்ட 33 ஆவது முதல-மைச்சர்களின் மாநாட்டின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு அமைவாக அதிமேதகைய சனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் இந்த கலந்துரையாடலானது நடாத்தப்பட்டது.

**03. யப்பான் நட்புறவு சங்கத்தினால் நன்கொடையாக தீயணைப்பு வாகனம் வழங்கப்பட்டமை - 2017.07.24**

யப்பான் நட்புறவு சங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட சகல துணைக் கருவிகளுடனுமான தீயணைப்பு வாகனமானது 2017.07.24 ஆம் திகதியன்று உத்தியோகதப்பூர்வமாக அதிமேதகைய சனாதிபதி அவர்களுக்கு சனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டதோடு, இந்த சந்தர்ப்பத்தில் அதிமேதகைய சனாதிபதி அவர்கள் இதனை ஹிங்குரக்கொட பிரதேச சபைக்கு கையளித்தார்.



04. வருடாந்த நத்தார் விழா - 2017.12.19

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையிலும் அதிவணக்கத்திற்குரிய மல்கம் காதினல் ரஞ்சித் அவர்களின் பங்குபற்றுதலுடனும் வருடாந்த நத்தார் விழாவானது சனாதிபதி மாளிகையில் வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது. இதன்போது கரோல் இசை நிகழ்ச்சியொன்றும் விழா முடிவில் இராப்போசன விருந்து வைபவமொன்றும் நடாத்தப்பட்டது.

(இந்த விழா சம்பந்தமான சகல ஒருங்கிணைப்புப் பணிகளும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.)





மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களை நடாத்துதல்

01. யாழ்ப்பாணம் மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கு அமைவாக மாவட்ட மட்டத்தில் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் சகல அபிவிருத்திப் பணிகளையும் ஒருங்கிணைத்தல், நடைமுறைப்படுத்துதல் உட்பட தொடர் நடவடிக்கைகள் என்பவற்றைச் செய்யும் நோக்கில் 2017.06.12 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது நடாத்தப்பட்டது. அன்றைய தினம் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் கீழ் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றறிக்கைகளை வெளியிடுதல்

| சுற்றறிக்கை | சுற்றறிக்கை இலக்கம் | திகதி |
|---|---|---|
| 1 கழிவுமுகாமைத்துவ தேசிய நிகழ்ச்சித்திட்டம் (சனாதிபதியின் செயலாளரின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை) | PCMD/PS/02/PCG | 2017.01.03 |
| 2 நிறுவன மனையிடத்தினுள் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை கிரமமாக பரிசீலித்தல், டெங்கு நுளம்புகள் பரவுவதை குறைத்தல் - மூன்று மாத விசேட டெங்குநோய்த் தடுப்பு (சனாதிபதியின் செயலாளரின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை) | PCMD/SD/01/MoHealth-Dengue | 2017.05.18 |
| 3 நிறுவன மனையிடத்தினுள் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை கிரமமாக பரிசீலித்தல், டெங்கு நுளம்புகள் பரவுவதை குறைத்தல் - விசேட டெங்குநோய்த் தடுப்பு (சனாதிபதியின் செயலாளரின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை) | PCMD/SD/01/MoHealth-Dengue (II) | 2017.09.11 |

### போசாக்கு நிகழ்ச்சித்திட்டம்

### 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

- போசாக்கு தொடர்புபட்ட பல்துறை செயற்பாட்டுத் திட்டம் 2017 - 2020 தயாரித்தல்
- போசாக்கு தொடர்புபட்ட பல்துறை செயற்பாட்டுத் திட்டம் 2017 - 2020 இன் கீழ் அமைச்சு, மாகாண, மாவட்ட, பிரதேச, கிராமிய மட்டங்களில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், தொடர் நடவடிக்கைகள் எடுத்தல், மதிப்பிடுதல்.
- போசாக்கு தொடர்புபட்ட பல்துறை செயற்பாட்டுத் திட்டம் 2017 இன் கீழ் நாட்டிலுள்ள சகல மாவட்டங்களையும் தழுவும் விதத்தில் போசாக்கின்மையை இல்லாதொழிப்பதற்காக இனங்காணப்பட்ட விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். இந்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 2020 ஆம் ஆண்டளவில் நாட்டிலே,

- 05 வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கிடையே உயரக் குறைவினை 8.1 சதவீதத்தாலும் உடல் மெலிவினை 5.8 சதவீதத்தாலும் குறைந்த எடையுடைய பிறப்புக்களின் எண்ணிக்கையை 10 சதவீதத்தாலும் எடை கூடிய நிலைமையின் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் இரத்த சோகையை 8.8 சதவீதம் வரை குறைப்பதற்கும் வீட்டு உணவு பாதுகாப்பினை 25 சதவீதத்தால் அதிகரிப்பதற்கும் இதன் ஆரம்ப கட்ட எதிர்பார்ப்பாகும்.

### 2017 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

- போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளை இனங்காணுதலும் தரவுகளை பெற்றுக் கொள்தலும்.
- போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்படுவதனை உறுதிசெய்தல்.
- வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளைப் பலப்படுத்துதல்.
- வறுமை ஒழிப்பு மற்றும் சுயதொழில் உருவாக்கம் சம்பந்தமாக கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து அதன் ஊடாக போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளுக்கு அறியச் செய்வித்து வலுவூட்டுதல் .
- வர்த்தக ஒப்பந்தங்களை செய்து கொள்தலும் அதன் ஊடாக சமூக உதவி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்.
- கர்ப்பிணி தாய்மார்களுக்கான ”போசாக்கு பொதி” வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குறுத்துதல்.
- தொழில்சார்பில் நீண்ட காலம் தாய் வீட்டில் இல்லாதிருக்கும் போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளில் ஐந்து வயதிற்கு குறைந்த குழந்தைகளின் போசாக்கு நிலை சம்பந்தமாக குறித்த குழந்தைகளுக்கு பாதுகாப்பினை வழங்குபவர்களுக்கும் மனித உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கும் அறியச் செய்வித்தல்.
- தொழில் இடங்களில் பகற்பொழுது பராமரிப்பு நிலையங்களை உருவாக்குவதற்கு தொழில் கொள்வோர்களை ஊக்குவித்தல்.
- தாய் உறவினை ஏற்படுத்தலும் நிலவு தாய் உறவினைப் பலப்படுத்துதலும்.
- முன்பள்ளி குழந்தைகளுக்கு உணவு பழக்கம் சம்பந்தமான முன்பள்ளி ஆசிரியர்களை பயிற்றுவித்தலும் இதன் மூலம் இந்தக் குழந்தைகளையும் அவர்களுடைய பெற்றோர்களையும் அறியச் செய்வித்தலும்.
- கல்வி மற்றும் வெற்றிகரமான அனுபவங்களை பரிமாறிக் கொள்வதற்காக முன்பள்ளி ஆசிரியர்கள் சார்பில் வருடாந்த சம்மேளனத்தினை நடாத்துதல்.
- போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளைச் சேர்ந்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகளை பராமரிப்பவர்கள் குழந்தைகளின் வளர்ச்சிக் குறைப்பாட்டினை முன்னதாகவே இனங்காண்பதற்கு குழந்தை மற்றும் சிறுவர் போசாக்கு பழக்கம் பற்றி பயிற்றுவித்தல்.

- கமநல அமைப்புகளுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டு சேவை புரியும் போசாக்கு சார்ந்த சகல உத்தியோகத்தர் களையும் அறியச் செய்வித்தல்.
- கொத்தணி கூட்டங்களை நடாத்துவதன் மூலம் போசனை சம்பந்தமாக கிராமிய ரீதியில் கவனத்தை தீவிரப்படுத்துதல்.
- போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளின் போசாக்கு நிலைமையை அதிகரிப்பதற்கு சமூக மாற்றத்திற்கான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு தன்னார்வ ஊழியர்களை பயிற்றுவித்தல்.
- போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளின் போசாக்கு வளர்ச்சி முன்னேற்றத்தை ஒழுங்குறுத்துதல் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியில்லாத வீட்டு அலகுகள் இருப்பின் இந்த வீட்டு அலகுகளை குறியிலக் காகக் கொண்டு பொருத்தமான வேறு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- இரண்டு மாதங்களுக்கு ஒருதடவை பிரதேச மற்றும் மாவட்ட போசாக்கு குழுக் கூட்டங்களை நடாத்துவதன் மூலம் கிரமமாக மேற்போந்த நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் பற்றி மீளாய்வு செய்து அறிக்கைகளை கோருதல்.
- பிபில பிரதேச செயலகப் பிரிவில் ஐந்து வயதிற்கு குறைந்த குழந்தைகளின் மந்த போசாக்கு நிலை-மையை பத்து சதவீதத்தால் குறைக்கும் கருத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட செயற்பாடுகள் சார்பில் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டது.

மேற்போந்த கருத்திட்டத்தின் மூலம் பிபில பிரதேச செயலகப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் (2016 யூன் - 2016 திசெம்பர் வரை) குறைந்த எடைகூடிய குழந்தைகளின் விகிதாசாரமானது 14.7 சதவீதத்திலிருந்து 11.3 சதவீதம் வரை அதாவது 3.4 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.



பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - மட்டக்களப்பு மாவட்டம்



போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளைச் சேர்ந்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகளை பராமரிப்பவர்கள் குழந்தைகளின் வளர்ச்சிக் குறைப்பாட்டினை முன்னதாகவே இனங்காண்பதற்கு குழந்தை மற்றும் சிறுவர் போசாக்கு பழக்கம் பற்றி பயிற்றுவித்தல் - குருநாகல் மாவட்டம்





போசாக்கு அவதானம் மிக்க வீட்டு அலகுகளைச் சேர்ந்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகளை பராமரிப்பவர்கள் குழந்தைகளின் வளர்ச்சிக் குறைப்பாட்டினை முன்னதாகவே இனங்காண்பதற்கு குழந்தை மற்றும் சிறுவர் போசாக்கு பழக்கம் பற்றி பயிற்றுவித்தல் - கண்டி மாவட்டம்

பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டு சேவை புரியும் போசாக்குடன் தொடர்புபட்ட சகல உத்தியோகத்தர்களையும் அறியச் செய்வித்தல். - பதுளை மாவட்டம்









பிபில பிரதேச செயலகப் பிரிவு செயற்படுத்தப்பட்ட மந்த போசாக்கு நிலைமையை குறைப்பதற்கான விசேட கருத்திட்டத்தின் போதான சந்தர்ப்பங்கள்

**தேசிய போசாக்கு தகவல் முறைமை (National Nutrition Information system)**

- தேசிய போசாக்கு தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- தேசிய போசாக்கு தரவு முறைமையை பயன்படுத்துதல் தொடர்பில் பிரதேச செயலகங்கள் யாவற்றுக்கும் இணைக்கப்பட்டுள்ள போசாக்கு தொடர்புபட்ட உத்தியோகத்தர்களை தழுவும் விதத்தில் செய்யுமுறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

| தொடர் இலக்கம் | மாவட்டம் | திகதி |
|---|---|---|
| 1 | நுவரெலியா | 2017.03.06 |
| 2 | கண்டி | 2017.03.07 |
| 3 | மாத்தளை | 2017.03.09 |
| 4 | கேகாலை | 2017.03.10 |
| 5 | மட்டக்களப்பு | 2017.03.13 |
| 6 | திருகோணமலை | 2017.03.14 |
| 7 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி | 2017.03.16 |
| 8 | மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா | 2017.03.17 |
| 9 | மொனராகலை | 2017.03.20 |
| 10 | அம்பாறை | 2017.03.21 |
| 11 | இரத்தினபுரி | 2017.03.23 |
| 12 | பதுளை | 2017.03.24 |
| 13 | அநுராதபுரம் | 2017.03.27 |
| 14 | பொலன்நறுவை | 2017.03.28 |
| 15 | அம்பாந்தோட்டை | 2017.03.30 |
| 16 | மாத்தறை | 2017.03.31 |
| 17 | காலி | 2017.04.03 |
| 18 | களுத்துறை | 2017.04.03 |
| 19 | கொழும்பு | 2017.04.04 |
| 20 | கம்பஹா | 2017.04.04 |
| 21 | குருநாகல் | 2017.04.06 |
| 22 | புத்தளம் | 2017.04.07 |





தேசிய போசாக்கு தரவு முறைமைத் தாபித்தல் தொடர்பிலான ஆரம்ப கலந்துரையாடல்.





தேசிய போசாக்கு தரவு முறைமை தாபித்தல் தொடர்பிலான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - நுவரெலியா மாவட்டம்



தேசிய போசாக்கு தரவு முறைமை தாபித்தல் தொடர்பிலான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - மட்டக்களப்பு மாவட்டம்



தேசிய போசாக்கு தரவு முறைமை தாபித்தல் தொடர்பிலான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - யாழ்ப்பாணம் மாவட்டம்



தேசிய போசாக்கு தரவு முறைமை தாபித்தல் தொடர்பிலான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - குருநாகல் மாவட்டம்



தேசிய போசாக்கு தரவு முறைமை தாபித்தல் தொடர்பிலான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - காலி மாவட்டம்

- தரவுகளை உள்வாங்குதல் தொடர்பிலான முன்னேற்றம் - 2017 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றுக்கு

| | மாவட்டம் | உள்வாங்கப்பட்ட தரவுகளின் எண்ணிக்கை | | | மாவட்டத்திற்கான மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | ஐந்து வயதிற்கு குறைந்த பிள்ளைகள் | ஆரம்ப கர்ப்பிணி பெண்கள் | கர்ப்பிணி தாய்மார்கள் | |
| 1 | கொழும்பு | 3899 | 11 | 1232 | 5142 |
| 2 | கம்பஹா | 8905 | 39 | 1991 | 10935 |
| 3 | களுத்தறை | 12560 | 210 | 3155 | 15925 |
| 4 | கண்டி | 14337 | 57 | 2571 | 16965 |
| 5 | மாத்தளை | 4701 | 18 | 927 | 5646 |
| 6 | நுவரெலியா | 11468 | 66 | 222 | 11756 |
| 7 | அம்பாந்தோட்டை | 6815 | 113 | 1776 | 8704 |
| 8 | காலி | 3840 | 11 | 679 | 4530 |
| 9 | மாத்தறை | 7364 | 36 | 1491 | 8891 |
| 10 | யாழ்ப்பாணம் | 7543 | 7267 | 1724 | 16534 |
| 11 | மன்னார் | 615 | 1783 | 310 | 2708 |
| 12 | வவுனியா | 1794 | 2486 | 332 | 4612 |
| 13 | முல்லைத்தீவு | 1446 | 67 | 147 | 1660 |
| 14 | கிளிநொச்சி | 1637 | 2150 | 569 | 4356 |
| 15 | மட்டக்களப்பு | 6060 | 2366 | 1452 | 9878 |
| 16 | அம்பாறை | 8618 | 72 | 1928 | 10618 |
| 17 | திருகோணமலை | 1704 | 10 | 823 | 2537 |
| 18 | குருநாகல் | 15443 | 34 | 2068 | 17545 |

| | மாவட்டம் | உள்வாங்கப்பட்ட தரவுகளின் எண்ணிக்கை | | | மாவட்டத்திற்கான மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | ஐந்து வயதிற்கு குறைந்த பிள்ளைகள் | ஆரம்ப கர்ப்பிணி பெண்கள் | கர்ப்பினி தாய்மார்கள் | |
| 19 | புத்தளம் | 4868 | 52 | 1055 | 5975 |
| 20 | அநுராதபுரம் | 9820 | 28 | 1603 | 11451 |
| 21 | பொலன்நறுவை | 3870 | 45 | 257 | 4172 |
| 22 | பதுளை | 9877 | 64 | 882 | 10823 |
| 23 | மொனராகலை | 6176 | 3 | 731 | 6910 |
| 24 | கேகாலை | 4497 | 39 | 626 | 5162 |
| 25 | இரத்தினபுரி | 9673 | 72 | 1218 | 10963 |
| | மொத்தம் | 142166 | 16839 | 23391 | 182396 |

- 2017 ஒக்ரோபர் மாதம் 10 - 12 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் டிஜிட்டல் சுகாதாரம் தொடர்பிலான மாநாடு மற்றும் பரிசளிப்பு விழாவின் போது போசாக்கு துறைசார்ந்த சிறந்த தரவு முறைமையாக பரிசு வெல்லப்பட்டது.






# அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு

நாட்டின் அபிவிருத்தி முற்றுமுழுதாக உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின்பால் வரையறுக்கப்படாது தனிநபர் அபிவிருத்தியின் ஊடாக ஒழுக்கநெறிமிக்க சமூகமொன்றின்பாலும் ஆரோக்கியம் மிக்க சமுதாயமொன்றை உருவாக்கும் நோக்கத்தினை நோக்காகக் கொண்டு, அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் சனாதிபதி செயலகத்தின் "அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால்" பின்வரும் விசேட தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

1. சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்.
2. போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்.
3. சிறுநீரகநோய் தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்.
4. "தருவன் சுரக்கிமு" தேசிய நிகழ்ச்சித்திட்டம்.
5. நிலைபேறுடைய பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்.
6. மத அலுவல்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள்.
7. பிற விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் (தேசிய நூலகக் கொள்கையைத் தயாரித்தல், கலை மற்றும் கலாசார கொள்கையைத் தயாரித்தல், "எமது ஆரோக்கியம் நாட்டின் பலம்" நிகழ்ச்சித்திட்டம், மாவட்ட இளைஞர் முகாம்களை நடாத்துதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள்)

மேற்போந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தாபிக்கப்பட்ட சனாதிபதி செயலணி மற்றும் விசேட பிரிவுகள் மூலம்

- திட்டவட்டமான காலப்பகுதியுடன் கூடிய தேசிய திட்டங்களைத் தயாரித்தல்.
- அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான சிறந்த ஒருங்கிணைப்பு.
- சட்ட மற்றும் கொள்கை விடயங்கள் சம்பந்தமாகத் தலையிடுதல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் நிதி ஏற்பாடுகளையும் வசதிகளையும் வழங்குதல்.
- சிவில் அமைப்புகளுடனும் பயனாளிகளுடனுமான ஒருங்கிணைப்பு.
- மேற்பார்வை மற்றும் முன்னேற்ற மீளாய்வு.
- கிரமமான தொடர் நடவடிக்கைகள்.

2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவுக்கு 1,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதோடு, இதில் 98 சதவீதத்திற்கு கூடுதலான நிதி முன்னேற்றம் எய்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 1,250 மில்லியன் ரூபாவிலிருந்து 92 சதவீதத்திற்கும் கூடுதலான அளவு பல்வேறுபட்ட கருத்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும் செலவுகளுக்காகவும் உறப்பட்டது.

**அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளும் செலவுகளும் - 2016**

2016 வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளும் செலவுகளும் ('ரூ. மி)




**அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளும் செலவுகளும் - 2017**

2017 வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளும் செலவுகளும் ('ரூ. மி)




தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொன்றின் கீழும் 2017 ஆம் ஆண்டிலே மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வரும் பந்திகளின் மூலம் விபரிக்கப்படுகின்றன.

## 01. ”புனருதய” சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

**தொலைநோக்கு**

நிலையான சுற்றாடலொன்றை இலங்கையில் தாபித்தல்

**செயற்பணி**

நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பினை மேம்படுத்துவதற்கு பொறிமுறையொன்றைத் தாபித்தலும் பரந்துபட்ட மக்கள் பங்களிப்பின் ஊடாக இனங்காணப்பட்ட முக்கிய சுற்றாடல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கி இலங்கையில் நிலைபேறுடைய சுற்றாடலினை தாபித்தலும்.

**நோக்கம்**

1. இலங்கையின் நிலைபேறான தன்மைக்குத் தேவையான வளங்களை பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும்.
2. இலங்கையில் இயற்கைவளத்தின் நிலையான பயன்படுத்துகை, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் மூலம் வாழ்வதற்கு உகந்த சுற்றாடல் முறைமையொன்றைத் தாபித்தல்.
3. நிலைபேறுடைய கழிவு முகாமைத்துவத்தின் மூலம் சிறந்த வாழ்க்கை சூழலொன்றை உருவாக்குதல்.
4. இலங்கையில் உயிரினப் பல்வகைமை பாதுகாப்பும் நிலையான முகாமைத்துவமும்.
5. சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் பொதுமக்களை அறிவுசார் ரீதியில் பலப்படுத்துதல்.
6. இலங்கை மக்கள் சுற்றாடல் பாதுகாப்பின்பால் கூர் உணர்வுடைய மக்களாக மாற்றுதல்.

**அறிமுகம்**

பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகள், மக்களின் வாழ்க்கைமுறை மாற்றமடைந்தமை, சனத்தொகை மற்றும் மனித தேவைகள் அதிகரித்தமை போன்ற காரணங்களினால் உருவாகும் சுற்றாடல் பிரச்சினைகளை குறைத்து இயற்கை வளங்களை பாதுகாத்து நிலைபேறுடைய சுற்றாடலொன்றை தாபிக்கும் நோக்கில் ”புனருதய” சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டமானது (2016-2018) அறிமுகப்படுத்தப்பட்டது. சனாதிபதி செயலகத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சனாதிபதி செயலணி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துகின்றது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, காணி அமைச்சு, வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு போன்ற அமைச்சுக்களும் இந்த அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறுபட்ட திணைக்களங்களும் நிறுவனங்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது நேரடியாக பங்களிப்பினை நல்குகின்றன. பின்வரும் பிரதான ஆறு விடயத்துறைகளின் கீழ் 21 தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

i. சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துதல் .

ii. வனப்பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி.

iii. நிலைபேறுடைய காணி முகாமைத்துவம்.

iv. வன விலங்குகள் மனித மோதல்களைத் தவிர்த்தல்

v. உயிரின வளங்களின் பாதுகாப்பு

vi. நிறுவன மீளமைப்பும் மேம்பாடும்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் அந்தந்த துறைகளின் கீழ் இனங்காணப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, சுற்றாடல் பாதுகாப்பு சனாதிபதி செயலணி இதற்குத் தேவையான கையாள்கை, ஒருங்கிணைப்பு, தொடர் நடவடிக்கைகள், மேற்பார்வை மற்றும் முன்னேற்ற மீளாய்வு என்பவற்றை மேற்கொள்கின்றது.

சனாதிபதி செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் பின்வரும் துறைகளின் கீழ் பல்வேறுபட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதோடு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்கியது.

| சனாதிபதி செயலகத்தினால் சுற்றாடல் பாதுகாப்பு சார்பில் நிதி ஏற்பாடுகளை வழங்குதல் - 2017 | | | |
|---|---|---|---|
| | துறை | ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு (ரூ.) | வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு (ரூ.) |
| 1 | சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துதல், கழிவு முகாமைத்துவம் | 226,000,000 | 225,455,319 |
| 2 | வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி | 34,000,000 | 33,743,450 |
| 3 | சேதமடைந்துள்ள நீர் மூலவளங்களையும் நீரேந்து பிரதேசங்களையும் பாதுகாத்தல் | 67,000,000 | 66,077,055 |
| 4 | நிறைபேறுடைய பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள் | 40,000,000 | 36,509,540 |
| 5 | சுற்றாடல் அறிவினை மேம்படுத்துதல் | 48,000,000 | 34,038,549 |
| 6 | சுற்றாடல் பாதுகாப்பும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலும் | 25,000,000 | 8,663,287 |
| 7 | தொடர் நடவடிக்கைகளின் மேற்பார்வையும் முன்னேற்ற மீளாய்வும் | 10,000,000 | 612,800 |
| ஒவ்வொரு துறைக்கு அமைவாகவும் வழங்கப்பட்டுள்ள மொத்த நிதி ஏற்பாடுகளின் அளவு | | 450,000,000 | 405,100,000 |

**துறை ரீதியில் நிதி ஏற்பாடு வழங்குதல் - 2017**



## 1.1 சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்பட்டுத்துதல்

சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்பட்டுத்துவதற்காக ”புனருதய” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இனங் காணப்பட்டுள்ள திறமுறைகள் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

- நிக்கசல லங்கா
- நிக்கசல புரவர
- ஹரித்த வெரல
- சுனில சயுர
- பிரிசுதுவாயு - தீர்காயு
- ஜனதிவிரக்கின ஜலரக்கவரனய
- சார நகர

**சனாதிபதி செயலணியினால் சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்திய விசேட பணிகள் - 2017**

### 1.1.1 பசுமைக் கட்டட வழிகாட்டல் கோவையை அறிமுகப்படுத்தல்

”புனருதய” மூன்றுவருட கால சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் இனங்காணப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றாக நகர மற்றும் கட்டட நிருமாணிப்பின் போது பசுமை எண்ணக்கரு சார்ந்த செயற்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளின் கீழ் அரசாங்க மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களின் கட்டடங்கள் சுற்றாடல் நேயம் மிக்க பசுமைக் கட்டடங்களாக 2017 ஆம் ஆண்டிலிருந்து நிருமாணிப்பதற்கும் பேணுவதற்குமாக சனாதிபதி செயலகத்தின் நிதிப் பங்களிப்புடன் பசுமை கட்டட வழிகாட்டல் கோவையானது வரையறுக்கப்பட்டது. 2017 சனவரி மாதம் 09 ஆம் திகதி அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சருவதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த பசுமை கட்டட வழிகாட்டல் கோவையினை அறிமுகப்படுத்தும் உத்தியோகபூர்வ விழாவானது நடாத்தப்பட்டது. இந்த வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயலாற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றதோடு, புதிய கட்டடங்களை நிருமாணிக்கும் போது பசுமை எண்ணக்கருவினை செயற்படுத்துவதற்கு மக்களை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ளது. முக்கியமாக 2018 ஆம் ஆண்டிலிருந்து நிருமாணிக்கப்படும் அரசாங்க, பகுதி அரசாங்க நிறுவனங்கள் பசுமை கட்டடங்களை நிருமாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன.





வழிகாட்டல் கோவையை அறிமுகப்படுத்தும் விழா

### 1.1.2 உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவம்

இலங்கையில் கழிவு முகாமைத்துவம் சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சினைகள், முறையற்ற விதத்தில் கழிவு-களை இடுதல் என்பன காரணமாக அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு மாற்று வழிகள் உட்பட உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவத்தை ஒழுங்குறுத்துவதற்கு சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் வழிகாட்டலின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டன.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள கெரவலப்பிட்டிய, அறுவக்காலு, கரதியான, கம்பஹா பெத்தியாகந்த, கண்டி கொஹாகொட, மாத்தறை கொட்டவில போன்ற கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்களின் பணிகள் சார்பில் 226 மில்லியன் ரூபாவைக் கொண்ட நிதி ஏற்பாடானது வழங்கப்பட்டதோடு, தொடர் நடவடிக்கைகள் எடுத்து நீண்டகால கழிவு முகாமைத்துவ வழிமுறையொன்று தயாரிக்கப்பட்டது. சகல மாகாணங்களுக்கும் கவசிமா சேதன பசளை இயந்திரங்களைத் தாபித்தல், உள்ளூராட்சி நிறுவனங்களிடம் இல்லாதிருந்த கம்பெக்டர், உழவு இயந்திரங்களை கொள்வனவு செய்யும் பணிகள், கழிவு முகாமைத்துவத்தை முறையான வழிகாட்டலுக்கு அமைவாக செய்வதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் அனைத்தையும் ஈடுபடுத்துதல் என்பன நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் பிரதான பெறுபேறாகும்.



2017 மார்ச் 10 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கலந்துரையாடல்



2017 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கலந்துரையாடல்

### 1.1.3 சுற்றாடல் நட்புறவுமிக்க சிவனொளிபாதமலை பயணக்கால நிகழ்ச்சித்திட்டம்

2016 - 2017 சிவனொளிபாதமலை பயணக் காலம் சார்பில் சனாதிபதி செயலகத்தின் சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக ”சுற்றாடல் நட்புறவுமிக்க சிவனொளிபாதமலை பயணக் காலம்” என்னும் நிகழ்ச்சித்திட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கமைவாக யாத்திரிகர்களுக்கு சிவனொளிபாதமலை பயணக் காலத்திற்கு முன்பிருந்தே அறிவூட்டல் செய்யப்பட்டதோடு, இலத்திரனியல் ஊடகங்கள் மூலமும் அறியச் செய்விக்கப்பட்டது. ஒன்று திரளும் கழிவுகளை வேறுபடுத்துவதற்கும் மீள் சுழற்சிப் பணிகளுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆதலால், பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்றவை சுற்றாடலில் விடப்படுவதை இத்தடவை சிவனொளிபாதமலை பயணக் காலத்தில் பெரும்பாலும் குறைவடைந்திருந்து. யாத்திரிகர்களுக்கு கழிவுகளை கீழே கொண்டுவருவதற்கு இலகுவாகும் விதத்தில் சுற்றாடல் நட்புறவுமிக்க பையொன்றும் விநியோகிக்கப்பட்டது.



20 - CM 26894

அத்துடன், சிவனொளிபாதமலைக்கு உட்செல்லும் பாதைகளின் இருபக்கங்களிலுமுள்ள தங்குமிடங்களின் மலசலகூட முறைமையை சுத்திகரித்தலானது சுற்றுச் சூழல் உட்பட நீர் மூலவளங்களை பாதுகாப்பதற்கு ஏதுவானதாகையினால் வர்ணகல, சீத்தகங்குள, மெதஹின்ன, தெமழமலஹன்ன, இந்திகட்டுபான ஆகிய தங்குமிடங்களின் மலசலகூட முறைமைகளை சுத்திகரிப்பதற்கு 4.515 மில்லியன் ரூபாவைக் கொண்ட நிதி ஏற்பாடானது இரத்தினபுரி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது.

வனவுயிர் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சிவனொளிபாதமலை வன ஒதுக்கத்தின் முக்கியத்துவம் சுற்றாடலை மாசுபடுத்துவதனால் ஏற்படும் சேதம் தொடர்பில் யாத்திரிகர்கள் குழுக்களுக்கு அறியச் செய்விக்கும் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் பொருட்டு மல்டிமீரியா புரெஜெக்டர் இயந்திரம், தொழிற்பாட்டு முறைமையற்ற கணனி இயந்திரம் மற்றும் வோல்மவுண்ட் திரை என்பனவற்றை பெற்றுக் கொள்வதற்கான (தேவையான நிதியுதவி ரூபா 176,645.25) நிதி ஏற்பாடானது நுவரெலியா மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டது.











சுற்றாடல் நட்புறவுமிக்க சிவனொலிபாதமலை பயணக்காலம்





1.1.4 கரையோரப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை கடற்படை, கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்துடனும் சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையுடனும் இணைந்து கரையோரம் சார்ந்த பிரதேசங்களை பாதுகாக்கும் நோக்கில் சனாதிபதி செயலகத்தின் தலையீட்டில் 2018 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட மொன்று திட்டமிடப்பட்டது. அசுத்தமாகவுள்ள கடற்றொழில் துறைமுகங்களை சுத்தமாக பேணுதல், கரையோரம் சார்ந்த தாவர சுற்றாடலை அபிவிருத்தி செய்தல், கடற்றொழில் துறைமுகம் சார்ந்த சமூக மற்றும் கரையோர பாடசாலை பிள்ளைகளுக்கு அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் சிறிய நீர் வழிகள் மூலம் கடலில் சேரும் கழிவுகளை குறைத்தல் மற்றும் கரையோரம் சார்ந்த கழிவு முகாமைத்துவம் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் பல 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

**சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துதல் - கழிவு முகாமைத்துவதற்கான நிதி ஏற்பாடுகளை வழங்குதல் - 2017**

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட / செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப்பட்ட / செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| அரசாங்க நிறுவனங்களின் நிருமாணிப்புகளை பசுமை எண்ணக் கருவின் கீழ் கொண்டு வருவதற்கான வழிகாட்டல் கோவையை அறிமுகப்படுத்தல் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 3,000,000 |
| பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவின் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | 2,776,743 |
| மனித மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்காக இரசாயன பசளை பாவனையை குறைத்தல் | மாவட்ட செயலாளர் மாத்தளை | வில்கமுவ பிரதேச செயலகம் | 790,000 |
| ”குருகெதரட்ட கல எளியக்” மொனராகலை மாவட்டத்திலுள்ள சகல தேசிய பாடசலைகளில் மாதிரி சேதனப் பசளை அறைகளை நிருமாணிக்கும் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் | மாவட்ட செயலாளர் மொனராகலை | மாவட்ட செயலாளர் மொனராகலை | 603,756 |

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட/ செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப்பட்ட /செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| வலுசக்தி உற்பத்தி, நுகர்வின் போது நிகழும் பசுமை வெளியேற்றத்தைக் குறைக்கும் தேசிய ரீதியில் ஏற்ற நடவடிக்கைகள் சார்பிலான கருத் திட்டத்தின் கீழ் பெலியத்தை பிரதேச செயலகத்தில் உயிரியல் வாயுப் பிரிவொன்றைத் தாபித்தல் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | பெலியத்த பிரதேச செயலகம் | 68,352 |
| இலத்திரனியல் கழிவுகளை முறையாக ஒன்று திரட்டுவதற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு பெட்டிகளை வழங்கும் கருத்திட்டம் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | பெலியத்த பிரதேச செயலகம் | 381,341 |
| கெரவலப்பிட்டிய கழிவு முனைய நிருமாணிப்பு | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு | இலங்கை காணிநில மீட்பு, அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 115,000,000 |
| 2017 கதிர்காமம் யாத்திரை காலத்தில் கழிவு முகாமைத்துவத்தை முறைப்படுத்து வதற்காக பக்தர்களுக்கு பகிர்ந்தளிப்ப தற்காக 10,000 சுற்றாடல் நட்புறவுமிக்க பைகளை தயாரித்தல் | மாவட்ட செயலாளர் மொனராகலை | மாவட்ட செயலாளர் மொனராகலை | 600,000 |
| கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு நோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் | மாவட்ட செயலாளர் பொலன்நறுவை | பொலன்நறுவை மாவட்ட செயலகம் | 58,250 |
| நிக்கசல புலதிசி புரவரய - முதலாம் கட்டம் - கருத்திட்ட பிரேரிப்பு | மாவட்ட செயலாளர் புத்தளம் | புத்தளம் மாவட்ட செயலகம் | 970,625 |
| பொலித்தீன் காரணமாக ஏற்பட்டுள்ள சுற்றாடல் பிரச்சினைகளை குறைப்பதற்கு பொலித்தீன் பாவனையை உரிய முறையில் முகாமிப்பதற்கான அமைச்சரவையின் சிபாரிசினை நடைமுறைப்படுத்துதல் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 20,000,000 |
| கம்பஹா மாவட்ட கொம்போஸ்ட் கருத்திட்டத்திற்கு மேலதிக கட்டடங்களை நிருமாணித்தல் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் | 50,000,000 |
| இரத்தினபுரி மாநகர சபைக்கு ஆராய்ச்சி மட்டத்தில் கொம்போஸ்ட் இயந்திரமொன்றை நிருமாணித்தல் | செயலாளர், சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இரத்தினபுரி | 320,000 |
| கொம்போஸ்ட் கருத்திட்டத்திற்கு மேலதிக கட்டடங்களை நிருமாணித்தல் (கம்பஹா மாவட்ட கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ்) | செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் | 26,512,353 |
| சிவனொளிபாதமலைக்கு செல்லும் வழிகளில் 16 மலசலகூட முறைமைகளை நிருமாணித்தல் | மாவட்ட செயலாளர், இரத்தினபுரி | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | 4,015,000 |

## 1.2 வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி

காடு அழித்தல் மற்றும் காடுகள் இல்லாமல் போதல் என்பன காரணமாக பல்வகை உயிரினங்கள் அழிந்துபோதல், உயிரினங்களின் வசிப்பிடம் இல்லாமற்போதல், நீரேந்து பிரதேசங்களின் தரம் குறைவடைதல், மண் அரிப்பு அதிகரித்தல், காலநிலை மாற்றங்கள் உருவாதல் போன்ற பிரதிகூலமான பாதிப்புகள் பல ஏற்படுகின்றன. ஆதலால், வனப் பாதுகாப்பு அபிவிருத்தியின் பொருட்டு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- வனரோப்பா
- வனஅரன - ரக்கவரன
- வனசரண

**சனாதிபதி செயலணியினால் வனப் பாதுகாப்புக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட பணிகள் - 2017**

### 1.2.1 நக்கல்ஸ் காணி சுவீகரிப்பு

2016.06.05 ஆம் திகதியன்று மாத்தளை எட்வேட் விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட சம்மேளனத்திற்கு ஒருங்கிணைவாக ஆரம்பிக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றாக உலக மரபுரிமையான நக்கல்ஸ் ஒதுக்கத்திற்குரிய காணிகளை சுவீகரித்தலானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. காணி உரிமையை வெளிப்படுத்துபவர்களை கண்டறிதல் மற்றும் காணி சுவீகரித்தல் செயற்பாடு சார்பில் சனாதிபதி செயலகத்தின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது.

### 1.2.2 3 மில்லியன் கன்றுகளை வளர்த்தல்

பாதிக்கப்பட்டுள்ள வனப் பிரதேசங்களில் மீண்டும் வனச் செய்கைக்காக 2017 ஆம் ஆண்டிற்குத் தேவை யான 3 மில்லியன் கன்றுகளை வளர்ப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் சனாதிபதி செயலகத்தினால் 42 மில்லியன் 'ரூபாவைக் கொண்ட நிதி ஏற்பாடொன்று வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதோடு, இந்த கன்றுகளை பராமரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் 10 மில்லியன் 'ரூபாவைக் கொண்ட நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. நாடு முழுவதுமுள்ள நீரேந்து பிரதேசங்களின் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மர நடுகை நிகழ்ச்சித்திட்டஙகள் என்பவற்றுக்குத் தேவையான கன்றுகளை வழங்குவதற்கான சாத்தியம் கிடைத்துள்ளது.

### 1.2.3 இலங்கை வனப்பரப்பை 1% சதவீதத்தால் அதிகரிக்கும் முன்னோடிக் கருத்திட்டம்

குருநாகல் மாவட்ட செயலகத்தின் ஊடாக கல்கமுவ தளவைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் (திரு) எச்.எம்.பீ.ஆசிரி முனசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டளவில் இலங்கை வனப்பரப்பை 1 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான பிரேரிப்பு உள்ளடக்கப்பட்ட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முன்னோடி கருத்திட்டமொன்றாக குருந-ாகல் மாவட்டத்தின் சகல பாடசாலைகளிலும் முதலாம் தரத்திற்கு சேரும் குழந்தைகளுக்கு கன்றொன்றை வழங்குவதற்கும் (கற்றல் ஆரம்பித்தலின் போதான மரம் என்னும் எண்ணக்கரு) மாவட்டத்திலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் பிறக்கும் குழந்தைகளுக்கு கன்றொன்றை வழங்குவதற்கும் (இரட்டை சகோதார மரம் என்னும் எண்ணக்கரு) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 1.2.4 சனாதிபதி செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு பழவகை கன்றுகளை வழங்கும் கருத்திட்டம்

அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் கீழ் செயற்படுத்தப்படும் சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சனாதிபதி செயலகத்தைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களுக்கும் 2018 புதிய ஆண்டின் முதலாவது கடமை தினத்தன்று பழவகைக் கன்றொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கமைவாக, 2018.01.02 முதலாதவது கடமை தினத்தன்று அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் பழவகை கன்றுகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டமானது நடாத்தப்பட்டது. பழக் கன்றினை கொண்டு செல்வதற்கு சுற்றாடல் நட்புறவு மிக்க பையொன்றுடன் மரம் வளர்ப்பின் முக்கியத்துவம் பற்றி அறிவூட்டுவதற்கான கைநூலொன்று பகிர்ந்தளிப்பதும் இதன் ஊடாக செய்யப்பட்டது.





சனாதிபதி செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு பழவகை கன்றுகளை வழங்குதல்

வனப் பாதுகாப்பு, அபிவிருத்தி சார்பில் நிதி ஏற்பாடு வழங்குதல் - 2017

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட/ செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப் பட்ட / செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| மாதம்பையிலிருந்து றக்வானை வீதி இருமருங்கிலும் நாகமரக் கன்றுகளையும் 1,000 பழக் கன்றுகளையும் நடுதல் | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | கொடக்கவெல பிரதேச செயலகம் | 182,000 |
| 2017 ஆம் ஆண்டிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் பரிசொன்றாக ஒட்டு பலாமரக் கன்றொன்றை வழங்குதல் "சூட்டி பபாய் - பத் கசய்" கருத்திட்டம் | மொனராகலை மாவட்ட செயலகம் | மொனராகலை மாவட்டசெயலகம் | 396,000 |
| பேர்கஸன் உயர் மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் 4,300 பழக் கன்றுகள் வழங்கப்பட்டமை. | கமத்தொழில் திணைக்களம் | கமத்தொழில் திணைக்களம் | 972,800 |
| 2017 ஆம் ஆண்டில் வளர்க்கப்பட்ட 03 மில்லியன் கன்றுகளின் பராமரிப்பு | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 10,000,000 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து கிராமங்களின் வீட்டு வனச் செய்கை | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | லுணுகம்வெஹர பிரதேச செயலகம் | 130,600 |

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட/ செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப் பட்ட / செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 2017 வனச் செய்கை தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் சார்பில் தேவைப்படும் கன்றுகளை கொள்வனவு செய்தல் | மாவட்ட செயலாளர் - மொனராகலை, பதுளை, கேகாலை, காலி, மாத்தறை, அம்பாந் தோட்டை, கம்பஹா, களுத்துறை, அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், புத்தளம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மாத்தளை, நுவரெலியா | மாவட்ட செயலாளர் - மொனராகலை, பதுளை, கேகாலை, காலி, மாத்தறை, அம்பாந் தோட்டை, கம்பஹா, களுத்துறை, அநுராதபுரம், பொலன்நறுவை, குருநாகல், புத்தளம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மாத்தளை, நுவரெலியா | 20,531,050 |
| 2017 வனச் செய்கை தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்ட மாதம் சார்பில் கண்டி மாவட்ட செயலகத்திற்குத் தேவையான பழக் கன்றுகளை பெற்றுக் கொள்ளல் | கண்டி மாவட்ட செயலகம் | கண்டி மாவட்ட செயலகம் | 735,000 |
| அத்தாகல உயிரினப் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் இனங்களுக் கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் கருத்திட்டம் | மாவட்ட செயலாளர் மட்டக்களப்பு | மாவட்ட செயலாளர் மட்டக்களப்பு | 460,000 |
| ”நில்ல பிருனு ரட்டக்”- தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | திஸ்ஸமஹாராம பிரதேச செயலகம் | 200,000 |

### 1.3 நிலைபேறுடைய காணி முகாமைத்துவம்

அழிந்துபோயுள்ள நிலவளத்தை பாதுகாக்கும் நோக்கில் இலங்கையில் ஏற்பட்டுள்ள மண் அரிப்பினாலும் பல்வேறுபட்ட மாசடைதல்களினாலும் நிகழும் நில சேதங்களை தடுத்தல், நீரேந்து பிரதேசங்களை பாதுகாத்து நீர்வளத்தை பாதுகாத்தல், இரத்தினக்கல் சுரங்கங்கள், மணல் மற்றும் கல் உட்பட ஏனைய கனிமபடிவ வேலைத்தளங்கள், கரையோர பிரதேசங்கள் போன்றவற்றை முறைப்படுத்தி சுற்றாடல் முறைமைகளை புனரமைத்தல், காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ற கிராமங்களை இலங்கை முழுவதும் உருவாக்குதல், நில பயன்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை குறியிலக்காகக் கொண்டு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நிலைபேறுடைய காணி முகாமைத்துவத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

- ஹாயன சாயன
- சேம பூமி
- கனீம் பூமி சாயன
- தேசகுண அநுகுரு
- சார பூமி

**சனாதிபதி செயலணியினால் சேதமடைந்துள்ள நீர்வள மூலங்களையும் நீரேந்து பிரதேசங்களையும் முறையாக பாதுகாப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட பணிகள் - 2017**

சனாதிபதி செயலகத்தின் சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் உரிய சகல நிறுவனங்களும் இணைந்து இலங்கையில் நீரேந்து பிரதேசங்களை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதோடு, கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை ஆகிய ஆறு மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தும் போது "இலங்கைக்கான நீர்மூலவளங்கள், நீரேந்து பிரதேசங்களின் பாதுகாப்புத் தொடர்பிலான கூட்டு செயற்பாடு" என்னும் செயற்பாட்டுத் திட்டமானது தயாரிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் இந்த அலுவலகத்தினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து வெற்றிகரமாக நாட்டிலுள்ள பல மாவட்டங்களில் நீரேந்து பிரதேசங்களுக்கான பாதுகாப்பு கருத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் 23 மாவட்டங்களில் 216 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

அதேபோன்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளை இணைத்துக் கொண்டு பெருந்தோட்ட காணிகள் சார்ந்த நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று ஆம்பிக்கப்பட்டுள்ளதோடு, இதன் முதலாவது நிகழ்ச்சித்திட்டமானது இரத்தினபுரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டது. இதன் இரண்டாவது நிகழ்ச்சித்திட்டமானது 2017.05.02 ஆம் திகதியன்று கண்டி மாவட்டத்திலும் மூன்றாவது நிகழ்ச்சித்திட்டமானது 2017.06.02 ஆம் திகதியன்று பதுளை மாவட்டத்திலும் நான்காவது நிகழ்ச்சித்திட்டமானது 2017.07.03 ஆம் திகதியன்று மாத்தளை மாவட்டத்திலும் நடாத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் ஒற்றோபர் மாதத்தில் வரும் தேசிய மரநடுகை மாதத்திற்கு ஒருங்கிணைவாக மேற்கொள் ளப்பட்ட "வன ரோப்பா" தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தினதும் நீரேந்து பிரதேசங்களின் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களினதும் ஆரம்ப வைபவம் அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் 2017 ஒற்றோபர் மாம் 11 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கண்டி மாவட்டத்தின் தெல்தொட்ட பிரதேச செயலகப் பிரிவின் கந்தேதென்ன குள பிரதேசத்தில் நடாத்தப்பட்டது.

இங்கு வற்றிப்போகும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள கந்தேவத்த நீரேந்து பிரதேசத்தின் பாதுகாப்புக்கு 5,000 இற்கும் மேற்பட்ட கன்றுகளை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் சார்பில் பாடசாலை மாணவர்கள், பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பிரதேச வாசிகள் பெரும்பாலானோர் கலந்துகொண்டனர். கலந்துகொண்ட அனைவருக்கும் பழக் கன்றொன்றை வழங்குவதற்கும் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றாடல் என்னும் விடயத்திற்குரிய கற்கை உபகரணமொன்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.





பதுளை மாவட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2017.06.02





மாத்தளை மாவட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2017.07.03



நீரேந்து பிரதேசங்களின் பாதுகாப்பு











நீரேந்து பிரதேசங்களின் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்ட ஆரம்ப விழா, தெல்தொட்ட

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட/ செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப்பட்ட /செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| இரத்தினபுரி மாவட்ட கருத்திட்டப் பிரேரிப்புகள் | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | இரத்தினபுரி பிரதேச செயலகம் | 6,109,070 |
| வெளிஓயா நீரேந்து பிரதேச முகாமைத்துவம் சார்பில் திட்டமொன்றைத் தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 552,625 |
| நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, புத்தளம், குருநாகல், ஆகிய மாவட்டங் களில் மாதிரிக் கருத்திட்டங்களாக 20 ஏக்கர் வீதம் நீரேந்து பிரதேசம் சார்ந்து வனச் செய்கையை மேற்கொள்ளல் | நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு | தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம் | 2,745,786 |
| பொலன்னறுவை மாவட்ட கருத்திட்டப் பிரேரிப்பு | காணி அமைச்சு | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - பொலன்நறுவை | 833,900 |
| கண்டி மாவட்ட நீரேந்து பிரதேச மற்றும் நீர்வள முகாமைத்துவ கருத்திட்டப் பிரேரிப்பு | கண்டி மாவட்ட செலயகம் | கண்டி மாவட்ட செலயகம் | 3,635,000 |
| கேகாலை மாவட்ட நீரேந்து பிரதேச மற்றும் நீர்வள முகாமைத்துவ கருத்திட்டப் பிரேரிப்பு | காணி அமைச்சு | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - கேகாலை | 1,457,190 |
| பதுளை மாவட்ட கருத்திட்டப் பிரேரிப்பு | காணி அமைச்சு | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - பதுளை | 2,580,309 |
| மொனராகலை மாவட்ட கருத்திட்டப் பிரேரிப்பு | காணி அமைச்சு | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - மொனராகலை | 2,277,830 |

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட/ செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப்பட்ட /செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| மாத்தறை மாவட்ட கருத்திட்டப் பிரேரிப்பு | காணி அமைச்சு | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - மாத்தறை | 2,516,556 |
| கண்டி மாவட்ட கருத்திட்டப் பிரேரிப்பு | காணி அமைச்சு | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - கண்டி | 3,717,000 |
| நுவரெலியா மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்டப் பிரேரிப்பு | காணி அமைச்சு | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - நுவரெலியா | 1,530,633 |
| மாத்தளை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்டப் பிரேரிப்பு | காணி அமைச்சு | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - மாத்தளை | 4,247,405 |
| நீரேந்து பிரதேச பாதுகாப்பு செயலமர்வு - பதுளை மாவட்ட செயலகம் | பதுளை மாவட்ட செயலகம் | பதுளை மாவட்ட செயலகம் | 104,850 |
| நீரேந்து பிரதேச பாதுகாப்பு செயலமர்வு - கண்டி மாவட்ட செயலகம் | கண்டி மாவட்ட செயலகம் | கண்டி மாவட்ட செயலகம் | 39,375 |
| கந்தேதென்ன நீர்த்தேக்கம் சார்ந்த நீரேந்து பிரதேசத்தை பாதுகாத்தல் | கண்டி மாவட்ட செயலகம் | கண்டி மாவட்ட செயலகம் | 1,152,000 |
| ஒக்கேவெல மற்றும் ஹீனெட்டிஹத்தமுன கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் ஊடாக செல்லும் கிரம ஓயா இருமருங் கிலும் கமுகங் கன்றுகளை நடுதல் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | ஒக்கேவெல பிரதேச செயலகம் | 19,000 |
| நீரேந்து பிரதேச பாதுகாப்பு செயலமர்வு | மாத்தளை மாவட்ட செயலகம் | மாத்தளை மாவட்ட செயலகம் | 75,000 |
| கொழும்பு மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | மாவட்ட செயலாளர், கொழும்பு | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - கொழும்பு | 98,000 |
| களுத்துறை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | மாவட்ட செயலாளர், களுத்துறை | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - களுத்துறை | 4,310,595 |
| அம்பாந்தோட்டை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | மாவட்ட செயலாளர், அம்பாந்தோட்டை | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - அம்பாந்தோட்டை | 364,000 |
| மாத்தறை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | மாவட்ட செயலாளர், மாத்தறை | மாவட்ட காணி பயன்பாட்டு திட்ட அலுவலகம் - மாத்தறை | 456,550 |
| பாளுமக மேற்பகுதியின் நீர்வளமூல பாதுகாப்பு கருத்திட்டம் | கண்டி மாவட்ட செயலகம் | கண்டி மாவட்ட செயலகம் | 200,000 |

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட/ செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப்பட்ட /செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| தெற்கு மஹகம இயற்கை நீரூற்று நீர்வள மூல அபிவிருத்திக் கருத்திட்டம் | புத்தளம் மாவட்ட செயலகம் | மாதம்பே பிரதேச செயலகம் | 149,800 |
| கரையோர சுத்திகரிப்பு நிகழ்ச்சித்திட்டங் களை மேற்கொள்ளலும், கரையோரத் தாவரங்களை நடுதலும் | புத்தளம் மாவட்ட செயலகம் | மஹவெவ பிரதேச செயலகம் | 72,500 |
| ஹொரேவெல கிராம உத்தியோகத்தர் பிரிவின் மரநடுகை கருத்திட்டம் | மாவட்ட செயலாளர், அம்பாந்தோட்டை | வலஸ்முல்ல பிரதேச செயலகம் | 13,750 |
| நில அபிவிருத்தி, நில முகாமைத்துவம் - உடவெலபகுருகொல்லவத்த நீரேந்து பிரதேசம் | கண்டி மாவட்ட செயலகம் | கண்டி மாவட்ட செயலகம் | 1,253,800 |
| காலி மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | காலி மாவட்ட செயலகம் | காலி மாவட்ட செயலகம் | 2,404,620 |
| பதுளை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | பதுளை மாவட்ட செயலகம் | பதுளை மாவட்ட செயலகம் | 247,600 |
| கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | கிளிநொச்சி மாவட்ட செயலகம் | கிளிநொச்சி மாவட்ட செயலகம் | 925,705 |
| மாத்தளை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | மாத்தளை மாவட்ட செயலகம் | மாத்தளை மாவட்ட செயலகம் | 230,562 |
| இரத்தினபுரி மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | 818,600 |
| குருநாகல் மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | குருநாகல் மாவட்ட செயலகம் | குருநாகல் மாவட்ட செயலகம் | 416,585 |
| அம்பாறை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | அம்பாறை மாவட்ட செயலகம் | அம்பாறை மாவட்ட செயலகம் | 378,500 |
| ரந்தாகந்துர, ஹிப்பவெல கால்வாய் அணைகளை பாதுகாத்தல் | கண்டி மாவட்ட செயலகம் | கண்டி மாவட்ட செயலகம் | 30,600 |
| கேகாலை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | கேகாலை மாவட்ட செயலகம் | கேகாலை மாவட்ட செயலகம் | 339,000 |
| மட்டக்களப்பு மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | மட்டக்களப்பு மாவட்ட செயலகம் | மட்டக்களப்பு மாவட்ட செயலகம் | 415,500 |
| அம்பாந்தோட்டை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | 1,205,500 |
| புத்தளம் மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | புத்தளம் மாவட்ட செயலகம் | புத்தளம் மாவட்ட செயலகம் | 498,000 |
| கம்பஹா மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | கம்பஹா மாவட்ட செயலகம் | கம்பஹா மாவட்ட செயலகம் | 1,075,375 |
| திருகோணமலை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | திருகோணமலை மாவட்ட செயலகம் | திருகோணமலை மாவட்ட செயலகம் | 917250 |

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட/ செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப்பட்ட /செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் | யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் | 471000 |
| வவுனியா மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | வவுனியா மாவட்ட செயலகம் | வவுனியா மாவட்ட செயலகம் | 433000 |
| புத்தளம் மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | புத்தளம் மாவட்ட செயலகம் | புத்தளம் மாவட்ட செயலகம் | 100000 |
| மன்னார் மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | மன்னார் மாவட்ட செயலகம் | மன்னார் மாவட்ட செயலகம் | 324990 |
| யாழ்ப்பாணம் மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் | யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் | 874400 |
| களுத்துறை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | களுத்துறை மாவட்ட செயலகம் | களுத்துறை மாவட்ட செயலகம் | 80000 |
| மொனராகலை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு கருத்திட்ட பிரேரிப்பு | மொனராகலை மாவட்ட செயலகம் | மொனராகலை மாவட்ட செயலகம் | 2068179 |
| கந்தேதென்ன குள ஒதுக்கத்தில் கன்றுகளை நடுதலும் பராமரித்தலும் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 941525 |
| கலமுனேஆர கால்வாய் ஒதுக்கத்தினை பாதுகாத்தல் - தெமட்ட பஸ்ஸ கிராம உத்தியோகத்தர் பிரிவு | மாத்தறை மாவட்ட செயலகம் | மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் அலுவலகம் | 200000 |
| சிறிய அளவிலான நீர்ப்பாசனக் குளங்களை புனரமைக்கும் கருத்திட்டம் | கிளிநொச்சி மாவட்ட செயலகம் | மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் அலுவலகம் | 300000 |
| பசுமை விளைவுபெருக்க நிகழ்ச்சித்திட்டம் - சுற்றாடலில் இடப்படும் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | வவுனியா மாவட்ட செயலகம் | வவுனியா மாவட்ட செயலகம் | 26000 |
| ஹிகலதெனிய குளம் மற்றும் அதன் ஒதுக்கத்தை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டம் - கல்லிந்தமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவு | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் அலுவலகம் | 115000 |
| தொரகல பீக்கொக்ஹில் குள சார்ந்த பிரதேசத்தை பாதுகாக்கும் கருத்திட்டம் | கண்டி மாவட்ட செயலகம் | உடபலாத்த பிரதேச செயலகம் | 3026291 |
| கந்தேதென்ன குள ஒதுக்கத்தில் நடப்பட்ட வன கன்றுகள் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலியினை நிருமாணித்தல் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 200000 |
| ரெக்கவகுடா எல்லையினை குறித்து பாதுகாத்தல் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | தங்கல்லை பிரதேச செயலகம் | 1926250 |

### 1.4 வனவிலங்கு மனித மோதலைத் தவிர்த்தல் உயிரின வகைமைகளின் பாதுகாப்பும்

யானை - மனித மோதல் இல்லாத வலயங்கள் நிருமாணிக்கப்படுவதை குறியிலக்காகக் கொண்டு பின்வரும் நிகழ்ச்சித்திட்டமானது வனவிலங்கு மனித மோதலற்ற சூழலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- ஜனவரன - ரக்கவரன

அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள ஐந்து விசேட உயிரினங்களை பாதுகாப்பதற்கும் உயிரின வளங்களின் கொள்ளையை குறியிலக்காகக் கொண்டு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் உயிரினப் பாதுகாப்பு என்பதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள விசேட உயிரினங்களை பாதிகாக்கும் நிகழ்ச்சித்திட்டம்.
- உயிரின வளங்கள் ”பரண - வாரண” நிகழ்ச்சித்திட்டம்

மொத்த ”புனருதய” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான முன்னேற்றத்தின் தொடர் நடவடிக்கைகளின் நோக்கில் 2017.08.30 ஆம் திகதியன்று சனாதிபதி செயலகத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் வனவிலங்கு மனித மோதலைத் தவிர்த்தல், உயிரின வகைமைகளின் பாதுகாப்பு என்னும் துறைகளின் குறியிலக்கு நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், எதிர்கால திட்டங்கள் பற்றி உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டது. சனாதிபதி செயலகத்தினால் தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கும் இதன் போது உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.

### 1.5 நிறுவன மீளமைப்பும் மேம்பாடும்

சுற்றாடல் விடயத்தினை விரிவாகவும் அதேபோன்று விடயங்கள் ஒவ்வொன்றும் தொடர்புபடுவதினால் ஒவ்வொரு துறையிலும் கூடுதலாகவும் குறைவாகும் சுற்றாடல் கூறுகள் உள்ளமையினாலும் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் போது நிறுவனங்களின் கூட்டிணைப்பும் மற்றும் மேம்பாடு தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த நோக்கங்களை வெற்றி கொள்வதற்கு பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

- சுற்றாடல் குழு
- முறைமை மீள் நிருமாணம்
- ஜன அன்டஹரய

**சனாதிபதி செயலணியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட பணிகள் - 2017**

#### 1.5.1 சுற்றாடல் அறிவினை மேம்படுத்துதல்

தொடர்புபட்ட நிறுவனங்களுடன் இணைந்து விசேடமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகம் சம்பந்தமாக இதன்கீழ் பல்வேறுபட்ட கருத்திட்டங்களுக்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ள தோடு, இதன்கீழ் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தை பாடசாலை முறைமையினுள் பலப்படுத்துதல், சுற்றாடல் கல்வி தொடர்பிலான புதிய விடய சிபாரிசுக்கு அமைவாக அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கு அறியச் செய்வித்தல், பாடசாலை நூலகத்தில் சுற்றாடல் பிரிவொன்றைத் தாபித்தல், இம்முறை சனாதிபதி பதக்கம் வென்ற சுற்றாடல் தலைவர்களுக்கு உத்தேச இந்திய வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்குதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இதன்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது".

அதேபோன்று சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய ஊடக நோக்கங்களுக்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்குத் தேவையான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் அறிவினை மேம்படுத்துதல் - நிதி ஏற்பாடுகளை வழங்குதல் 2017

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட/ செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப்பட்ட /செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை பாடசாலை முறைமையினுள் பலப்படுத்துதல்<br>● பதக்கங்களைத் தயாரித்தல்<br>● குறிப்பு புத்தகங்களை அச்சிடுதல்<br>● சனாதிபதி பதக்க விழா | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மத்திய சுற்றாடல் அதிகார சபை | 2,900,000 |
| ”பளிசரு”கருத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய ஊடக செயற்பாடுகள் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மத்திய சுற்றாடல் அதிகார சபை | 5,000,000 |
| சுற்றாடல் கல்வி தொடர்பிலான புதிய விடய சிபாரிசுக்கு அமைவாக அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கு அறியச் செய்வித்தல், | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 10,000,000 |
| பாடசாலை நூலகத்தில் சுற்றாடல் பிரிவொன்றைத் தாபித்தல், | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 1,000,000 |
| சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தை பாடசாலை முறைமையினுள் பலப்படுத்துதல் (சுற்றாடல் முன்னோடி தொப்புகள் ஒரு இலட்சம்) | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 9,200,000 |
| சனாதிபதி பதக்கம் வென்ற சுற்றாடல் தலைவர்களுக்கு உத்தேச இந்திய வெளிநாட்டு புலமைப்பரிசில் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 1,800,000 |

### 1.5.2 சுற்றாடல் பாதுகாப்பும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலும்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மாவட்ட செயலகம் ஆகியவற்றின் ஊடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட சுற்றாடல் மாநாடு நடாத்துதலும் இதன்கீழ் மேற்கொள் ளப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டமாகும்.

கொழும்பு மாவட்ட சுற்றாடல் மாநாடானது 2017.06.20 ஆம் திகதியன்று மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் சபையின் பிரதான மண்டபத்தில் அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது. இதற்கு பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள், சுகாதார மருத்துவ உத்தியோகத் தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், அதிபர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அடங்கலாக சுமார் 2,000 அரசாங்க உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். அதே போன்று கம்பஹா மாவட்ட சுற்றாடல் மாநாடானது 2017.06.30 ஆம் திகதியன்று கம்பஹா ஸ்ரீபோதி மைதானத்தில் அதிமேதகைய சனாதிபதி அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது. இதற்கு பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் பொது சுகாதார பரிசோதகர்கள், அதிபர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அடங்கலாக சுமார் 5,000 அரசாங்க உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். அதேபோன்று இந்தக் காலப்பகுதியில் தீவிர பிரச்சினையொன்றாக நிலவிய கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்குநோய் தொடர்பில் அரசாங்க உத்தியோகத்தர்களை அறியச் செய்விப்பதும் இந்த சுற்றாடல் மாநாட்டின் நோக்கமாகவிருந்தது. இங்கு டெங்குநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு சார்பில் உரிய தரப்புகளுக்கிடையிலான நிகழ்ச்சித்திட்டம் பற்றியும் பாடசாலை முறைமையில் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது

பற்றியும் கழிவு முகாமைத்துவம் பற்றியும் துறைசார்ந்த நிபுணர்களின் விரிவுரைகள் நடாத்தப்பட்டன. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் கழிவு முகாமைத்துவம், டெங்குநோய் ஒழிப்பு என்பவற்றுக்குத் தேவையான வழிகாட்டல்களும் ஒருங்கிணைப்பும் இந்த மாநாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணியாகும்.










கம்பஹா மாவட்ட சுற்றாடல் குழு

### 02. போதைவஸ்து தடை மீதான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

போதை வஸ்து தடை மீதான சனாதிபதி சிறப்புப் பணிப்படை யானது போதை வஸ்து தடை மீதான அரசாங்க நிறுவனங் களினதும் அரசாங்கம் சாராத நிறுவனங்களினதும் கூட்டுப்பங்குபற்று தலுடன் 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. போதை வஸ்து தடை மீதான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் சகல கண்காணித்தல் மற்றும் கூட்டிணைப்புப் பணிகள் சிறப்புப் பணிப்படையினால் நிறைவேற்றப்படு கின்றன.

**சுற்றாடல் பாதுகாப்பும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலும் - நிதி ஏற்பாடுகளை வழங்குதல் 2017**

| விடயம் | நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட/ செலுத்தப்பட்ட நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் | விடுவிக்கப்பட்ட /செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| ”பாதுகாப்போம் சுற்றாடலை பாதுகாப்போம் பொது சொத்துக்களை”கருத்திடடம் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | 124,425 |
| தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படும் ”அனைவருக்கும் இல்லம்” மாதிரி கிராமங் களில் சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச் சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | 150,150 |
| நிலைபேறுடைய சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய மாநாட்டையும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தையும் நடாத்துதல் | மாவட்ட செயலாளர், மன்னார் | மாவட்ட செயலாளர், மன்னார் | 125,800 |
| சிவனொளிபாதமலை யாத்திரிகர்களுக்கு அறியச் செய்விப்பதற்காக மல்டிமீடிய புரொஜக்டர் இயந்திரம் ஒன்று தொழிற்பாட்டு முறைமையுடனான கணனி இயந்திர மொன்று மற்றும் வோல் மண்ட் திரை யொன்று என்பவற்றைப் பெற்றுக் கொள்ளல். | நுவரெலியா மாவட்ட செயலகம் | நுவரெலியா மாவட்ட செயலகம் | 176,645 |
| ”அனைவருக்கும் இல்லம்”வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் நிருமாணிக்கப்பட்ட ஆறு மாதிரி கிராமங்களில் மரநடுகை மற்றும் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | அம்பாந்தோட்டை பிரதேச செயலகம் | 3,304,020 |
| ”அனைவருக்கும் இல்லம்”வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டததின் கீழ் நிருமாணிக்கப்பட்ட சத்திரகம மாதிரி கிராமத்தில் மரநடுகை மற்றும் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | தங்கல்ல பிரதேச செயலகம் | 573,350 |
| சிறிய அளவிலான விலங்கு பண்ணைகளை நிலையாக அபிவிருத்தி செய்வதற்காக உயிரியல் வாயு பிறப்பாக்கிகளை நிருமாணித்தல் | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | லுணுகம்வெஹர பிரதேச செயலகம் | 389,661 |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டங்களில் ஒட்டு பலா மரங்களை நடுதல் | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | குருவிட்ட பிரதேச செயலகம் | 386,180 |



21 - CM 26894

2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சட்டவிரோதமான போதை வஸ்துக்களின் உற்பத்தியையும் சட்ட விரோதக் கடத்தலையும் விற்பனையையும் 80 நூற்றுவீதத்தினாலும் போதைவஸ்துக்களின் தலைக்குரிய பயன் படுத்துகையை 25 நூற்றுவீதத்தினாலும் புகையிலை உற்பத்தியை 50 நூற்றுவீதத்தினாலும் 2020ஆம் ஆண்டில் இலங்கையில் குறைத்தலே போதைவஸ்து தடை மீதான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் முதனிலை இலக்காகும். இதற்கமைவாக இந்த நிகழ்ச்சித் திட்டமானது போதைவஸ்துக்களின் தேவைப்பாடு மற்றும் வழங்கல் ஆகிய இரண்டு விடயங்களையும் குறைப்பது மீது தீவிர கவனம் செலுத்தப்பட்டு இந்த நிகழ்ச்சித் திட்டமானது பின்வரும் மூன்று விடயங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

1. கொள்கைகளையும் ஒழுங்கு விதிகளையும் வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும் திடீர்ச் சோதனைகள் செய்தலும்
2. பரிகாரங்களும் புனர்வாழ்வளித்தலும்
3. தடைசெய்தல்

**2.1 கொள்கைகளையும் ஒழுங்கு விதிகளையும் வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும் திடீர்ச் சோதனை செய்தலும்**

இலங்கையில் சட்டவிரோத போதைவஸ்துக்களை உற்பத்தி செய்தல், சட்டவிரோதமாக கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பில் ஏற்கனவேயுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு உரிய நேரத்தில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களையும் உள்ளடக்கி தேவைப்படும் கொள்கை மற்றும் சட்ட திருத்தங்களையும் பிற போதைவஸ்து பயன்படுத்தலையும் குறைப்பதற்குத் தேவையான சட்ட நடவடிக்கை களை மேற்கொள்ளுதல் ஆகியன போதைவஸ்துக்களைத் தடை செய்வதற்கான சனாதிபதி சிறப்புப் பணி யினால் நிறைவேற்றப்படும் சிறப்புப் பணிகளாகும்.

**2.1.1 முப்படைகளினதும் பொலிசாரினதும் செயலாற்றுகை**

போதைவஸ்துகளைப் பெறுவதற்கு கிடைக்கின்ற சுலபமான அணுகல் முறை இந்நாட்டில் போதைவஸ்துப் பயன்படுத்துகை அதிகரிப்பதற்கு கிடைக்கின்ற முதன்மையான காரணிகளில் ஒன்றாகவிருக்கின்றது. எனவே போதைவஸ்துகளின் தடை மீதான சனாதிபதி சிறப்புப் பணியணிப் படையானது திடீர் எழுச்சிகளை ஆகக் குறைக்கும் நோக்குடன் போதைவஸ்து தொடர்பிலான திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதற்கு நிலவுகின்ற விடயங்களை அகற்றுவதற்கும் திடீர்ச் சோதனை முறைகளை ஊக்குவிப்பதற்கும் வசதியளிப்பவராகத் தொழிற்படுகின்றது.

படைகளினாலும் இலங்கைப் பொலிசாரினாலும் தொடர்புடைய அமைப்புகளினாலும் 2017ஆம் ஆண்டில் போதைவஸ்துகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனைகளும் பறிமுதல்களும் பின்வருமாறு:

**பொலிசு சிறப்புப் பணியணிப் படையினால் செய்யப்பட்ட பறிமுதல்களின் விவரங்கள் (2017.01.01 லிருந்து 2017.11.21 வரை)**

| போதைவஸ்து | கைப்பற்றல்கள் | சந்தேக நபர்கள் | அளவு | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| ஹெரோயின் | 247 | 264 | 5,257.337 (g) | 52,573,370.00 |
| சிகரெட்டுகள் | 46 | 47 | 643,882(g) | 8,783,100.00 |
| கள்ளமாகவடிக்கப்பட்ட மதுபானங்கள் | 539 | 587 | 16,340.093 (l) | 7,630,823.43 |
| வெளிநாட்டு மதுபானங்கள் | 13 | 27 | 7,930.000 (l) | 71,507,980.00 |
| உள்நாட்டுச் சாரா யங்கள் | 53 | 56 | 545 (bott) | 383,406.50 |
| மயக்க மருந்துகள் | 19 | 20 | 822 | 1,165,130.00 |
| மயக்க வில்லைகள் | | | 10,306 | |
| கஞ்சா | 434 | 365 | 152.092 (kg) | 78,412,864.69 |
| கேரள கஞ்சா | | | 550,529 | |
| **மொத்தம்** | **1,351** | **1,366** | | **220,456,674.62** |

போதைவஸ்துகள் தொடர்பிலான கைப்பற்றல்கள் (2017.01.01லிருந்து 2017.11.20 வரை)

| போதைவஸ்து / நிறுவகம் | ஹெரோயின் | | கஞ்சா | | கோக்கெயின் | | ஹாசீஸ் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | விடயங்களின் எண்ணிக்கை | அளவு கி.கி | விடயங்களின் எண்ணிக்கை | அளவு கி.கி | விடயங்களின் எண்ணிக்கை | அளவு கி.கி | விடயங்களின் எண்ணிக்கை | அளவு கி.கி |
| போலிஸ் போதைவஸ்து பணியகம் | 169 | 22.852 | 48 | 188.343 | 1 | 2.50 | 4 | 0.285 |
| நாடுபூராவிலுமுள்ள பொலிசு நிலையங்கள் | 25, 216 | 234.37 | 44,627 | 3433.851 | 14 | 218.639 | 27 | 3.400 |
| ஊழலுக்கு எதிரான பிரிவு வலானை | 95 | 0.59 | 35 | 57.676 | - | - | - | - |
| குற்றவியல் பிரிவு கொழும்பு | 355 | 17.449 | 75 | 6.396 | - | - | - | - |
| சிறைச்சாலைகள் | 2 | 0.140 | 1 | 0.110 | - | - | - | - |
| இலங்கை சுங்கத் திணைக்களம் | 8 | 8.651 | 0 | 0 | - | - | - | - |
| இலங்கை கடற்படை | 3 | 27.700 | 5 | 326.300 | - | - | - | - |
| **மொத்தம்** | 25,848 | 311.752 | 44,791 | 4012.676 | 15 | 221.139 | 31 | 3.685 |

### 2.1.2 பிற பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுமாறு கமக்காரர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குதல்

கமக்காரர்களுக்கிடையே புகையிலை பயிர்ச் செய்கையில் தையரியத்தை ஏற்படுத்துவதற்காக கமத் தொழில் திணைக்களத்தினதும் கமத்தொழில் அமைச்சினதும் வழிகாட்டுதலுடன் சனாதிபதி சிறப்புப் பணியணிப் படையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இவை இரண்டும் புகையிலை உற்பத்தி செய்யும் கமக்காரர்களுக்கு புகையிலையை விடக் கூடுதலான கவர்ச்சிகரமான பயிர்களை உற்பத்தி செய்வதற்காக அவற்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

ஏறத்தாழ 2,000 ஹெக்டயர்கள் இடப்பரப்பில் புகையிலைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுகின்ற கமக் காரர்களை 2020 ஆம் ஆண்டளவில் பிற பயிர்களை உற்பத்தி செய்பவர்களாக படிப்படியாக மாற்றமடையச் செய்வதன் பொருட்டு கமத்தொழில் அமைச்சுடன் இணைந்து கமத்தொழில் திணைக்களத்தினால் மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துவதற்கும் அவர்களை நெல், மிளகாய், கௌபீ, பயறு மற்றும் குரக்கன் ஆகிய பயிர்களை புகையிலைப் பயிருக்கு பதிலாக வளர்ப்பதில் ஈடுபடுமாறு ஊக்குவிப்பதன் பொருட்டு சனாதிபதி அலுவலகத்தில் 2017.08.29 ஆந் திகதியன்று மு.ப. 9.00 மணியளவில் நடாத்தப்பட்ட விசேட கலந்துரை யாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக விசேட கருத்திட்டமொன்று ஒழுங்குபடுத்தப்படு கின்றது. இந்த ஆண்டிற்குள் இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### 2.1.3. தேசிய கொள்கையையும் கட்டமைப்பையும் நடைமுறைப்படுத்தல்

தேசிய கொள்கை மற்றம் கட்டமைப்பின் பிரகாரம் அரசாங்க அமைச்சுகளினாலும் திணைக்களங்களினாலும் அநேக பிற அமைப்புகளினாலும் நேரடியான பொறுப்புகள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமென்பதுடன் இவற்றின் மூலமாக சகல அரசாங்கங்களினாலும் போதைவஸ்து தடை நடைமுறையைப் பலப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க் கப்படுகின்றது.





### 2.1.4. புலன் விசாரணை பரிமாற்றத்திற்காக தெற்காசிய பிராந்திய நிலையத்தை நிறுவுதல்

சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடனும் போதைவஸ்துகள் மற்றும் குற்றம் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகத்துடனும் அநேக தெற்காசிய நாடுகளுடனும் 2017 நவம்பர் 27ஆம் 28ஆம் திகதிகளில் இரண்டு நாட்கள் விசேட கலந்துரையாடல்களைச் செய்துள்ளதுடன் கொழும்பில் புலன் விசாரணை பரிமாற்றத்திற்கான தெற்காசிய பிராந்திய நிலையத்தை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### 2.2 பரிகாரங்களும் புனர்வாழ்வளித்தல்களும்

சனாதிபதி சிறப்புப் பணிப்படையானது நாடு பூராவிலுமுள்ள போதைவஸ்து பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தொடர்பில் புனர்வாழ்வளித்தல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் பொருளடக்கம் மீது இயைபுள்ள அவதானிப்புரைகளைச் செய்வதிலும் அவற்றிற்கு தேவையான ஏற்பாடுகளை வழங்குவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

#### 2.2.1. புனர்வாழ்வளித்தல் நிலையங்களில் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மீது அவதானிப்புரைகளைச் செய்தலும் அவற்றிற்கு தேவையான ஏற்பாடுகளை வழங்குதலும்

| புனர்வாழ்வளித்தல் நிலையம் | நிகழ்ச்சித்திட்டத் திகதி | பங்குபற்றுதல் |
|---|---|---|
| | 26.06.2017 | 48 வதிவாளர்கள் |
| இளம் குற்றவாளிகளின் சீர்திருத்த நிலையம் (நீர் கொழும்பு) | 21.08.2017 – 30.08.2017 | 45 வதிவாளர்கள் |
| ஜயவிரு சமாதி இல்லம், போதைவஸ்துக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வளிப்பு நிலையம் | 15.09.2017 – 25.07.2017 | 50 வதிவாளர்கள் |
| **மொத்தம்** | | **143 வதிவாளர்கள்** |





இதைப்போலவே நந்தகாடு புனர்வாழ்வளித்தல் நிலையமானது போதைவஸ்து தடை பற்றிய சனாதிபதி சிறப்புப்பணிப் படையினதும் புனர்வாழ்வளிப்புப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகத்தினதும் நேரடி மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படுகின்றது. இந்த புனர்வாழ்வளிப்பு நிலையங்கள் அனைத்திற்கும் தேவையான மனித மற்றும் பௌதிக வளங்களின் வழங்கலும் இயைபுள்ள அமைச்சுகளுடனான நேரடியான கூட்டிணைப்பும் போதைவஸ்து தடை மீதான சனாதிபதி சிறப்புப் பணிப்படையினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படுகின்றது.

#### 2.2.2. சட்ட மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகள் மீதான விசேட கலந்துரையாடல்

போதைவஸ்து தவறுகள் தொடர்பிலான சிறைக்கைதிகளின் விடயத்தில் எடுக்கப்பட்ட சட்ட மற்றம் புனர்வாழ்வு முயற்சிகள் மீதான கலந்துரையாடல் 2017.10.30ஆந் திகதியன்று சனாதிபதியின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த அமர்வில் இந்த விடயங்களை நிவர்த்தி செய்வதற்கும் மற்றும் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலான அறிவுறுத்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

2.3. தடை

2.3.1. மாவட்ட மட்டத்திலான விசேட போதைவஸ்து தடை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

2016ஆம் ஆண்டில் “போதைவஸ்து பாவனையற்ற நாடு” என்ற தொனிப் பொருள் மீது எட்டு மாவட்ட மட்டத்திலான தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் (கம்பஹா, காலி, கேகாலை, கொழும்பு, குருணாகல், நுவரேலியா, புத்தளம் மற்றும் யாழ்பாணம்) நடாத்தப்பட்டுள்ளதுடன் பாணந்துறை நகர சபை மைதானத்தில் 2017.07.19ஆந் திகதியன்று களுத்துறை மாவட்டத்தையும் உள்ளடக்கி போதைவஸ்து தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டுள்ளது.





போதைவஸ்து பயன்படுத்துகையினால் ஏற்படும் மோசமான விளைவுகளைப் பற்றியும் அது தடுக்கப்படுவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் பற்றியும் சமூகங்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட்டதுடன் மதுபான மற்றும் சிகரெட் கம்பனிகளினால் வெளியிடப்படும் பொய் விளம்பரங்களுக்கு எதிராகவும் சமூகங்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட்டதுடன் சமூகங்கள் இவற்றின் பயன்படுத்துகையினால் ஏற்படும் தீங்குவிளைவு பற்றி அவர்களுக்கு விளக்கமளித்து அவற்றை பயன்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்குமாறு மாவட்ட மட்டத்தில் செய்யப்பட்ட பிரசாரங்கள் மூலம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்

2.3.2. மாவட்ட, பிராந்திய மற்றும் கிராம மட்டத்திலான போதை வஸ்து தடைசெய்தல் குழுக்கள்

இந்நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் போதைவஸ்து தடை செய்தல் குழுக்கள் நிறுவப்பட்டுள்ள வேளையில் 331 பிராந்திய மட்ட போதைவஸ்து தடை செய்தல் குழுக்களும் உள்ளன. கிராம மட்டக் குழுக்களின் பணிகள் பிரதேசச் செயலாளர்களினால் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அதே வேளையில் பிராந்திய குழுக்களின் பணிகள் மாவட்ட குழுக்களினால் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இக்குழுக்களின் நோக்கம் போதைவஸ்து இல்லாத வீட்டை உருவாக்குவதுடன் “போதைவஸ்து இல்லாத கிராமத்தை உருவாக்குவதுமாகும் என்பதுடன் இவற்றைச் செய்துமுடித்தவுடன் இறுதியாக “போதைவஸ்து இல்லாத நாட்டை” உருவாக்குவதாகும். இந்த இலக்கை எய்தும் நோக்குடன் சமூகங்களுக்கு போதைவஸ்து பாவனையின் தீயவிளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வு ஊட்டப்பட்டுள்ளது. அத்துடன் மதுபானக் கம்பனிகளினாலும் சிகரெட் கம்பனிகளினால் வெளியிடப்படும் பொய் விளம்பரங்களைப் பற்றிய விழிப்புணர்வும் ஊட்டப்பட்டுள்ளதுடன் இச்சமூகங்களுக்கு இந்த மாவட்ட பிரசாரங்களில் போதைவஸ்துக்களின் பாவனையினால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி விளங்கிக் கொண்டு அவற்றை பாவிப்பதற்கு மறுக்குமாறு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

போதைவஸ்து தடை பிரசாரங்கள் (2017)





| தொடர் இல | மாவட்டம் | இந்த நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்ட பிரதேசச் செயலாளர்களின் பிரிவுகள் | இந்த நிகழ்ச்சித்திட்டம் நிறைவேற்றப்பட்ட கிராம சேவகர்கள் பிரிவுகளின் எண்ணிக்கை | பங்குபற்றுதல் |
|---|---|---|---|---|
| 01 | கண்டி | 01 | 80 | 4241 |
| 02 | களுத்துறை | 14 | 762 | 23021 |
| 03 | இரத்தினபுரி | 02 | 74 | 9487 |
| 04 | பொலன்னறுவை | 01 | 45 | 1416 |
| 05 | மாத்தளை | 01 | 39 | 1462 |
| 06 | பதுளை | 01 | 35 | 1280 |
| 07 | மட்டகளப்பு | 01 | 17 | 1278 |
| 08 | குருணாகல் | 04 | 171 | 5416 |
| 09 | புத்தளம் | 16 | 548 | 26558 |
| 10 | அனுராதபுரம் | 06 | 243 | 7505 |
| **மொத்தம்** | | **47** | **2014** | **81,664** |

### 2.3.3. போதைவஸ்துகள் தடுப்பு தொழினுட்பக் குழுமம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் என்னவெனில் போதைவஸ்து தடைசெய்தல் பற்றிய விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அறிவுடைய போதைவஸ்து தடைசெய்தல் குழுக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயிற்சி அளிப்பவர்கள் தொகுதியொன்றின் மூலமாக சமூகமானது போதைவஸ்துகள் பயன்படுத்துவதை கட்டாயமாக தடைசெய்தலை நடைமுறைப்படுத்தல் என்பதாகும்.

தற்போது பயிற்சியளிக்கும் குழுமமானது பயிற்சி அளிப்பவர்களையும் 1986 (333X6) பிராந்திய மட்டத் திலான பயிற்சி அளிப்பவர்களையும் 70,110 (14X022X5) கிராம மட்டத்திலான பயிற்சி அளிப்பவர்களையும் கொண்டுள்ளது.




### 2.3.4. போதைவஸ்துகள் தடை செய்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் இராணுவ ஆளணியினர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி

போதைவஸ்து தடை செய்தல் பிரசாரங்களை நடைமுறைப்படுத்துவதில் பயிற்சியளிப்பவர்களைப் பயன்படுத்துவதற்காக சனாதிபதி சிறப்புப் பணிப்படையணியைச் சேர்ந்த 56 தரைப்படை ஆளணியினர் களுக்கும் 100 விமானப்படை ஆளணியினர்களுக்கும் 96 கடற்படை ஆளணியினர்களுக்கும் பயிற்சி யளித்தல் அமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.






**2.3.5. சனாதிபதி அலுவலகத்தினால் போதைவஸ்துகளைத் தடை செய்தல் தொடர்பில் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகளும் விசேட ஆவணங்களும்**

- சர்வதேச புகையிலை பாவித்தல் தடைசெய்தல் தினத்தில் விடுக்கப்பட்ட பிரகடனம் (சகல செயலாளர்களுக்கும்) - சுற்றறிக்கை இல. SP/DSP/DP/13/17
- சர்வதேச புகையிலை பாவித்தல் தடைசெய்தல் தினத்தில் விடுக்கப்பட்ட பிரகடனம் (சகல அரசாங்க நிறுவனங்களுக்கும்) - சுற்றறிக்கை இல. SP/DSP/DP/14/17
- போதைவஸ்து தடைசெய்தல் கொள்கை மற்றும் அதன் கட்டமைப்பு ஆகியவற்றின் கீழ் மாவட்ட நிருவாகத்தினதும் பிரதேச நிருவாகத்தினதும் வகிபாகமும் அதன் கட்டமைப்பும் கடிதம் இல. HAF/மேலதிகச் செயலாளர்/01/போதைவஸ்துகள்
- சமூக பொலிஸ் குழுவை கிராம போதைவஸ்துகள் தடைசெய்தல் குழுவாகப் பலப்படுத்துதல். சுற்றறிக்கை இல. SP/DSP/DP/14/17

**2.3.6. பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் போதைவஸ்து தடைசெய்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

- நாடு முழுவதிலும் “நிலைபேற்று நிலை பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்” கீழ் 3409 நிலை பேற்று நிலை பாடசாலைக் குழுக்களை உருவாக்கியதன் மூலம் 3409 போதைவஸ்து தடை செய்தல் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. 3409பாடசாலைகளில் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஆசிரிய ரொருவருக்கும் பாடசாலை அதிபருக்கும் போதைவஸ்து தடைசெய்தல் மீது விசேட பயிற்சி வழங்கப் பட்டுள்ளது.
- பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் போதைவஸ்து தடைசெய்தல் பிரசாரங்களுக்கான வளங்களை வழங்குதல்.

போதைவஸ்து தடைசெய்தல் பற்றிய சனாதிபதி சிறப்புப் பணிபடைக்கு நாடு முழுவதிலும் ஒழுங்குபடுத்தப்படும் போதைவஸ்து தடைசெய்தல் பிரசாரங்களுக்கான வளங்களை வழங்கும் சிறப்புப் பணி குறித்தொதுக்கப்பட்டுள்ளது. இந்த பிரசாரங்களில் மாணவர்களுக்கு போதைவஸ்து பயன்படுத்தலின் தீங்கு விளைவுகள் பற்றியும் அவற்றை பாவிப்பதை தவிர்ப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் பற்றியும் மதுபானம் மற்றும் புகையிலைக் கம்பனிகளினால் இவை பற்றி ஊடகங்களில் விடுவிக்கப்படும் வெளியீடுகள் மற்றும் விளம்பரங்கள் மூலம் வழங்கப்படும் ஊக்குவிப்பு மற்றும் பொய்யான தகவல்கள் பற்றி அறிவிக்கப்படுகின்றது.

**வழங்கப்பட்ட வளங்களுடன் பாடசாலைகளில் நடாத்தப்பட்ட போதைவஸ்து தடை நிகழ்ச்சித்திட்டங்கள்**

| திகதி | நிகழ்ச்சி நடாத்தப்பட்ட இடம் | பங்குபற்றிய மாணவர்கள் |
|---|---|---|
| 08.04.2017 | கேற்வே கல்லூரி, கண்டி (றொற்றராக்ட் யூனியன்) | 100 |
| 16.05.2017 | ரோயல் கல்லூரி புதிய கலைகள் மண்டபம் (செஞ்சிலுவைச் சங்கம்) | 1000 |
| 04.06.2017 | மகியங்கனை பொது மைதானம் | 2000 |
| 03.07.2017 | டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி, கொழும்பு - பிரதான மண்டபம் (போதைவஸ்து தடைசெய்தல் சங்கம்) | 400 |
| 04.07.2017 | அவிஸ்சாவளை சீதவாக்க மத்திய கல்லூரி 9/10ஆம் தர மாணவர்கள் | 700 |
| 04.07.2017 | அவிஸ்சாவளை மத்திய கல்லூரி தரம் 12/13 மாணவர்கள் | 100 |
| 05.07.2017 | டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி, கொழும்பு- பிரதான மண்டபம் (போதைவஸ்து தடைசெய்தல் சங்கம்) | 250 |
| 06.07.2017 | டபிள்யு/ஹோமாகம/ ஸ்ரீபியரத்ன மத்திய கல்லூரி - தரம் 8,9,10 மாணவர்கள் | 400 |
| 06.07.2017 | டபிள்யு/ஹோமாகம/ ஸ்ரீபியரத்ன மத்திய கல்லூரி – 12ஆம் 13ஆம் தர மாணவர்கள் | 200 |
| 24.07.2017 | டபிள்யு/களனி/பியகம மத்திய கல்லூரி – தரம் 10,11 மாணவர்கள் | 200 |
| 27.07.2017 | டபிள்யு/தெல்/கும்புக்கொல்ல கனிட்ட பாடசாலை – முதனிலை மாணவர்கள் | 20 |
| 22.09.2017 | டபிள்யு/Be/படகொட மகா வித்தியாலயம் | 400 |







மேலும் சரியான பாதையில் பாடசாலை போதைவஸ்து தடை செய்தல் குழுக்கள் விளைபயனுள்ள தடை செய்தல் நடைமுறையில் செல்வதற்கு வழிகாட்டும் நோக்குடன் பாடசாலை போதைவஸ்து தடைசெய்தல் மீதான அறிவுறுத்துரைக் கைநூலும் கூட தொகுக்கப்பட்டுள்ளது.





**2.3.7 தேசிய பயில் இளவல்கள் குழுவினதும் இலங்கை சாரணர்கள் சங்கத்தினதும் உதவியுடன் பாடசாலை சமூகத்திற்கிடையே போதைவஸ்து தடை செய்தலை ஊக்குவித்தல்**

இதன் நோக்கம் என்னவெனில் பாடசாலைகளிலுள்ள சுறுசுறுப்பானவர்களும் கவர்ச்சிகரமானவர்களாகவுமுள்ள மாணவர்கள் மூலமாக போதைவஸ்துகளின் தடை செய்தல் மீது பாடசாலைச் சமூகத்திற்கு ஊக்குவிப்பு வழங்குதல் என்பதாகும். இதற்கமைவாக தேசிய பயில் இளவல்கள் குழுவினதும் இலங்கை சாரணர்கள் சங்கத்தினதும் பாடத்திட்டத்திற்குள் போதைவஸ்துக்கள் தடை செய்தல் விடயத்தை அறிமுகப்படுத்தும் மாணவ உறுப்பினர்களுக்கு ஊக்கமளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்தொடர்பில் பயிலிளவல்கள் குழு அறிவுறுத்துரையாளர்களுக்கான பயிற்சியளித்தல் அமர்வுகளும் ரன்தம்பே முகாம் போன்ற விசேட நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.






### 2.3.8 புதிய பல்கலைக்கழகங்களுக்கான நுழைவு மாணவர்கள்

பல்கலைக்கழகங்களுக்கான 5,700 புதிய நுழைவு மாணவர்களுக்கு போதைவஸ்துக்களின் பயன்படுத்துகையின் விளைவுகள் பற்றியும் அதைத்தடுப்பதற்கான வழிவகைகள் பற்றியும் 2016ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்களின் 16 தொடர்கள் நடாத்தி அறிவிக்கப்பட்டதுடன் இத்தொடர்பில் 2017ஆம் ஆண்டில் இரண்டு நிகழ்ச்சித்திட்டங் களும் நடாத்தப்பட்டுள்ளன. இவற்றில் 900 பட்டதாரி மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர்.





புதிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு 2017ஆம் ஆண்டில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

| திகதி | மாவட்டம் | நடாத்தப்பட்ட இடம் | பங்குபற்றியவர்கள் | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 06.01.2017 | கொழும்பு | இளைஞர் மத்திய நிலையம் | 400 | 138,500.00 |
| 07.01.2017 | மாத்தறை | பௌத்த கல்லூரி மாத்தறை | 500 | 415,100.00 |
| பங்குபற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை மொத்த செலவு | | | 900 | 553,600.00 |

### 2.3.9. தர்ம பாடசாலைகளிலுள்ள கலன மித்துறு சமூகம் மூலமாக மாணவர்களைப் பலப்படுத்துதல்

இந்த நிகழ்ச்சித்திட்டமானது புத்தரின் சிறந்த குணவியல்புகளையுடைய தர்மபாடசாலை மாணவர்களின் தலைமைத்துவம் மூலமாக போதைவஸ்துகள் பயன்படுத்தாதவர்களுடனும் நட்புறவை ஏற்படுத்தும் குறிக் கோளுடன் பௌத்த சாசன அமைச்சினாலும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினாலும் சாசனரக்ஷக கூட்டவையினாலும் ஓர் துணிகர முயற்சியாக மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சரியான பாதையில் விளைபயனுள்ள தடை செய்தல் நடைமுறையில் முன்னேறிச் செல்வதற்கு கலன மித்துறு குழுக்களுக்கு வழிகாட்டும் நோக்குடன் தர்ம பாடசாலை போதைவஸ்து தடை செய்தல் மீது அறிவுறுத்துரைக் கைந்நூலொன்றும்கூட தொகுக்கப்பட்டுள்ளது.





### 2.3.10 விசேட நிகழ்ச்சிகளின் தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- “போதைவஸ்துகள் இல்லாத நாடு” கால்நடை பவனியும் தேசிய பட்டங்கள் பறத்தல் விழாவும்

போதைவஸ்துகள் தடை செய்தல் பற்றிய சனாதிபதி சிறப்புப் பணிப்படையானது ரோட்டரி களரியுடனும் கைற் சிறீலங்காவுடனும் இணைந்து தேசிய பட்டம் பறத்தல் விழாவையும் கால்நடை பவனி நிகழ்ச்சியையும் 2016 ஒகத்து 28ஆந் திகதியன்று நடாத்தியுள்ளது. இதே விழா 2017ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 12ஆம் 13ஆம் திகதிகளில் நீர்கொழும்பு கடற்கரையில் நடாத்தப்பட்டது.






- **உலக புகையிலை பாவனை தடைசெய்தல் தினத்திற்குச் சமாந்தரமாக மே மாதம் 31ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட சமாந்தரமான நிகழ்ச்சித் திட்டங்கள்**

போதைவஸ்து தடைசெய்தல் தொனிப்பொருள் மீது ஓர் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன் இத்தொனிப் பொருள் மீது நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்யுமாறும் வடிவமைக்கப்பட்ட கொடிகள் மற்றும் சுவரொட்டிகளை காட்சிக்கு வைக்குமாறும் அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுமுள்ளன. இதற்கிடையில் போதைவஸ்துக்களை தடை செய்தல் மீதான வேலைக்களங்கள் அநேக நிறுவனங்களில் நடாத்தப் பட்டுள்ளன.









- **போயா தினம் மற்றும் கதிர்காம ஊர்வலம் போன்ற நிகழ்வுகளுக்கு சமாந்தரமான நிகழ்ச்சித்திட்டங்கள்**

அனுராதபுரம் பொசன் வலயத்தை போதை வஸ்துகள் இல்லாத வலயமாக்குவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் கொடிகளும் சுவரொட்டிகளும் மற்றும் வீதி நாடகங்களும் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் சட்டத்தை மீறியவர்களுக்கு எதிராக கண்டிப்பான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

கதிர்காமம் ஆலயத்திலும் கண்டி தலதா மாளிகையிலும் நடாத்தப்படும் வருடாந்த எசல ஊர்வலங்கள் போன்ற நிகழ்ச்சிகளில் சமகாலத்தில் போதைவஸ்துகள் தடைசெய்தல் பிரசாரங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

- **அரசாங்கம் சாராத நிறுவனங்களுடனும் மற்றும் சருவதேச அமைப்புகளுடனுமான உடனுழைப்பு**

உலக சுகாதார அமைப்பு, ஐக்கிய நாடுகள் அமைப்பின் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் போதைவஸ்துகள் தகவல் நிலையம், இலங்கை சுகாதார நிறுவகம் போன்ற அரசாங்கம் சாராத நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் போதைவஸ்துகளை தடை செய்வதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதைப் போலவே பின்வரும் நிகழ்வுகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள தேசிய மற்றும் சருவதேச மட்டத்திலான மாநாடுகளுக்கு ஆராய்ச்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

உதாரணம்: சருவதேச புற்று நோய் சங்கத்தின் கருத்தரங்கு 2018 – நேபாளம்

விஞ்ஞான கருத்தரங்கு 2018 – ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகம்

அரசாங்கம் சாராத அமைப்புகளின் சர்வதேச கூட்டமைப்பு விருதுகள் (IFNGO)

போதைவஸ்துக்கள் மற்றும் குற்றங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகம்

- **ரஜரட்ட பல்கலைக்கழகத்தினாலும் கொழும்பு பல்கலைக்கழகத்தினாலும் நடாத்தப்பட்ட கூட்டு அளவைகள்**

அற்ககோல் மற்றும் சிகரெட்டு கம்பனிகளினால் பொது மக்களை இலக்கு வைத்து பரப்பப்படும் பொய்யானவைகளும் ஏமாற்றுகின்றவைகளுமான அபிப்பிராயங்களுக்கும் தகவல்களுக்கும் மறுப்பு தெரிவிப்பதற்கும் போதைவஸ்து தடைசெய்தல் நடைமுறையை முன்னெடுத்துச் செல்வதற்கான உள்ளபடியான தரவுகளை வெளியிடுவதற்கும் வேண்டப்படும் தேவைப்படும் அடிப்படைக் கூறுகளில் ஆராய்ச்சியும் ஒன்றாகும். இதற்கமைவாக கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து ரஜரட்ட பல்கலைக்கழகம் பல ஆராய்ச்சிகளை நடாத்திக் கொண்டிருக்கின்றது.

இலத்திரோனிக் (மின்னணு) மற்றும் பத்திரிகை ஊடகங்கள் மூலமாக எடுக்கப்பட்டுள்ள தடை செய்தல் முயற்சிகள்










| நிகழ்ச்சித்திட்டம் | ஒலிபரப்பப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| போதைவஸ்து தடைசெய்தல் மீதான போயா தின ரேடியோ நிகழ்ச்சித்திட்டம் (1 மணித்தியாலம்)<br><br>2017 வெசாக் போயா தினத்திலிருந்து 2017 உந்துவப் போயா தினம் வரை தடை செய்தல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்து இடம் பெற்றுள்ளதுடன் ஒவ்வொரு அமர்விற்கும் 70,380.00 ரூபா செலவிடப்பட்டுள்ளது. | 08 |
| போதைவஸ்து தடை செய்தல் மீதான ரேடியோ விளம்பரங்கள் (60 மில்லி X 5 + 30 மில்லி X 2 + 20 மில்லி X 28) | 280 |
| சுருக்கமான ரேடியோ அறிவித்தல்கள் (நகர FM மற்றும் சுதேச சேவை) | ஒவ்வொரு செல்வழியிலும் 2880 தடவைகள் |

| நிகழ்ச்சித்திட்டம் | ஒலிபரப்பப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| உலக சிறுவர் தினம் மீதான ரேடியோ நிகழ்ச்சித் திட்டம் (1 மணித்தியாலம்) (செலவு ரூபா 200,000.00) | 01 |
| உலக சிறுவர் தினம் மீதான ரேடியோ விளம்பரங்கள் (60 மில்லி X 5 + 30 மில்லி X 2 + 20 மில்லி X 28) | 35 |
| தொலைக்காட்சி விளம்பரங்கள் - ஜாதிக ரூபவாஹினி (45 மில்லி) | 195 |
| சியத்த (45 மில்லி) | 27 |
| சுதந்திர தொலைக்காட்சி வலையமைப்பு (45 மில்லி X 19 + 5 மில்லி X 27) | 46 |
| சிரச (45 மில்லி X 16 + 5 மில்லி X 34) | 50 |
| சருவதேச கிரிக்கெட் களரி சம்பியன்மார் வெற்றி பரிசுத் தொடர் (10 செக்கண்ட்) (செலவு 1,173,000.00 ரூபாவாகவிருந்தது) | 1,500 |
| இலவசம் - Y FM ரேடியோ விளம்பரங்கள் | 180 |
| சிலுமின (செலவு - ரூபா 115,.000.00)<br>தருணயா (செலவு ரூபா 46,000.00)<br>சிறிகதா பத்திரிகை விளம்பரங்கள் (செலவு ரூபா 120,750.00) | 23 |
| விளம்பரங்களின் மொத்த எண்ணிக்கை | 8105 |

இந்த முயற்சிகளுடன் சமகால நிகழ்வாக ஊடகக் கலந்துரையாடல்கள் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலமாக இவற்றின் பயன்படுத்துகையினால் ஏற்படும் தீங்குகள் பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்படுகின்றது.

- சமூக வலையமைப்புகள் மூலமாக செயற்பாடுகளைத் தடை செய்தல்
- சடூமூக வலையமைப்புகள் மூலமாக போதைவஸ்துகளை தடைசெய்தல் நடவடிக்கைகள் இக்காலத்தின் மற்றுமொரு தேவைப்பாடாகவுள்ளது. எமது நடவடிக்கைகள் பற்றி பொதுமக்களுக்கு இற்றைவரையான அறிவை வழங்கிக் கொடுக்கின்ற அதேவேளையில் ஆலோசனைகளும் அபிப்பிராயங்களும் வலையிலும் எமது முகநூலிலும் அனுப்பப்படலாம்.







போதைவஸ்து தடைசெய்தலுக்கான உதவிகளுடன் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு ஊட்டுதல்.

| உதவி | அச்சிடல்கள் | விநியோகம் |
|---|---|---|
| சிறு பிரசாரத் துண்டுகள் | 1173600 | 516733 |
| சுவரொட்டிகள் | 880700 | 626408 |
| கொடிகள் | 2166 | 822 |
| ஒட்டுத் துண்டுகள் | 292500 | 180610 |











## 03. சிறுநீரக நோய்களைத் தடை செய்வதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்.

### தொலைநோக்கு

தெரியாத தோற்ற வரலாற்றையுடைய நீண்டகால சிறு நீரக நோயை மேலும் தடைசெய்வதாகும் இந்நோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகளினதும் அவர்களுடைய குடும்பத்தவர்களினதும் நலனோம்பலை உறுதிப்படுத்துவதே தொலைநோக்கின் இலக்காகும்.

### பணித்திட்டம்

கூட்டிணைப்பு நடைமுறையொன்றின் மூலம் நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் நலனுக்காக இந்நோயைப் பற்றிய அறிவை அவர்களுக்கு ஊட்டுவதற்கும் தகுந்த முறையியல்களை உபயோகிப்பதற்கும் தடைசெய்தலுக்கும் சிகிச்சையளிப்பதற்கும் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

### முன்னுரை

முதனிலையாக ஏறத்தாழ 1990ஆம் ஆண்டளவில் ரஜரட்ட பிரதேசத்தில் கண்டறியப்பட்ட தெரியாத தோற்றவியலைக் கொண்ட நீண்டகால சிறுநீரக நோயானது தற்போது இலங்கையில் பரந்த அளவில் காணப்படுகின்றது. நோயாளர்கள் பெருமளவில் வடமத்திய, ஊவா, வடமேல், வட, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே காணப்படுகின்றனர். இத்துடன் கூடுதலாக தற்போது தென் மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டையிலும் கூட சிறுநீரக நோயாளர்கள் இருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது அனுராதபுரம், பொலன்னறுவை, குருணாகல், மாத்தளை, வவுனியா, பதுளை, அம்பாந்தோட்டை, அம்பாறை, மொனறாகல்ல, முல்லைத் தீவு மற்றும் திருகோணமலை ஆகியவற்றையும் உள்ளடக்கி 11 மாவட்டங்களிலுள்ள 60 பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் வதியும் மக்களுக்கு ஓர் கேடுவிளைவிக்கின்ற நோயாகியுள்ளது.

தற்போது பெருமளவில் இலங்கையில் காணப்படும் தெரியாத தோற்றவியலைக் கொண்ட நீண்டகால சிறுநீரக நோயை அகற்றுவதற்காகவும் சொல்லப்பட்ட இந்நோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளர்களினாலும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களினாலும் எதிர்நோக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பல பிரச்சினைகளைத் தீர்வு செய்வதற்காகவும் சிறுநீரக நோயைத் தடைசெய்தல் பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

### சிறுநீரக நோயைத் தடைசெய்தல் பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னுரிமைத்துறைகள்

1. இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடத்தைப் பாங்குகளை மேம்படுத்துதல்.
2. நோயாளர்களை முன்னரே கண்டறிதல்
3. நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்தல்கள்
4. நோயாளர்களுக்கும் குடும்பத்தினர்களுக்கும் சமூகத்திற்கும் நலனோம்பலை வழங்குதல்.
5. சுத்தமான குடி நீரை வழங்குதல்
6. போசணையும் சுகாதார உணவும்



22 - CM 26894

7. சுறுசுறுப்பான கண்காணித்தல் தரவு முறைமை

8. கொள்கைகள், அளவைகள் மற்றும் ஆராய்ச்சிகளை வகுத்தமைத்தல்.

சிறுநீரக நோய் பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டம் பங்குபற்றும் உள்நாட்டு அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அரசாங்க அமைப்புகள், அரசாங்கம் சாரா அமைப்புகளுடன் கூட்டாக இணைந்து மேற்போந்த பிரதான விடயங்களின் கீழ் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிறுநீரக நோயை தடை செய்தல் பற்றிய சனாதிபதி சிறப்புப் பணிப்படையானது தேவைப்படும் போது வளங்களைக் கூட்டிணைப்பதற்கும் வளங்களை வழங்குவதற்குமாக நிறுவப்பட்டுள்ளது.

**ஆம் ஆண்டில் சனாதிபதி அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

**3.1 விழிப்புணர்வு பிரசாரங்கள்**

- இத்தொடர்பில் கூட்டங்கள், வேலைக்களங்கள், தொகுதி கலந்துரையாடல்கள் மற்றும் விடய ஆய்வு களை நடாத்துவதன் மூலம் சகல நிறுவனங்களின் கூட்டிணைப்புடன் சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட நடைமுறை மூலமாக பொதுமக்களுக்கு இந்த நோயின் மூலம், பரவுதல் மற்றும் அதனைத் தடை செய்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியன நேரகாலத்திற்குரியவொரு தேவைப்பாடாகும். இந்த விடயம் தொடர்பில் கமக்காரர்கள், பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வீட்டுத் தலைவிகள், சமூக அமைப்புகள் மற்றும் அரசாங்க சேவையா ளர்களையும் உள்ளடக்கி 1,380,647 மக்கள் இலங்கை முழுவதிலும் நடாத்தப்பட்ட 5,578 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களினால் நன்மையடைந்துள்ளனர்.

**மாவட்ட மட்ட விழிப்புணர்வு பிரசாரங்களினால் நன்மையடைந்துள்ளவர்கள் - 2017**

| மாவட்டம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுபவர்கள் |
|---|---|---|
| அனுராதபுரம் / பொலன்னறுவை | 865 | 274,410 |
| குருணாகல் / புத்தளம் | 1,177 | 268,060 |
| பதுளை / மொனறாகல | 639 | 98965 |
| அம்பாறை / திருகோணமலை | 499 | 117,181 |
| கண்டி / மாத்தளை | 1,302 | 225,793 |
| முல்லைத்தீவு / வவுனியா | 302 | 91,080 |
| கொழும்பு / கம்பஹா | 460 | 181,058 |

| மாவட்டம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுபவர்கள் |
|---|---|---|
| காலி / அம்பாந்தோட்டை / மாத்தறை | 329 | 121,700 |
| இரத்தினபுரி / கேகாலை | 05 | 2,400 |
| **மொத்தம்** | **5,578** | **1,380,647** |

❖ **மின்னணு (இலத்திரோனிக்) ஊடகங்கள் மூலமாக விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.**

- 2017 ஓகத்து 16ஆந் திகதியிருந்து 2017 திசெம்பர் 31ஆந் திகதி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 12 செல்வழிகளிலும் நாளொன்றுக்கு செல்வழி ஒவ்வொன்றிலும் 5 தடவைகள் சிறுநீரக நோயை அகற்றுதல் மற்றும் முன்னராகவே நோயைக் கண்டுபிடித்தல் பரிசோதனைகளுக்கு உட்படுதலின் முக்கியத்துவம் பற்றிய விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- ரேடியோவில் (வானொலியில் ) நேர்முகப் பரீட்சைகள் (சுபராத்திரி) நடாத்தப்பட்டுள்ளன.

❖ **அச்சிடல் ஊடகத்துறையினால் வழங்கப்பட்டுள்ள விழிப்புணர்வு**

- சிறுநீரக நோய் மீதான கட்டுரைகளைக் கொண்ட "ஆரோக்கியா" சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- சிறுநீரக நோய்த் துறையிலுள்ள சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களினால் எழுதப்பட்ட சிறுநீரக நோய் பற்றி கட்டுரைகள் தொகுக்கப்பட்ட கல்விசார் நூல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- பொது இடங்களில் அறிவித்தல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

- சிறுநீரக நோயை ஒழித்தல் மீது சிறுதுண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் கொடிகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினங்கள் 2017**

| நோக்கம் | செலவுகள் (ரூபா) |
|---|---|
| 3000 ஆரோக்கியா சஞ்சிகைகள் அச்சிடப்பட்டுள்ளன | 70,000 |
| கல்விசார் கைந்நூலின் அச்சிடல் | 1,048,340 |
| அச்சிட்ட துண்டுப் பிரசுரங்கள் | 2,519,650 |

| நோக்கம் | செலவுகள் (ரூபா) |
|---|---|
| கொடிகள், சுவரொட்டிகளை பொருட்காட்சிக்கு வைத்தல் | 492,000 |
| வானொலி விளம்பரங்கள் | 1,085,700 |
| பாடசாலைப் பிள்ளைகளிடையே அறிவுப் பரிசோதனைப் போட்டிகளை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்தல் | 42,500 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 650,000 |
| சிறுநீரக நோய் பற்றிய பொருட்காட்சிகள் மற்றும் கலைக்காட்சிகளின் நடாத்துகை | 29,400 |
| **மொத்தம்** | 5,937,590 |




கலைப் பொருட்காட்சி – கிரந்துறு கோட்டை




**விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**






**3.2 சிறுநீரக நோயாளர்களைக் கண்டறிவதற்காக முன்னரே நோயைக் கண்டறிதல் பரிசோதனைகளை நடாத்துதல்**

சிறுநீரக நோயாளர்களுக்கு நோயின் அறிகுறிகள் வெளிவாரியாக நன்கு புலனாகாத நிலையிலுள்ள முற்கட்டங்களில் நோயை கண்டறிவதற்காக வழங்கப்படும் உதவியுடன் மருத்துவ சிகிச்சைகளுக்கு உட்படுமாறும் வழங்கப்படும் மருத்துவ அறிவுறுத்துரைகளை கடைப்பிடிக்குமாறும் அவர்களுக்கு அன்புடன் ஆலோசனை வழங்கப்படலாம். எனவே இத்தொடர்பிலான நோயை முன்னதாகவே கண்டறியும் பரிசோதனைகள் சனாதிபதி அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**நடாத்தப்பட முன்னரே நோயைக் கண்டறிதல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நோய்வயப்படும் மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அநுராதபுரம் (பிரதேசச் செயலாளர் பிரிவுகள் அனைத்திலும்) | 607,323 | 188,154 |
| பொலன்னறுவை (பிரதேசச் செயலாளர் பிரிவுகள் அனைத்திலும்) | 271,000 | 101,206 |
| பதுளை (கிரந்துறு கோட்டை, ரிதிமலியத்த, மகியங்கனை) | 119,885 | 47,736 |
| அம்பாறை (தெஹியத்த கண்டிய, மகா ஓயா) | 59,076 | 43,161 |
| குருணாகல் (பொல்பித்தகம, அகத்துவேவ, கிரிபாபா, கொட்டவேஹர மாகோ, நிக்கவரட்டியா) | 286,306 | 72,954 |
| மாத்தளை (வில்கமுவ, நாஉல, பள்ளேகம, கலேவெல, தம்புள்ளை) | 75,459 | 56,149 |
| மொனராகல (புத்தல, வெள்ளவாய, தனமல்வில) | 106,963 | 29,859 |
| முல்லைத்தீவு (வெலிஓயா, மாலாவி) | 18,879 | 22,453 |
| திருகோணமலை, பதவிசிறீபுர, கோமரங்கடவெல, கந்தளாய் | 54,472 | 19,460 |
| வவுனியா (வவுனியா தெற்கு, செட்டிகுளம்) | 116,160 | 29,666 |
| அம்பாந்தோட்டை (திஸ்ஸமகாராமய, சூரியவெவ, அங்குனுகொல பெலஸ்ஸ, லுனுகம்வேஹர | 403,640 | 41,553 |
| கண்டி (ஹசலக்க) | 38,556 | 25,309 |
| **மொத்தம்** | **2,157,719** | **677,660** |




3.3

**சுத்தமான குடிநீரை வழங்குதல்**

சிறுநீரக நோயினாலும் நீரினால் ஏற்படும் பிற நோய்களினாலும் உடல் நலத்திற்கு தீங்கு ஏற்படும் பிரதேசங்களில் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு சனாதிபதி சிறப்புப் படையினால் அதன் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் சிறுநீரக நோயை ஒழிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- மறுதலை சவ்வூடு பரவல் பொறித்தொகுதிகள் ஊடாக நீரை வழங்குதல்
- மழைநீர் அறுவடை நீர்த்தாங்கிகளை நிருமாணித்தல்
- ஏற்கனவேயுள்ள நீர் வழங்கல் முறைமைகளுக்கான சேவை நீடிப்புகள்
- ஏற்கனவேயுள்ள நீர்வழங்கல் முறைமைகளுக்கான புதுப்பித்தல்கள்
- வீட்டு நீர்வடி கருவிகளை வழங்குதல்
- நீரைப் பரிசோதனை செய்தலும் நீர் வழங்கல் முறைமைகளின் தகுதியை கண்காணித்தலும்

சவ்வூடு பரவல் பொறித்தொகுதி முறைமைகளை வழங்குதல்

| மாவட்டம் | நீர் முறைமைகளின் எண்ணிக்கை | செலவினம் (ரூபா) |
|---|---|---|
| மொனராகல | 16 | 24,330,684.76 |
| யாழ்ப்பாணம் | 03 | 4,566,214.15 |
| குருணாகல் | 17 | 25,875,190.85 |
| வவுனியா | 2 | 3,044,140.10 |
| கண்டி | 1 | 2,080,300.00 |
| அனுராதபுரம் | 43 | 65,700,322.65 |
| பதுளை | 16 | 24,353,120.80 |
| முல்லைத்தீவு | 02 | 3,044,140.10 |
| பொலன்னறுவை | 02 | 3,044,140.10 |
| புத்தளம் | 01 | 1,522,070.05 |
| **மொத்தம்** | **120** | **183,435,514.41** |






மறுதலை சவ்வூடு பரவல் பொறித்தொகுதிகளின் மின்சார செலவுப் பட்டியல் கட்டணங்களைச் செலுத்துவதற்காக மாவட்ட செயலகங்களுக்கு செய்யப்பட்ட ஏற்பாடுகளின் ஒதுக்கீடுகள்

| மாவட்டம் | குறித்தொதுக்கல்கள் (ரூபா) |
|---|---|
| மாத்தளை | 1,287,430 |
| மொனராகல | 870,000 |
| குருணாகல் | 608,549 |
| வவுனியா | 540,000 |
| அம்பாந்தோட்டை | 36,000 |
| அனுராதபுரம் | 4,381,092 |
| பதுளை | 1,278,000 |
| முல்லைத்தீவு | 108,000 |
| பொலன்னறுவை | 1,404,000 |
| திருகோணமலை | 144,000 |
| **மொத்தம்** | **10,657,071** |

இந்த முயற்சிகளுடன் கூடுதலாக இடர்ப்பாட்டிற்கு உட்படும் பிரதேசங்களுக்கு மழைநீர் தாங்கிகளும் வீட்டுக்கு குடிநீர் வடிகட்டுப் பொறித் தொகுதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மழை நீர்தாங்கிகளை வழங்குதல் - 2017

| மாவட்டம் | அளவு | நன்மை பெறுபவர்கள் | செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| அனுராதபுரம் | 85 | 425 | 8,165,077 |
| மாத்தளை | 10 | 50 | 774,500 |
| அம்பாந்தோட்டை | 50 | 250 | 4,802,986 |
| **மொத்தம்** | **154** | **725** | **13,742,563** |

வீட்டு குடிநீர் வடிகட்டிகள் - 2017

| மாவட்டம் | அளவு | நன்மை பெறுபவர்கள் | செலவினம் |
|---|---|---|---|
| அனுராதபுரம் | 800 | 4,000 | 3,600,000 |
| வவுனியா | 100 | 500 | 450,000 |
| பதுளை | 276 | 1,380 | 1,242,000 |
| குருணாகல் | 302 | 1,510 | 1,488,415 |
| புத்தளம் | 351 | 1,700 | 1,729,913 |
| **மொத்தம்** | **1,829** | **9,090** | **8,510.328** |





சுத்தமான குடிநீர் வழங்குதல்

### 3.4 பாதிக்கப்பட்டவருக்கு குடும்பத்திற்கும் சமூகத்திற்குமான நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுநீரக நோய் காரணமாக தங்களுடைய தந்தையை அல்லது தாயை இழந்த க.பொ.த (உயர்தர) மாணவர் ஒவ்வொருவருக்கும் இந் நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ளது. சமூக அதிகாரமளித்தல், நலனோம்பல் மற்றும் கண்டிய மரபுரிமை அமைச்சும் கூட இந்த முயற்சிகளின் வெற்றிக்காக உடனுழைக்கின்றது.

**புலமைப் பரிசில்கள் வழங்குதல் - 2017**

| மாவட்டம் | புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|
| அனுராதபுரம் | 52 | 1,108,000 |
| அம்பாறை | 04 | 112,000 |
| குருணாகல் | 02 | 68,000 |
| திருகோணமலை | 19 | 514,000 |
| பொலன்னறுவை | 08 | 248,000 |
| பதுளை | 23 | 560,000 |
| மாத்தளை | 05 | 146,000 |
| முல்லைத்தீவு | 04 | 112,000 |
| மொனராகல | 02 | 56,000 |
| வவுனியா | 09 | 258,000 |
| **மொத்தம்** | **128** | **3,182,000** |









**பல்வேறு நலனோம்பல் நடைமுறைகளை செயற்படுத்தல்**

சமூக அதிகாரமளித்தல், நலனோம்பல் மற்றும் கண்டிய மரபுரிமை அமைச்சு குறைந் வருமானமுடைய சிறுநீரக நோயாளர்களுக்கு 3000 ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும் இந்த பணத்தொகை போதாததாகவிருப்பதன் காரணமாக அதை 2017 யூன் மாதத்திலிருந்து 5000 ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**குறைந்த வருமானமுடையவர்களும் நிதியளிக்கப்பட்டவர்களுமான நோயாளர்களின் எண்ணிக்கை – 2017**

| மாவட்டம் | நிதியளிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அனுராதபுரம் | 8,607 |
| பொலன்னறுவை | 4,447 |
| மாத்தளை | 1,754 |
| திருகோணமலை | 603 |
| அம்பாறை | 957 |
| வவுனியா | 1,807 |
| குருணாகல் | 1,250 |
| முல்லைத்தீவு | 485 |
| அம்பாந்தோட்டை | 181 |
| **மொத்தம்** | **20,091** |

சிறுநீரக நோயாளர்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அவர்களுடைய வீடுகளைப் புதுப்பிப்பதற்கும் கட்டுவதற்கும் நிதி உதவி வழங்கப்படுகின்றது. 2017ஆம் ஆண்டில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி பின்வருமாறு :

| மாவட்டம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அனுராதபுரம் | 648 |
| பொலன்னறுவை | 355 |
| குருணாகல் | 174 |
| வவுனியா | 105 |
| மாத்தளை | 106 |
| பதுளை | 48 |

| மாவட்டம் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அம்பாறை | 53 |
| திருகோணமலை | 47 |
| முல்லைத்தீவு | 20 |
| மொனராகல | 75 |
| இரத்தினபுரி | 26 |
| கம்பஹா | 10 |
| களுத்துறை | 25 |
| கண்டி | 65 |
| **மொத்தம்** | 1,757 |

### 3.5 சுகாதாரத்துறையில் பிற உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்

இத்தொடர்பில் சிறுநீரக நோயாளர்களுக்கு சிறந்த சேவை வசதிகளை வழங்குவதன் பொருட்டு அத்தியாவசிய உட்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் தேவையான வசதிகளை வழங்குதல் பொறுப்பேற்பும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**3.5.1. அனுராதபுரம் பொது மருத்துவசாலை மனையிடத்தில் சிறுநீரக நோயாளர்களுக்கு "மெத்சிறி செவன" நிவாரண தங்குமிடம் மற்றும் நலனோம்பல் நிலையமானது கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.**

| | |
|---|---|
| மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா 291.8 மில்லியன் |
| தரைப்படைகளினால் வழங்கப்பட்ட நிருமாண தொழிலாளர்பணி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட சேமிப்புத் தொகை | ரூபா 134.8 மில்லியன் |
| உள்ளபயொன செலவு | ரூபா 157 மில்லியன் |
| இற்றைவரைக்கும் சனாதிபதி அலுவலகத்தினால் மீள் நிரப்பல் செய்யப்பட்ட செலவினம் | ரூபா 48 மில்லியன் |

முன்மொழிவு செய்யப்பட்டுள்ள விடுதியாக கட்டடத்தொகுதி – அனுராதபுரம்



**அனுராதபுரத்தில் “மெத்சிறி செவன” தங்கியிருக்குமிடத்தின் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் நிருமாண வேலைகள்**









**3.5.2. கண்டி பொது மருத்துவ சாலையில் சிறுநீரக நோயாளர்களின் நிவாரண தரிப்பிடக் கட்டடத்தின் நிருமாண வேலை**

| | |
|---|---|
| மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா 326.6 மில்லியன் |
| தரைப்படையினால் வழங்கப்பட்ட நிருமாணத் தொழிலா ளர்பணி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட சேமிப்புத் தொகை | ரூபா 108.8 மில்லியன் |
| புதிதாக மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா 217.7 மில்லியன் |
| இற்றைவரைக்கும் சனாதிபதி அலுவலகத்தினால் மீள் நிரப்பப்பட்ட செலவுத்தொகை | ரூபா 38.6 மில்லியன் |



முன்மொழிவு செய்யப்பட்டுள்ள விடுதியாக கட்டடத்தொகுதி – கண்டி

**கண்டியிலுள்ள சிறுநீரக நோயாளர்களுக்கான நிவாரண தரிப்பிடக்கட்டடத்தின் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிருமாண வேலைகள்**





**3.5.3. சீன அரசாங்கத்தின் உதவியுடன் பொலன்னறுவையில் சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான நிருமாண வேலையை கூட்டிணைத்தல்**

சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்களுக்காக சீனக்குடியரசினால் வழங்கப்படும் விசேட மருத்துவ சாலைக்கான அடிக்கல் நாட்டுதல் பணி 2017.12.06ஆந் திகதியன்று அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

12,000 மில்லியன் இலங்கை ரூபா செலவினத்திலான இந்த மருத்துவசாலை பின்வரும் வசதிகளைக் கொண்டுள்ளது.

- 200 படுக்கைகள்
- 100 இரத்தச் சுத்திகரிப்பு படுக்கைகள்
- வசதிகளை முழுமையாகக் கொண்டுள்ள அறுவைச் சிகிச்சை மண்டபங்கள்
- சிறுநீரகத்தையும் பிற அங்கங்களையும் மாற்றிப் பொருத்துதல் பிரிவு
- மயக்க மருந்து வழங்குநர் பிரிவு மற்றும் அறுவைச்சிகிச்சை அதிதீவிர கவனிப்புப் பிரிவு மற்றும் மருத்துவ ரீதியான அதிதீவிர கவனிப்புப் பிரிவு
- ஒவ்வொன்றும் 10 படுக்கைகளைக் கொண்ட 02 அறுவைச் சிகிச்சை மண்டபங்கள்
- சிறுநீரகம் தொடர்பிலான விசேட ஆராய்ச்சி பரிசோதனைக் கூடம்







பொலன்னறுவையில் கட்டப்பட்டுள்ள சிறுநீரக மருத்துவசாலை

பிற விசேட செயற்பாடுகள் - 2017

| செயற்பாடு | செலவுகள் (இலங்கை ரூபா) |
|---|---|
| மாற்று அறுவை சிகிச்சை மூலம் சிறுநீரகம் பொருத்தப்பட்ட நோயாளர்களுக்கு அரசாங்க மருத்துவசாலை இடவசதிகள் போதாததாகவிருக்கும் போது வழங்கப்பட்ட தேவையான தனியார் மருத்துவசாலை வசதிகளுக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | 998,258 |
| முன்னதாக நோய் அறுதியிடல் பரிசோதனைகளை மேற்கொண்ட பரிசோதனைக்கூட தொழினுட்பவலர்களுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | 1,967,040 |
| சிறுநீரக நோயாளர்களுடனும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களுடனும் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் | 91,200 |

### 3.6 ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்

சிறுநீரக நோய்களை ஒழித்தல் தொடர்பிலான சனாதிபதி சிறப்புப் பணிப்படையானது நாட்பட்ட சிறுநீரக நோய்களுக்கான காரணங்கள் பற்றிய ஆராய்ச்சிகளை நடாத்துவதற்குத் தேவையான ஆதரவை வழங்குகின்றது. இத்தொடர்பில் 2017ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள், வேலைக்களங்கள் மற்றும் மாநாடுகள் பின்வருமாறு:

| திகதி | ஆராய்ச்சி / வேலைக்களம் / மாநாடு | செலவுகள் (இலங்கை ரூபா) |
|---|---|---|
| 2017 யூலை 13ஆம் 14ஆம் திகதிகள் | நாட்பட்ட சிறுநீரக நோய்களுக்கான காரணங்கள் மீதான ஆராய்ச்சிகளைச் செய்யும் தரப்புக்களின் மாநாடு | 1.1 |
| 2016 – 2017ஆம் ஆண்டுகள் | சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சினால் சிறுநீரக நோயாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களின் நலனோம்பலை மேம்படுத்துதல் மீது நடாத்தப்பட்ட அளவை | 1.9 |
| 2017.11.02 | காலிமுகத்திடல் ஹோட்டலில் அவுஸ்திரேலிய அணு விஞ்ஞான மற்றும் தொழினுட்பவியல் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட நாட்பட்ட சிறுநீரக நோயின் காரணங்களை கண்டறிவதற்காக நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் வேலைக்களத்தின் பெறுபேறுகள் மீது செய்யப்பட்ட மீளாய்வு | ---- |






**3.7 சிறுநீரக நோயாளர்களின் சுறுசுறுப்பான தரவுத்தளமொன்றை நிறுவுதல்**

சிறுநீரக நோயாளர்களின் தரவுத்தளமொன்றை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்குமான நோக்கத்திற்காக மருத்துவசாலைகளுடன் கணனி பயிலுநர்களை இணைப்பதற்கு மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளை பின்வரும் தகவல்கள் காண்பிக்கின்றன.

| நிறுவகம் | செலவுகள் (இலங்கை ரூபா) |
|---|---|
| மாவட்டச் செயலகம் - கண்டி | 225,000 |
| மாவட்டச் செயலகம் - திருகோணமலை | 75,000 |
| மாவட்டச் செயலகம் - அம்பாறை | 37,500 |
| மாவட்டச் செயலகம் - மட்டக்களப்பு | 37,500 |
| மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் | 75,000 |
| மாவட்டச் செயலகம் - வவுனியா | 37,500 |
| மாவட்டச் செயலகம் - அனுராதபுரம் | 262,500 |
| மாவட்டச் செயலகம் - பொலன்னறுவை | 225,000 |
| மாவட்டச் செயலகம் - குருணாகல் | 150,000 |
| மாவட்டச் செயலகம் - காலி | 112,500 |
| மாவட்டச் செயலகம் - பதுளை | 150,000 |
| மாவட்டச் செயலகம் - மொனராகல | 112,500 |
| மாவட்டச் செயலகம் - கொழும்பு | 750,000 |
| மொத்தம் | 2,250,000 |

### 3.8 தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

சிறுநீரக நோயை ஒழித்தல் தொடர்பில் இற்றைவரைக்கும் வவுனியா, அனுராதபுரம், பதுளை மற்றும் மாத்தளை ஆகிய இடங்களில் ஏழு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. அதே வேளையில் இவற்றில் இரண்டு கருத்தரங்குகள் 2017ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளின் போது மேலே குறிப்பிடப்பட்ட இடங்களை அளாவுவதற்காக பல நடவடிக்கைகளையும் உள்ளடக்கி விழிப்புணர்வை எழுப்புதல் பணியும் இடம் பெற்றுள்ளது.

### 3.8.1. மாத்தளையில் வில்கமுவ பிரதேசச் செயலகத்தில் நடாத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டம்

மத்திய மாகாணத்தின் முதலமைச்சர் மாண்புமிகு சரத் எக்கநாயக்காவின் ஆதரவுடன் ஏறத்தாழ நிகழ்ச்சித்திட்டமானது “உலக சிறுநீரக தினம்” என்பதற்குச் சமாந்தரமாக 2017 மார்ச் 10ஆந் திகதியன்று கொண்டாடப்பட்டுள்ளது. சிறுநீரக நோய் ஒழித்தல் பற்றிய சனாதிபதி சிறப்புப் படையின் தலையீட்டுடனும் பங்காளித்துவ நிறுவனங்களின் உடனுழைப்புடனும் இப்பிரதேசத்தில் நிலவுகின்ற பொது விடயங்கள் பற்றியும் கூட கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

- அந்தந்த பிரதேசங்களிலுள்ள பொதுமக்கள் மற்றும் 323 பாடசாலைகளின் மாணவர்களின் பங்குபற்றுதலுடன் 545 கிராம சேவகர்கள் பிரிவுகளில் சிறுநீரக நோய் பற்றிய விழிப்புணர்வுப் பிரசாரங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- பொது இடங்களில் சிறுநீரக நோயை ஒழித்தல் பற்றிய தகவல்களையும் அறிவுறுத்துரைகளையும் கொண்டுள்ள 40 அறிவித்தல் பலகைகள் காட்சிக்கு வைக்கப்படுவதற்கு வசதி வழங்கியமை.

- வில்கமுவ பிரதேச செயலகத்திலுள்ள 39 கிராம சேவகர்கள் பிரிவுகளில் குறியிலக்கு வைக்கப்பட்ட ஏறக்குறைய 23,600 நபர்களைக் கொண்ட மக்களுக்கிடையே ஏறக்குறைய 20,060 மக்களுக்கு படமெடுத்தல் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

- சிறுநீரக நோயை ஒழித்தல் பற்றிய சனாதிபதி சிறப்புப் பணிப்படையின் நிதி ஏற்பாடுகளிலிருந்து வில்கமுவ பிரதேசத்திலுள்ள 10 பாடசாலைக்கு 10 மறுதலை சவ்வூடு பரவுதல் பொறித் தொகுதிகளை வழங்குதல் மற்றும் சஞ்ஜீவ கார்டினர் பவுண்டேசனின் (நிறுவனத்தின்) நிதி உதவி யுடன் சமூக அமைப்புகளுக்கு 03 மறுதலை சவ்வூடு பரவல் பொறித்தொகுதிகளை வழங்குதலும்.

- சிறப்பாக பொதுமக்களின் சிறுநீரகம் சம்பந்தப்பட்ட சிகிச்சைகளைச் செய்வதற்கும் வில்கமுவ மருத்துவசாலையிலுள்ள பரிசோதனைக் கூடத்திற்குமாக விசேடமாக நிருமாணிக்கப்பட்ட புதிய பிரிவொன்றை தொடங்கிவைத்தல்.

- சமூக நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் சிறுநீரக நோயாளர்களுக்காக சுய வேலை வாய்ப்பு வேலைக்களங்களை நடாத்துதலும் சிறுநீரக நோயாளர்களுக்கான கலந்துரையாடல் களைச் செய்தலும் 90 சிறுநீரக நோயாளர்களுக்கு வீடு நிருமாணிப்பதற்கு உதவி புரிதலும்.















23 - CM 26894

**3.8.2. சிறுநீரகம் தொடர்பிலான நோய்களை ஒழித்தல் மீது அனுராதபுர மாவட்டத்திலுள்ள ஹொரவப் பொத்தானை பிரதேசச் செயலாளர் செயலகத்தின் இடப்பரப்பில் நடாத்தப்பட்ட பிரதேச வேலைக்களமும் 250வது மறுதலையாக சவ்வூடு பரவல் பொறித்தொகுதியின் திறப்பு வைபவமும்**

இந்த வைபவம் அதிமேதகு சனாதிபதி மைத்திரிப்பால சிறிசேன அவர்களின் ஆதரவின் கீழ் ஹொரவப் பொத்தானை, நித்திகஹவேவ, மொறஹேவ சிறீ சத்தாரம ஜோதிகராம விகாரையில் 2017 செத்தெம்பர் 10ஆந் திகதியன்று நடாத்தப்பட்டது. இத்துடன் கூடுதலாக இதே பிரதேசத்தில் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களும் சமாந்தரமாக நடாத்தப்பட்டுள்ளன.

- இப்பிரதேசத்தின் பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் பொது மக்களின் பங்குபற்றுதலுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்
- முன்னதாகவே நோய் அறவிடல் படப் பரிசோதனைக்கு சிறுநீரக நோயாளர்களை உட்படுத்துதல்.
- குறைந்த வருமானமுள்ள வீடுகளிலுள்ள 38 சிறுநீரக நோயாளர்களுக்கு வீடமைப்பு உதவியை வழங்குதல்.
- சிறுநீரக நோய்காரணமாக தங்களுடைய பெற்றோர்களை இழந்த 80 க.பொ.த (உயர்தர) மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்
- சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட 600 குடும்பங்களுக்கு 600 உள்நாட்டு நீர் வடிகட்டு பொறித்தொகுதிகளை வழங்குதல்.






**தொலைநோக்கு**

இருபத்தோராம் நூற்றாண்டின் சவால்களை பிள்ளைகள் சமாளிப்பதை இயலச் செய்வதன் பொருட்டு அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்.

**செயற்பணி**

சுற்றாடலொன்றைக் கட்டியெழுப்புதல்

இக்காலத்திற்குரிய பிள்ளைகளின் மீதே எதிர்கால பணிப்படையின் தரம் தங்கியுள்ளது. தற்போதைய சமூகத்தில் பரவிக் கொண்டிருக்கும் பல்வேறு இடர்ப்பாடுகளிலிருந்து பிள்ளைகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ள அதிமேதகு சனாதிபதி அவர்கள் முடிந்தவரை துரிதமாக தற்போதைய பிள்ளைகளின் நலனோம்பலையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான விசேட ஒழுங் கொன்றை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்துரை வழங்கியுள்ளார். இதற்கமைவாக இயைபுள்ள வரிசை அமைச்சுகளையும் மாகாண சபைகளையும் பிறபங்காளித்துவ நிறுவனங்களையும் உள்ளடக்கி நிறுவனங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் பல கலந்துரையாடல்கள் அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. “சிறுவர்களை பாதுகாப்போம்” தேசிய நிகழ்ச்சித் திட்டமானது மூன்று ஆண்டுகளுக்குள் (2017 – 2019) வரையறுக்கப்பட்ட ஓர் காலஎல்லையைக் கொண்ட செயல் திட்டமொன்றை உருவாக்கி அவசர முறை யொன்றில் அதை நடைமுறைப்படுத்துவது பற்றி மேலே நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் கண்டறியப்பட்ட விடயங்களை கவனத்தில் எடுத்துக்கொள்ளும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் வகுதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

1. கொள்கைகள் மற்றும் சட்டச் சீர்திருத்தங்களின் வகுத்தமைப்பும் நடைமுறைப்படுத்தலும்
2. நிறுவனங்களையும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளையும் பலப்படுத்துதல்
3. சிறுவர்களின் உடற் தகுதிகளையும் கல்வியையும் தேர்ச்சிகளையும் அபிவிருத்தி செய்வதற்காக விசேட நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.



2017ஆம் ஆண்டில் “சிறுவர்களைப் பாதுகாப்போம்” என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டம் பங்காளித்துவ நிறுவனங்களின் உடனழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் சனாதிபதி அலுவலகத்தினால் பின் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**4.1 “சிறுவர்களைப் பாதுகாப்போம்” என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து வைத்தல்**

“சிறுவர்களைப் பாதுகாப்போம்” என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப விழா சனாதிபதி அவர்களின் ஆதரவுடனும் மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற அழைக்கப்பட்டவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர்களை உள்ளடக்கி ஏறத்தாழ 7,000 நபர்களுடனும் கண்டி, திகனவிலுள்ள மாகாண விளையாட்டுக்கள் கட்டடத்தொகுதியில் 2017 செத்தெம்பர் 08ஆந் திகதியன்று நடாத்தப்பட்டது. இந்நிகழ்வின் போது “சிறுவர்களைப் பாதுகாப்போம்” என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்திட்டம் சனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த விழாவின்போது இடம்பெற்ற பிற விசேட நிகழ்வுகள்

- விசேட திறன் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அச்சிடப்பட்ட "எதிர்காலத்தின் இளம் சாதனையாளர்கள்" என்ற சிறிய புத்தகத்தின் சமர்ப்பித்தல் இடம்பெற்றுள்ளது.
- பொலன்னறுவை, கிளிநொச்சி, பதுளை, மொனறாகல மாவட்டங்களில் விசேட தேவைப்பாடுள்ள சிறுவர்கள் படிக்கின்ற பாடசாலைகளுக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தியை மேற்கொள்ளுவதற்காக 80.7 மில்லியன் இலங்கை ரூபா நிதி உதவி வழங்குதல் இடம்பெற்றுள்ளது.
- தொழில் மற்றும் தொழிற்சங்கத் தொடர்புகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சினால் வகுக்கப்பட்ட இலங்கையில் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதை ஒழிப்பதற்கான தேசிய கொள்கை அதிமேதகு சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
- மத்திய மாகாண சபையினால் நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படும் சிறுவர்களை போதைவஸ்துகளுக்கு எதிராக பாதுகாத்தல் மற்றும் பாதகமான சிறுவர்பராய நிலை அனுபவங்கள் தொடர்பிலான கருத்திட்ட அறிக்கையின் சமர்ப்பித்தல்





**ஆரம்ப விழாவின் நிகழ்வுகள்**

### 4.2 "சிறுவர்களைப் பாதுகாத்தல்" என்னும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் - மாவட்ட மாநாடு பொலன்னறுவை

"சிறுவர்களைப் பாதுகாப்போம்" என்ற பொலன்னறுவை மாவட்ட மாநாடு அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆதரவுடனும் மாகாண அரசியல் தலைவர்கள், மத்திய மாகாணத்தின் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பிரதேசத்தின் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சிறுவர்களையும் உள்ளடக்கி ஏறத்தாழ 5,500 மக்களின் பங்குபற்றுதலுடனும் பொலன்னறுவை றோயல் கல்லூரியில் 2017 நவம்பர் 10ஆந் திகதியன்று நடாத்தப்பட்டது.

இவ்விழாவின் போது இடம்பெற்ற பிற விசேட நிகழ்வுகள்

- வடமத்திய மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் உள்ள 08 சிறுவர்கள் இல்லங்களின் நவீனமயப்படுத்தலுக்கும் புதுப்பித்தல்களுக்குமாக இலங்கை ரூபா 11.4 மில்லியன் நிதி உதவி வழங்கப்பட்டது.
- சுத்தமான குடிநீர் வசதிகள் இல்லாத மேற்போந்த மாவட்டங்களிலுள்ள 20 பாடசாலைகளுக்கு மறுதலை சவ்வூடுபரவல் நீர் பரிசுத்தப்படுத்தல் பொறித் தொகுதிகள் வழங்கப்பட்டதுடன் மட்டகளப்பு காயாங்கேணி சரஸ்வதி வித்தியாலத்திற்கும் மட்டகளப்பு பராய்துறைச் சேனை அசார் வித்தியாலத் திற்கும் லகுகல வித்தியாலத்திற்கும் அம்பாறை பரண கொவிபொல முதனிலைப் பாடசாலைக்கும் இவ்வைபவத்தின் போது இந்தவசதியானது அடையாளச் சின்னமாக வழங்கப்பட்டது. பொலன்னறுவை, மட்டகளப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள தெரிவு செய்யப்பட்டுள்ள 381 பாடசாலைகளில் ஒவ்வொரு பாடசாலைக்கும் இலங்கை ரூபா 19.05 மில்லியன் மானியமாக வழங்கப்பட்டுள்ளதுடன் பொலன்னறுவை பதியத்தலாவ கனிட்ட பாடசாலைக்கும் மட்டகளப்பு குமார வேலியார் கிராமம், சித்தி விநாயகர் வித்தியாலயம் மற்றும் கல்முனை மஜீத்புர வித்தியாலயம் ஆகியவற்றையும் உள்ளடக்கிய பாடசாலைகளுக்கு ஆரம்ப கட்டடத்தில் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**பொலன்னறுவை மாவட்ட மாநாட்டு விழாவின் போது இடம் பெற்ற நிகழ்வுகள்.**

### 4.3 "எதிர்காலத்திற்கான இளம் சாதனையாளர்கள்" என்ற நிகழ்ச்சித்திட்டம்.




குழந்தைப் பராயத்தில் பிள்ளைகள் கடும் சிக்கல்களினால் பாதிக்கப்படும் போது அவை பிள்ளைகளின் தேர்ச்சிகளையும் ஆளுமைத் தன்மைகளையும் பாதகமான முறையில் பாதிக்கின்றமையை நவீன உளவியல் காண்பித்துள்ளது. இதன் பிரகாரம் பிள்ளைகளுக்கிடையே ஆளுமையை கட்டியெழுப்புதலின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை தட்டியெழுப்புவது அத்தியாவசியமானது தரரீதியாக அதிசிறந்த குணவியல்புகளையுடையவர்களும் ஆக்கபூர்வமானவர்களும் மென்மையானவர்களுமான பிரசைகளாக பிள்ளைகளை வளர்த்தெடுப்பது சாத்தியமான விடயமாகவிருக்கும். இதற்கமைவாக "சிறுவர்களைப் பாதுகாப்போம்" என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சனாதிபதி அலுவலகத்தினால் "எதிர்கால இளம் சாதனையாளர்கள்" நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இத்தொடர்பில் "எதிர்காலத்தின் இளம் சாதனையாளர்கள்" என்ற சிறு நூலின் சிங்களம் மற்றும் தமிழ் மொழியிலான வாசகங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வேளையில் நாடு பூராவிலும் இந்நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு தேவைப்படும் அறிவுறுத்துரையாடல்களையும் பாடக்கூறுகளையும் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேற்போந்த விடயங்களுக்கும் கூடுதலாக கண்டியிலும் பொலன்னறுவையிலும் நடாத்தப்பட்ட மாநாடுகளில் இந்நிகழ்ச்சித்திட்டம் பற்றி பங்குபற்றுபவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் கல்வி, சுகாதாரம் மற்றும் நிருவாகம் ஆகிய துறைகளுக்கு ஊடாக மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் நடாத்தப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**சிறுவர்களின் ஆளுமை அபிவிருத்தி பற்றி பொது மக்களுக்கு கல்வி ஊட்டுதல்.**










**4.4 விசேட தேவைகளை வேண்டுகின்ற மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளுக்கு செல்வதற்கான வீதியையும் உள்ளடக்கி உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

சமூகத்தில் பிற மக்களுக்கிடையே விசேட தேவைகளை வேண்டுகின்ற மக்களுக்கும் சிரேட்ட பிரசைகளுக்கும் தகுந்த அங்கீகாரமும் மதிப்பும் வழங்கப்படல் வேண்டும். இவர்களுக்கு தங்களுடைய தேவை-களை தாங்களாகவே பூர்த்தி செய்து மற்றவர்கள் மீது தங்கியிராமல் சுயமாகவே சுதந்திரமாக தங்களுடைய வேலைகளை செய்வதற்கான வசதிகள் அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். இந்நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரத்தை வழங்க இவர்களை பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இக்குறிக்கோளைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு விசேட தேவைகள் தேவைப்படும் மக்களுக்கும் சிரேட்ட பிரசைகளுக்கும் அதிகாரமளித்தல் பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை 2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளது. "சிறுவர்களைப் பாதுகாப்போம்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை, கிளிநொச்சி, பதுளை, மொனறாகல மாவட்டங்களிலுள்ள விசேட தேவைகளையுடைய மாணவர்களைக் கொண்டுள்ள 54 பாடசாலைகளுக்கு 2017ஆம் ஆண்டின் தொடக்க கட்டத்தில் அணுகுவிதிகள் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

| மாவட்டம் | கல்விவலயம் | | குறித்தொதுக்கல்கள் (இலங்கை மில்லியன் ரூபாவில்) |
|---|---|---|---|
| பொலன்னறுவை | ஹிங்குராக்கொட | 11 | 36 |
| | பொலன்னறுவை | 06 | |
| | திம்புலாகல | 06 | |
| | **மொத்தம்** | 23 | |
| பதுளை | பதுளை | 03 | 15 |
| | பண்டாரவளை | 03 | |
| | வியலுவ | 03 | |
| | மகியங்களை | 01 | |
| | **மொத்தம்** | 10 | |

| மாவட்டம் | கல்விவலயம் | | குறித்தொதுக்கல்கள் (இலங்கை மில்லியன் ரூபாவில்) |
|---|---|---|---|
| மொனறாகல | வெள்ளவாய | 03 | 22.5 |
| | தனமல்வில்ல | 04 | |
| | மொனறாகல | 04 | |
| | பிபிலை | 04 | |
| | **மொத்தம்** | 15 | |
| கிளிநொச்சி | கிளிநொச்சி | 06 | 7.2 |
| | **மொத்தம்** | 06 | |
| முழுமொத்தம் | | 54 | 80.7 |





**விசேட தேவைகளை வேண்டுகின்ற மாணவர்களுக்கான பாடசாலைகளின் உட்கட்டமைப்பு**

**4.5 "சிறுவர்களைப் பாதுகாப்போம்" என்ற பொலன்னறுவை மாவட்ட மாநாட்டிற்குச் சமாந்தரமாக 08 சிறுவர்கள் இல்லங்களின் நவீனமயப்படுத்தலும் புதுப்பித்தலும்.**

பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் நடாத்தப்பட்ட ஆரம்ப கலந்துரையாடல்களில் வடமத்திய மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலுமுள்ள சிறுவர்கள் இல்லங்களின் சிறந்த வசதிகள் மற்றும் பாதுகாப்பு வழங்குதலின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவது தொடர்பில் துலாம்பரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக பொலன்னறுவை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள 08 சிறுவர்கள் இல்லங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 11.4 மில்லியன் இலங்கை ரூபா குறித்தொதுக்கப்பட்டிருந்தது.

| | மாவட்டம் | சிறுவர்கள் இல்லங்கள் | சிறுவர்களின் எண்ணிக்கை | குறித்தொதுக்கல்கள் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | பொலன்னறுவை | போசத் பாலிக்கா சிறுவர்கள் இல்லம், ஹிங்குராக்கொடை | 26 | 2,028,342 |
| | | பரக்கும் பாலிக்கா சிறுவர்கள் இல்லம் | 27 | 1,465,302 |
| 2 | மட்டக்களப்பு | பாதுகாப்பளிக்கப்பட்ட இல்லம், மட்டக்களப்பு | 10 | 4,880,000 |
| | | நம்பிக்கைக் கிராம பெண்கள் இல்லம் | 26 | 585,000 |
| | | விவேகானந்தா பெண்கள் இல்லம் | 33 | 599,816 |
| | | சக்தி பெண்கள் இல்லம் | 52 | 600,000 |
| | | ஜீவானந்தா பெண்கள் சிறுவர்கள் இல்லம் | 31 | 500,000 |
| 3 | அம்பாறை | விபுலானந்தா சிறுவர்கள் இல்லம் | 27 | 744,250 |
| மொத்தம் | | | 232 | 11,402,710 |

சிறுவர்கள் இல்லங்களை புதுப்பித்தல்





### 4.6 மாணவர்களுக்கிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதன் பொருட்டு 2,820 பாடசாலைகளுக்கு இரண்டு சோடி புத்தகங்களை வழங்குதல்

இன்றைய உலகின் பகட்டான நவீன தொழினுட்பவியலுடன் இலத்திரோனிக் (மின்னணு) இயந்திரப் பொறிகள் இளைஞர்களையும் சிறுவர்களையும் முற்றுகையிட்டு கவர்ந்திழுத்துள்ளதுடன் சிறுவர்கள் வாசிப்பு பழக்கத்தை கைவிடும் சார்பு நிலையிலுள்ளனர். பாடசாலைகளிலுள்ள சிறுவர்களுக்கு புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஊட்டி ஊக்குவிப்பதன் பொருட்டு நாடுமுழுவதிலுமுள்ள க.பொ.த உயர்தர வகுப்புகளையுடைய 2820 பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் சிபாரிசு செய்யப்பட்ட ஒவ்வொன்றும் 25 புத்தகங்களைக் கொண்ட 2 சோடி புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | மாகாணம் | புத்தகங்கள் வழங்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை | புத்தகங்களின் விவரணம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | முழுமொத்தம் |
| 01. | வடமத்திய | 191 | 3,200 | 620 | 1,910 | 5,730 |
| 02. | ஊவா | 260 | 4,260 | 960 | 2,600 | 7,820 |
| 03 | வட | 213 | 80 | 4,180 | 2,130 | 6,390 |
| 04. | கிழக்கு | 275 | 1,220 | 4,280 | 2,750 | 8,250 |
| 05. | மத்திய | 431 | 6,080 | 2,900 | 4,310 | 13,290 |
| 06. | வடமேல் | 361 | 5,680 | 1,580 | 3,610 | 10,870 |
| 07. | சப்பிரகமுவ | 286 | 4,860 | 940 | 2,860 | 8,660 |
| 08. | தென் | 358 | 6,800 | 440 | 3,580 | 10,820 |
| 09. | மேல் | 445 | 7,840 | 1,540 | 4,450 | 13,830 |
| மொத்தம் | | 2,820 | 40,020 | 17,440 | 28,200 | 85,660 |




பாடசாலைகளுக்கு புத்தங்களை வழங்குதல்

**4.7 பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்துவதன் பொருட்டு வடமத்திய மாகாணத்திற்கு 04 பேருந்துகளை வழங்குதல்**

பாதுகாப்பான போக்குவரத்து முறையொன்று வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் கிராமிய பிரதேசங்களில் நிலவுகின்ற போக்குவரத்து கஷ்டங்களை கவனத்திற்கு எடுத்துக்கொண்டு பாடசாலைச் சிறுவர்களின் நலனுக்காக பாடசாலை பேருந்துகள் (வசுக்கள்) ஓர் முன்னோடிக் கருத்திட்டமாக வழங்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக அனுராதபுரத்திலுள்ள நிவந்தகசேத்திய மகாவித்தியாலயத்திற்கு ஓர் பாடசாலைப் பேருந்து (வசு) வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஹிங்குராகொடை, திம்புலாகல மற்றும் பொலன்னறுவை கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைச் சிறுவர்களின் நலனுக்காக வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அத்தகைய 03 வசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.



**பாடசாலை வசுக்களின் வழங்கல்**

**4.8 மாவட்ட மற்றும் பிரதேச மட்டக் கருத்திட்டங்களுக்கான ஏற்பாடுகள்**

மாகாண, மாவட்ட, பிராந்திய மட்டக் கருத்திட்ட முகாமையாளர்களினால் செய்யப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளைக் கவனத்திற்கு எடுத்துக்கொண்டு “சிறுவர்களைப் பாதுகாப்போம்” என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வது தொடர்பில் கருத்திட்டங்களுக்கு இலங்கை ரூபா 1,332,900ஐக் கொண்ட மானியமொன்று வழங்கப்பட்டது. இதற்கமைவாக பின்வரும் கருத்திட்டங்களுக்கு நி-தியளிக்கப்பட்டுள்ளது.

i. அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள ஒகேவெல பிரதேசச் செயலாளர் பிரிவிலுள்ள ஆரம்ப சிறுவர்கள் கவனிப்பு நிலையங்களில் தோட்டப்பயிர்ச் செய்கை பற்றிய நிகழ்ச்சித்திட்டத்திற்கும் சிறுவர்கள் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு விளையாட்டுக்கள் மற்றும் பயிற்சிகள் மீதான செய்முறை செயற்பாடுகளுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கும்.

ii. களுத்துறை மாவட்டத்தில் 17 மாவட்டங்களில் வெவ்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் இடர்ப்பாடுகளுக்கு எதிராக பாதுகாப்பு வழங்குதல் மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் 15 பாடசாலைகளில் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுவர்களினதும் அவர்களின் பெற்றோர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தலின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும்.

iii. கருவலகஸ்வேவாவிலும் புத்தளம் மாவட்டத்திலுள்ள புத்தளம் பிரதேசச் செயலாளர்கள் பிரிவுகளிலும் பாடசாலை மட்டத்தில் கண்டறியப்பட்ட சிறுவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி அளிப்பதன் மூலம் சிறுவர்கள் அபிவிருத்தி மற்றும் புத்தளம் பிரதேசச் செயலாளர்கள் பிரிவுகளில் அவர்களுக்கு தொல்லைகளிலிருந்து பாதுகாப்பளித்தல் மற்றும் திறனைக்கட்டி எழுப்புதல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும்.

iv. புத்தளம் மாவட்டத்திலுள்ள மகாவேவ பிரதேசச் செயலாளர் பிரிவில் சிறுவர்களுக்கு பாதுகாப்பளித்தல் மற்றும் சிறுவர்களின் பொறுப்புகள் மற்றும் சிறுவர்களின் துஷ்பிரயோகம் மற்றும் அவர்களுக்கு தொல்லை கொடுத்தல் விடயங்களிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகியன மீது பெற்றோர்களுக்கு நடத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும்.

v. வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா தெற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் நடாத்தப்படும் சிறுவர்கள் துஷ்பிரயோகம் மற்றும் போதைவஸ்துகளின் தடைமீதான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு

| 80 | 11.07.2017 | வுடமாகாணத்தில் கருத்திட்டப் பணிப்பாளர் களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | சுற்றாடல் பராமரிப்பு |
| 81 | 17.07.2017 | தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் மீது சனாதிபதி செயலாளருடன் கலந்துரையாடல் செய்யப்பட் டுள்ளது | பல்லின |
| 82 | 20.07.2017 | சமயங்களுக்கிடையிலான ஆலோசகர்கள் சபையுடன் கலந்துரையாடல் | சமயம் |
| 83 | 20.07.2017 | புத்தகங்களுக்கான தேசிய கொள்கையொன்றை வகுத்தமைத்தல் மீதான வேலைக்களம் | பல்லின |
| 84 | 24.07.2017 | பொலன்னறுவையிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களில் கழிவுப் பொருட்கள் கையாளுகை முறைமையை ஒழுங்குறுத்தல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 85 | 31.07.2017 | தேசிய நிகழ்ச்சித்திட்டங்களினால் 2017ஆம் ஆண்டில் குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் மீதான கலந்துரை யாடல் | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு |
| 86 | 01.08.2017 | சமூக உளவியல் கல்வி மீதான கலந்துரை யாடல் | சிறுவர்கள் பாதுகாப்பு |
| 87 | 03.08.2017 | பொலன்னறுவையில் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ முறைகள் மற்றும் சேதன உரங்கள் உற்பத்தி செய்யும் கம்பனியை ஒழுங்குபடுத்தல் மீதான கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 88 | 11.08.2017 | சுத்தமான சிவனொளிபாத பருவகாலம் மீதான முன்னேற்ற மீளாய்வு – நுவரெலியா | சுற்றாடல் பராமரிப்பு |
| 89 | 14.08.2017 | வீட்டுக்காற்று முகாமைத்துவம் | சுற்றாடல் பராமரிப்பு |
| 90 | 14.08.2017 | அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர் பிலான விசேட பத்திரிகையாளர்கள் கூட்டம் | பல்லின |
| 91 | 15.08.2017 | கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சிச் சந்தையில் பொலித்தீன் உபயோகத்தை மட்டுப்படுத்துவது தொடர்பில் புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்துடன் கலந்துரை யாடல் நடாத்தப்பட்டுள்ளது. | சுற்றாடல் பராமரிப்பு |

| தொடர் இல | திகதி | கூட்டம் / கலந்துரையாடல் | துறை |
|---|---|---|---|
| 92 | 16.08.2017 | மரநடுகை மாதத்தை பிரகடனப்படுத்துவது மீதான ஆரம்பகால கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 93 | 17.08.2017 | கணக்காய்வு மற்றும் முகாமைத்தும் தொடர் பிலான கூட்டம் | பல்லின |
| 94 | 18.08.2017 | நிலைபேற்று நிலை பாடசாலைகள் நிகழ்ச்சித் திட்டம் மீதான கலந்துரையாடல் | நிலைபேற்று நிலை பாடசாலை அபிவிருத்தி |
| 95 | 24.08.2017 | வெயிடுதல் மற்றும் ஊடகங்களை பயன் படுத்தல் தொடர்பில் சமயங்களுக்கிடையிலான கலந்துரையாடல் சபையின் உப குழுவுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளது. | சமயம் |
| 96 | 28.08.2017 | கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சிச் சந்தையில் பொலித்தீன் உபயோகத்தை மட்டுப்படுத்துவது தொடர்பில் புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்துடன் கலந்துரை யாடல் நடாத்தப்பட்டுள்ளது. | சுற்றாடல் பராமரிப்பு |
| 97 | 28/29.08.2017 | புகையிலை பயிர்ச் செய்கையின் கட்டுப்படுத்தல் மீதான கலந்துரையாடல் | போதைவஸ்துக்களை தடை செய்தல் |
| 98 | 30.08.2017 | "புனுருதய" வின் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு | சுற்றாடல் பராமரிப்பு |
| 99 | 30.08.2017 | சிறுநீரக நோயாளர்கள் தொடர்பிலான சிறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்ம் | சிறுநீரக நோயை ஒழித்தல் |
| 100 | 30.08.2017 | சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட குடும்பங் களின் குடும்ப நலனோம்பலுக்கான வழி-வகைகள் மீது ஆரம்ப கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டுள்ளது | சிறுநீரக நோயை ஒழித்தல் |
| 101 | 11.09.2017 | வளவை கங்கையின் பாதுகாக்கப் பட்ட இடப்பரப்பின் அபிவிருத்தியின் 2வது கட்டம் மீதான கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 102 | 19.09.2017 | சிறுநீரக நோய் ஒழித்தல் மீதான கலந்துரையாடல் | சிறுநீரக நோயை ஒழித்தல் |
| 103 | 19.09.2017 | சனாதிபதி விசேட சிறப்புப் பணிப்படையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மீதான முன்னேற்றம் பற்றிய மீளாய்வு | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு |
| 104 | 21.09.2017 | கழிவுப் பொருட்களின் கையாளுகை பற்றிய கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 105 | 25.09.2017 | நீரேந்து இடப்பரப்புகளினதும் "வனரோப்பா" மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தினதும் பராமரிப்பு தொடர்பிலான கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 106 | 27.09.2017 | இலங்கையிலுள்ள காடுகளின் நூற்று வீதத்தை / நூற்று வீதத்தினால் அதிகரிப்பது தொடர்பிலான முன்னோடிக் கருத்திட்டம் மீதான கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |

| தொடர் இல | திகதி | கூட்டம் / கலந்துரையாடல் | துறை |
|---|---|---|---|
| 107 | 03.10.2017 | திருகோணமலையில் இறந்த கடற்சிப்பிகளின் அகழ்வு தொடர்பிலான | சுற்றாடல் பராமரிப்பு |
| 108 | 03.10.2017 | கம்பஹா மாவட்டத்தில் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் மீதான கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 109 | 04.10.2017 | உள்நாட்டு சிறிய அளவிலான சக்தி மின்வலு பொறித்தொகுதிகள் | சுற்றாடல் பராமரிப்பு |
| 110 | 07.10.2017 | சமயங்களுக்கிடையிலான கலந்துரையாடல் சபையின் விசேட கலந்துரையாடல் | சமயம் |
| 111 | 09.10.2017 | இயலாமையுற்ற மாணவர்களையுடைய பாடசாலைகளுக்கு வீதி அணுகால வசதிகள் மீதான கலந்துரையாடல் | சிறுவர்கள் பாதுகாப்பு |
| 112 | 12.10.2017 | பிள்ளைகளுக்கிடையே ஆளுமையை கட்டி எழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான கலந்துரையாடல் | சிறுவர்கள் பாதுகாப்பு |
| 113 | 19.10.2017 | நிலைபேற்று நிலை பாடசாலைகள் நிகழ்ச் சித்திட்டம் மீதான முன்னேற்றம் பற்றிய மீளாய்வு | நிலைபேற்று நிலை பாடசாலை அபிவிருத்தி |
| 114 | 19.10.2017 | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு நிகழ்ச் சித்திட்டம் | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு |
| 115 | 22.10.2017 | புகையிலை கட்டுப்படுத்தல் மீது விமானப் படையின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | போதைவஸ்துக்களை தடை செய்தல் |
| 116 | 24.10.2017 | சிறுநீரக நோயாளர்களின் குடும்பங்களின் நலனோம்பலுக்காக எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் மீதான கலந்துரையாடல் | சிறுநீரக நோயை ஒழித்தல் |
| 117 | 24.10.2017 | அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான கலந்துரையாடல் | பல்லின |
| 118 | 26.10.2017 | ஏற்பாடுகள் வழங்கிய நிறுவனங்களுடன் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு செய்யப் பட்டது | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு |
| 119 | 27.10.2017 | இலங்கை விமானப் படைக்கான போதைவஸ்துக்கள் தடை செய்தல் நிகழ்ச்சித்திட்டம் | போதைவஸ்துக்களை தடை செய்தல் |
| 120 | 27.10.2017 | உலக 7வது பௌத்த உச்சிமாநாடு பற்றிய கலந்துரையாடல் | சமயம் |
| 121 | 30.10.2017 | கருத்திட்டப்பணியாளர்களுடன் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு |
| 122 | 02.11.2017 | கம்பஹா மாவட்டத்தில் கழிவுப் பொருட்களின் கையாளுகை மீதான கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |

| தொடர் இல | திகதி | கூட்டம் / கலந்துரையாடல் | துறை |
|---|---|---|---|
| 123 | 16.11.2017 | இந்தியா தேசானி ஹேர்பல் கம்பனியின் முகவர்களுடன் செய்யப்பட்ட நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகள் பற்றிய கலந்துரை யாடல்கள் | சிறுநீரக நோயை ஒழித்தல் |
| 124 | 20.11.2017 | ஏற்பாடுகள் வழங்கப்பட்ட நிறுவனங்களு டனான முன்னேற்ற மீளாய்வு | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு |
| 125 | 23.11.2017 | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் சுற்றாடல் பராமரிப்பு மீதான தேசிய நிகழ்ச் சித்திட்டத்தின் ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 126 | 23.11.2017 | அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள் பிரிவின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் கூட்டம் | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு |
| 127 | 28.11.2017 | கம்பஹா மாவட்டத்தில் கழிவுப் பொருட் களின் கையாளுகை மீதான கலந்துரை யாடல் செய்யப்பட்டது | சுற்றாடல் பராமரிப்பு |
| 128 | 28.11.2017 | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் சுற்றாடல் பராமரிப்பு மீதான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 129 | 29.11.2017 | சமுத்திர மற்றும் கடற்கரையோரப் பேணுகை மீதான கலந்துரையாடல் | சுற்றாடல் பராமரிப்பு |
| 130 | 29.11.2017 | பிரிவெனா கல்விக்கான மேசைகளை நாற்காலிகளுடன் வழங்குவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் | சமயம் |
| 131 | 29.11.2017 | ஊவாமாகாணத்தில் 1818ஆம் ஆண்டின் இருநூறு ஆண்டுக்கால எழுச்சியின் கொண்டாட்டத்திற்கான கருத்திட்ட முன் மொழிவு மீதான கலந்துரையாடல் | பல்லின |
| 132 | 04.12.2017 | இளைஞர் முகாம் மீதான முன்னேற்றம் பற்றிய மீளாய்வு – பொலன்னறுவை | பல்லின |
| 133 | 05.12.2017 | போலித்தீன் பயன்படுத்துகையை கட்டுப்படுத் துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் | சுற்றாடல் பராமரிப்பு |
| 134 | 05.12.2017 | ஸ்ரீ தலதா மாளிகையிலுள்ள பொன்தகடு மீதான ஆரம்ப கலந்துரையாடல் | சமயம் |
| 135 | 08.12.2017 | நிலைபேற்று நிலை பாடசாலைகள் நிகழ்ச்சித் திட்டம் மீதான கலந்துரையாடல் | நிலைபேற்று நிலை பாடசாலை அபிவிருத்தி |
| 136 | 11.12.2017 | குறித்தொதுக்கல்கள் வழங்கப்பட்ட கருத் திட்டங்கள் யாவற்றினதும் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு |
| 137 | 20.12.2017 | நிலைபேற்று நிலை பாடசாலைகள் நிகழ்ச்சித் திட்டம் மீதான கலந்துரையாடல் | நிலைபேற்று நிலை பாடசாலை அபிவிருத்தி |

| தொடர் இல | திகதி | கூட்டம் / கலந்துரையாடல் | துறை |
|---|---|---|---|
| 138 | 20.12.2017 | ஜப்பான் பியூஜிஇன்னோவேஷன் நிறுவனத் தினால் வழங்கப்பட் வேண்டும் என முன் மொழிவு செய்யப்பட்டுள்ள நீர் முறைமைகள் மீதான கலந்துரையாடல் | சிறுநீரக நோயை ஒழித்தல் |
| 139 | 22.12.2017 | “அப்பே சுவயரட்டே சவிய” (எமது ஆரோக்கியமே இந்நாட்டின் பலமாகும்) என அழைக்கப்படும் சமூக ஆரோக்கியத்தை ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டம் மீதான கலந்துரையாடல் | பல்லின |
| 140 | 27.12.2017 | கம்பஹாவில் கழிவுப் பொருட்களின் கையாளுகை தொடர்பிலான கூட்டம் | சுற்றாடல் பராமரிப்பு |
| 141 | 27.12.2017 | நிலைபேற்று நிலை பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சகல பாடசாலைகளிலும் பயன்படுத்தப்படும் குடிநீரின் தரத்தை உறுதிப்படுத்துதல் மீதான கலந்துரையாடல் சிறுநீரக நோயையும் தொற்று நோயையும் ஒழிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் | நிலைபேற்று நிலை பாடசாலை அபிவிருத்தி |
| 142 | 28.12.2017 | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ‘பரிசமின் கிகின் என்ன’ என்ற வீதிப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் கூட்டாக சனாதிபதி செயல கத்துடன் நடாத்தப்பட்ட சிறுவர் களைப் பாதுகாப்போம் நிகழ்ச்சித்திட்டம் என்ற நிை-லபேற்று நிலை நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மீதான ஆரம்ப கலந்துரையாடல் | நிலைபேற்று நிலை பாடசாலை அபிவிருத்தி |
| 143 | 28.12.2017 | 2018ஆம் ஆண்டில் ஏற்பாடுகளை என்ன விதத்தில் பயன்படுத்தலாம் என்பது பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது | முன்னேற்றம் பற்றிய மீளாய்வு |
| 144 | 28.12.2017 | நாட்டப்பட்ட சிறுநீரக நோயை ஒழிப்பதில் சுதேச மருத்துவம் பயன்படுத்தப்படுவதை ஊக்குவிப்பது மீதான கலந்துரையாடல் செய்யப்பட்டுள்ளது | சிறுநீரக நோயை ஒழித்தல் |
| 145 | 28.12.2017 | நிலைபேற்று நிலை பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுநீரக நோய் மற்றும் தொற்றா நோய்கள் ஒழித்தல் மீதான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கு ஒன்றின் மீதான கலந்துரையாடல் | நிலைபேற்று நிலை பாடசாலை அபிவிருத்தி |
| 146 | 29.12.2017 | நிலைபேற்று நிலை பாடசாலைகள் நிகழ்ச்சித் திட்டம் | நிலைபேற்று நிலை பாடசாலை அபிவிருத்தி |

# சனாதிபதி நிதியம்

## முன்னுரை

உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் க.பொ.த (உயர்தரம்) வகுப்பில் படிப்பதற்கு குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வசதியளிப்பதற்கும் பிற கருத்திட்டங்களுக்கு வசதியளிப்பதற்குமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினதும் இலங்கை பிரசைகளுக்கான நிதியத்தின் ஆளுநர்கள் சபையினதும் கொள்கைத் தீர்மானங்களின் நியதிகளின் படி சனாதிபதி நிதியத்தின் பதவியினர்களையும் உள்ளடக்கி சனாதிபதியின் செயலாளரினால் நிதி உதவி வழங்கப்படுகின்றது. சனாதிபதி நிதியமானது அபிவிருத்தி லொத்தர் சபையின் வருடாந்த வருமானத்தின் 50 நூற்றுவீதத்தை மகாபொல உயர்கல்வி நியத்திற்கு வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## குறிக்கோள்

- வறுமையைக் குறைப்பதற்காக நிதி உதவி வழங்குதல்
- கல்வி மற்றும் அறிவை மேம்படுத்துதல்
- சமயங்களின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்
- நாட்டிற்கு சேவை செய்த நபர்களுக்கு விருது வழங்குதல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களினதும் ஆளுநர்கள் சபையினதும் அபிப்பிராயத்தில் பொது மக்களின் நலனோம்பலை உறுதிப்படுத்தும் சிறப்புப்பணிகளை செய்து முடித்தல்

## 2017ஆம் ஆண்டில் நிகழ்த்திய சாதனைகள்

1. 2017ஆம் ஆண்டில் சனாதிபதி நிதியத்திற்கு மதிப்பிடப்பட்ட வருமானமாக 500 மில்லியன் ரூபாவைக் கொண்ட தொகை அபிவிருத்தி லொத்தர்ச் சபையிடமிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 2017ஆம் ஆண்டின் முடிவில் அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து 2001லிருந்து 2009 வரையான காலப்பகுதி தொடர்பில் வரி நிலுவைகளாக அபிவிருத்தி லொத்தர் சபையினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த 1807மில்லியன் ரூபாவை உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது முழுமையாக அறவிட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகையில் 364.57 மில்லியன் ரூபா மாத்திரமே அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து கிடைத்துள்ளது. இதன் விளைவாக சனாதிபதி நிதியத்திற்கு ஊட்டுகை தொடர்ச்சியாக ஆகக் குறைந்த அளவிலேனும் கொள்ளப்படுவதற்காக අමප / 17/1226/701/015 ஆம் இலக்கத்தைக் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் மூலம் 1000 மில்லின் ரூபாவைக் கொண்ட பணத்தொகையை வழங்குவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

| வருமானத்தின் மூலம் | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|
| அபிவிருத்தி லொத்தர் சபை | 346.54 |
| வட்டி வருமானமும் நன்கொடைகளும் | 88.09 |
| நிலையான வைப்புகள் மற்றும் பிற பெறுகைகளின் மீளப் பெற்றுக் கொள்ளல் | 569.44 |
| சனாதிபதி நிதியத்தில் இருந்த தொகை | 6.44 |
| அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தொகை | 775.00 |
| மொத்தம் | 1785.51 |




2. தற்போது சனாதிபதியின் நிதிய அலுவலகம் வைத்திருக்கப்படும் றேணுகா கட்டடத்தின் 1வது மாடியில் சனாதிபதி நிதியத்தின் கணக்கு கூறு நிறுவப்பட்டுள்ளது. இது ஏனெனில் பெரும் எண்ணிக்கையில் தினந்தோறும் வருகை புரியும் வாடிக்கைகளுக்கும் பதவியினர்களுக்கும் இடவசதி வழங்குவதற்கு போதியளவு இடம் இல்லாததனால் என்பதாகும்.

3. விதிமுறையான அலுவலக வடிவமைப்பின் திட்டமிடலும் புதிய வேலை மேசைகளையும் நாற்காலிகளையும் கொள்வனவு செய்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான வசதிகளை அதாவது

- மருத்துவ உதவி கூறு
- புலமைப்பரிசில் கூறு
- சனாதிபதி நிதியப் பிரிவு

ஆகியவற்றை சனாதிபதி செயலகத்தின் உற்பத்திவள ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்குச் சமாந்தரமாக மேம்படுத்துதல்

4. இற்றை வரைக்குமானதாக்கப்பட்டுள்ள தகவல்களுடன் சனாதிபதி நிதியத்தின் வலைகடப்பிடத்தை மீளவடிவமைத்தல்

5. சனாதிபதி நிதியப் பிரிவின் செயற்பாடுகள் தன்னியக்க கணனிமயப்படுத்தப்பட்ட நடைமுறையின் கீழ் இந்த முறைமையின் ஏற்கனவேயுள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கும் தகவல் தொழினுட்பவியலின் மீதான நிபுணத்துவ அறிவுடன் மனிதவளங்களை எதிர் நோக்குவதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

6. க.கொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு தோற்றுவதற்கு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து புல-மைப்பரிசில்கள் வழங்குதல் தொடர்பில் தவணைக் கட்டணங்களின் கொடுப்பனவைப் பூர்த்தி செய்தல்

7. சனாதிபதி நிதியத்தின் பதவியினர்களின் ஆளுமை அபிவிருத்திக்கான சனாதிபதி செயலகத்தின் மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் ஒழுங்குபடுத்தப்படும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான சனாதிபதி செயலகத்தின் adverting பதவியினர்கள்

- தொழில்சார் மேம்பாட்டிற்கு உதவுகின்ற அழுத்தம் கையாளுகை முறையியல்கள் மீதான வேலைக்களம்
- சகல பதவியினர்களுக்குமான உற்பத்திவள வேலைக்களம்

- விளைபயனுள்ள அரசாங்க சேவைகளுக்கும் வெற்றிகரமான தனிப்பட்ட வாழ்க்கைக்கு ஆக்கப்பூர்வமான சிந்தனை நிகழ்ச்சித்திட்டம்
- ஆரோக்கியமான நீண்ட கால வாழ்க்கைக்கு செம்மையான உணவுப் பழக்கங்கள் மீதான விழிப்புணர்வு வேலைக்களம்
- மிலோடா நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள் - விதிமுறையான கடிதம் எழுதும் தேர்ச்சிகள்
- தேர்ச்சிகள் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அலுவலக உபகரணங்களைக் கையாளுதல் மீதான வேலைக்களம்

8. சனாதிபதி நிதியத்தின் மருத்துவ உதவி மானியங்களை அதிகரித்தல்

சனாதிபதி நிதியத்திலிருந்து மருத்துவ உதவி பெறத்தகுதியுடைய நோய்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

- கில்லெயின் பரே சின்டிறோம்
- காக்கை வலிப்பு அறுவைச் சிகிச்சை

9. சனாதிபதி நிதியத்திலிருந்து மருத்துவ உதவியை வழங்குவதற்கான புதிய மருத்துவசாலைகளின் பதிவு

| மருத்துவசாலை | நோய் |
|---|---|
| 1. லீசக் மருத்துவசாலை றாகம | டயலிசிஸ் சிகிச்சை |
| 2. அபேக்ஷா மருத்துவசாலை, மஹரகம | எலும்புமச்சை மீள் பொருத்துகை அறுவைச் சிகிச்சைக்கான பிறியோ பரிசோதனைகள் |
| 3. லங்கா மருத்துவசாலை, நாரஹேன்பிட்டி | எலும்புமச்சை மீள் பொருத்துகை அறுவைச் சிகிச்சை |
| 4. பிரென்ஸ் மருத்துவசாலை, றாகம | டயலிசிஸ் சிகிச்சை |
| 5. நாவின்ன மெடிக்கெயர் மருத்துவசாலை, மஹரகம | இடுப்பு, முழங்கால், தோள் இணைப்புகள் அறுவை சிகிச்சையும் விலாத்தொடர் அழுத்துகை அறுவை சிகிச்சையும் |

2017 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சனாதிபதி நிதியச் செலவினம்

| நோக்கம் | தொகை (மில்லியன் ரூபாவில்) |
|---|---|
| மருத்துவ உதவிக்கு | 1357.50 |
| மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியம் | 172.16 |
| கல்விக்கும் புலமைப்பரிசிலுக்கும் | 7.95 |
| நலனோம்பல் செயற்பாடுகளுக்கு | 0.05 |
| சமய நடவடிக்கைகளுக்கு | 3.40 |
| கலாசார நடவடிக்கைகளுக்கு | 1.00 |
| கலை வேலைக்கு | - |
| மொத்தம் | 1542.06 |




சனாதிபதி நிதியத்திலுள்ள பணம் அரச வங்கிகளில் நிலையான வைப்பிலும் மற்றும் திறைசேரி முறியிலும் வைப்பு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பு : மேற் காட்டப்பட்டுள்ள புள்ளிவிபர விபரம் தற்போது கணக்காய்வு செய்யப்படுகிறது.

# பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு

## முன்னுரை

அதிமேதகு சனாதிபதிக்கு அனுப்பப்படும் சகல அரசாங்கப் பணியாளர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் பிரச்சினைகளும் கோரிக்கைகளும் அவற்றிற்கு உடனடியாக சலுகைகளைப் பெற்றுக் கொடுப்பதன் பொருட்டு இயைபுள்ள அமைச்சுகளுக்கும் திணைக்களங்களுக்கும் இப்பிரிவினால் அனுப்பி வைக்கப்படுகின்றன.

## பொதுக்குறிக்கோள்கள் / பணிகள்

- மின் அஞ்சல், தபால்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மூலம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் பொது மக்களுடைய கோரிக்கைகளுக்கு உடனடியாக அனுசரணையை வழங்குவதன் மூலம் ‘‘சனாதிபதிக்கு கூறுங்கள்’’ என்ற நிகழ்ச்சித்திட்டம் இப்பிரிவினால் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

- பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவிற்கு நேரடியாக வருகின்ற மக்களுக்கு உடனடியான அனுசரணையை வழங்குவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

- பொதுமக்களினால் செய்யப்படும் முறைப்பாடுகளை அரசாங்க நிறுவனங்களுக்கு அனுப்புவதன் மூலம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்படும் விஞ்ஞாபனங்களுக்கு உடனடியான அனுசரணையைப் பெற்றுக் கொடுப்பதற்காக இவ்விடயத்தில் தலையீடு செய்தல்

- சகல அமைச்சுகளையும் திணைக்களங்களையும் கூட்டிணைப்பதன் மூலம் பணியாளர்களின் பிரச்சினைகளை கையாளுவதற்காக விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

- சனாதிபதி அவர்களின் இடம் பெயர் சேவையினால் பெற்றுக்கொள்ளப்படும் பொது மக்களின் மனக்குறைப்பாடுகளுக்கு உடனடியாக அனுசரணையை பெற்றுக் கொடுத்தல்.

## 2017ஆம் ஆண்டில் எய்தப்பட்ட சாதனைகள்

### “சனாதிபதிக்கு சொல்லவும்” நிகழ்ச்சித்திட்டம்

### முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழிவகைகள்

| ஊடகம் | பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| தபால் | 41869 |
| தொலைபேசி | 12171 |
| வலைக்கடப்பிடங்களும் மின் அஞ்சல்களும் | 4536 |
| பாக்ஸ் (தொலைநகலி) | 455 |
| **மொத்தம்** | **59031** |




**முறைப்பாடுகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள்**

| | |
|---|---|
| நடவடிக்கை எடுக்கப்பட்டவை | 16623 |
| நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டு இருக்கப்படுபவை | 32568 |
| செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுகின்றன | 9840 |
| **மொத்தம்** | **59031** |




- புள்ளி இலக்க சமூகத்தாக்க அளிப்புகள் 2017இல் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு "ஈசுபாபிமானி"யும் "பொது மக்கள் மற்றும் பிரசைகள் துறை"யில் முதலாவது இடமும் வழங்கப்பட்டுள்ளன.

- பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவிற்குள் நேரடியாக வருகின்ற மக்ளின் பிரச்சினைகளுக்கு துரித தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்

பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவிற்கு நேரடியாக உட்பட்டுள்ள 4,000ற்கும் மேற்பட்ட மக்களின் விடயங்கள் தொடர்பில் அந்த மக்கள் ஆக்கப்பூர்வமான அனுசரணைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியவர்களாக விருந்துள்ளனர்.

- பொதுமக்களினால் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைகள் மூலமாக அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்ட நினைவூட்டற் கடிதங்களுக்கு உடனடியாக அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.

  இப்பிரச்சினைகளில் 2017ஆம் ஆண்டில் மொத்தமாக 38 பொது மக்களின் ஆட்சேபனைகள் மற்றும் முறைப்பாடுகளை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தொழில் பாதுகாப்பு தொடர்பிலான 06 முறைப்பாடுகளும் காசுவைப்பாளர்களின் 03 முறைப்பாடுகளும் அரசாங்கத்தினால் இயற்றப்பட்ட புதிய சட்டங்கள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் செய்யப்பட்ட 04 முறைப்பாடுகளும் முப்படைகளின் சங்கங்களின் 06 முறைப்பாடுகளுடனும் ஓய்வூதியர்களின் 04 முறைப்பாடுகளும் மனித உரிமைகள் தொடர்பிலான 05 முறைப்பாடுகளுடனும் காணிகள் கைப்பற்றல் மற்றும் வழங்கப்பட்ட நட்டஈடு தொடர்பிலான முறைப்பாடுகளும் மதகுருமார்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 04 முறைப்பாடுகளும் பட்டதாரிகளின் 01 முறைப்பாடும் பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களின் 01 முறைப்பாடும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

- சகல அமைச்சுகளையும் மாகாண சபைகளையும் கூட்டிணைப்பதன் மூலம் பணியாளர்களின் விடயங்களை கையாளுவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம்.

  இந்த நிகழ்ச்சித்திட்டம் சகல அரசாங்க நிறுவனங்களிலுமுள்ள பணியாளர்களின் விடயத்தில் அவர்களுடைய தீர்க்கப்படாமலுள்ள விடயங்களையும் மனக்குறைகளையும் தீர்ப்பதன் பொருட்டு கோரிக்கைகளை அவர்கள் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பொன்றை வழங்குவதற்கும் அவற்றிற்கான சுறுசுறுப்பான அட்டவணையொன்றின் மூலமாக தீர்வுகளை வழங்குவதற்கும் அல்லது விளக்கங்களை அளிப்பதற்குமான குறிக்கோளுடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. தற்போது இந்த நிகழ்ச்சித்திட்டமானது 34 அமைச்சுகளில் வெற்றிகரமாக அமைக்கப்பட்டுள்ளதுடன் நியமனங்கள், பதவி உயர்வுகள், நியமனத்தில் உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுடன் இயைபுள்ள 1688 விடயங் களையும் கொடுப்பனவுகள் மற்றும் படிகள் தொடர்பிலான 534 விடயங்களையும் இடமாற்றங்கள் தொடர்பிலான 483 விடயங்களையும் கடமைகள் தொடர்பிலான 1009 விடயங்களையும் உரிய அந்தந்த அமைச்சுகளுக்கு அனுப்பியதன் மூலமாக தீர்வைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாகவிருந்தது.

- சனாதிபதியின் இடம்பெயர் சேவையினால் பொதுமக்களின் கவலைகளுக்கு உடனடி அனுசரணை வழங்குதல்

  சனாதிபதி செயலகத்தினல் நடாத்தப்பட்ட இடம் பெயர் சேவைகளின் போது அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு பொதுமக்களினால் அனுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் பொது மக்கள் தொடர்பாடல் பிரிவினால் அவற்றை இயைபுள்ள நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டதன் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதைப்போலவே இந்நாட்டிலுள்ள சகல மாகாணங்களையும் அளாவுகின்ற ''நில மெஹேவர ஜனபதி ஜனதா சேவய''என அழைக்கப்படும் இயைபுள்ள இடப்பெயர் சேவையினால் சனாதிபதி செயலகத்தின் சார்பிலான சகல கூட்டிணைப்புகளும் இப்பிரிவினால் செய்யப்படுகின்றன.

- பிறவிடயங்கள்

  ''சனாதிபதிக்கு கூறவும்'' என்ற நிகழ்ச்சித்திட்டம் அரசாங்கதுறை நிறுவனங்களையும் உள்ளடக்கி அமைச்சுகள், மாகாண சபைகள் மற்றும் மாவட்ட செயலகங்கள் வரை பரந்தளவில் பரவலாக்கப் பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டத்திற்கான இயைபுடன் பயன்படுத்தப்பட்ட தரவுத்தளத்தின் இரண்டாவது கட்டடத்திற்கான திருத்தங்கள் 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ''சனாதிபதிக்கு கூறவும்'' நிகழ்ச்சித்திட்டத்தை நவீன மயப்படுத்துவதற்கும் நடைமுறையை மேம்படுத்துவதற்குமாக 20 அமைச்சுக்களையும் 03 மாகாண சபைகளையும் 02 மாவட்டச் செயலகங்களையும் அளாவி தகவல்களைச் சேகரித்தல் மீதான நான்கு நாட்கள் அளவையானது பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு சிங்கப்பூர் ரெமாசெக் பவுண்டேசன் இன்ரர் நாஷனல் மற்றும் சிவில் சேவைக் கல்லூரி ஆகியவற்றின் உடனுழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

  அமைச்சுகள் மாகாண சபைகள் மற்றும் பிற அரசாங்க நிறுவனங்களின் நிறுவன ரீதியான பணிகளை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மதிப்பிடுவதற்காக ''சனாதிபதிக்கு கூறவும்'' நிகழ்ச்சித்திட்டத்தின் ஒழுங்குபடுத்தலை மதிப்பிடுவதற்கும் மீளாய்வு செய்வதற்குமாக ஓர் விசேட கூறு நிறுவப்பட்டுள்ளது. இதற்கமைவாக 03 முன்னேற்ற மீளாய்வுகள் சனாதிபதியின் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளன. உடனடியாக சனாதிபதி அலுவலகத்திற்கு பயிற்சிக்கான தேவைப்பாடுகளை அறிவிப்பதற்காக இலத்திரோனிக் அஞ்சல் முகவரி வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் 2017ஆம் ஆண்டில் 20 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

# சட்டப் பிரிவு

**முன்னுரை**

இப்பிரிவு 2015 மார்ச் 18ஆந் திகதியன்று நிறுவப்பட்டுள்ளதுடன் இது சனாதிபதி செயலகம் சம்பந்தப்பட்ட சகல சட்ட நடவடிக்கைகளையும் வழிப்படுத்துமெனவும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான விடயங்களில் சட்ட ஆலோசனையை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**பிரதான பணிகள் / குறிக்கோள்கள்**

1. செய்யப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளின் வரைவு, சட்டங்களின் வரைவுகள், ஓம்புட்ஸ்மன் அறிக்கைகள் அல்லது சட்டத்துறை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேலதிகச் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்ட சர்வதேச ரீதியான எழுப்பப்பட்ட சட்டவிடயங்களின் ஆய்வு மீது இயைபுள்ள அறிக்கைகளை கோருதல் மற்றும் அவதானிப்புரைகளைச் சமர்ப்பித்தல்.

2. சட்டத்துறை தொடர்பிலான சகல கடிதங்களின் மீது அவதானிப்புரைகளையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தலும் சனாதிபதியின் செயலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆய்வு செய்து அத்தொடர்பில் தேவையான ஆவணங்களை வரைதலும்.

3. புலன் விசாரணை ஆணைக்குழச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள சனாதிபதி புலன் விசாரணை ஆணைக்குழுக்கள்

   i. மேற்போந்த விடயத்தில் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி புலன் விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால குழு அறிக்கைகளை ஆய்வு செய்வது அவற்றை சுருக்கமாக்குதலும் அது பற்றி சனாதிபதி அவர்களுக்கும்

   ii. இந்த ஆவணக்குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கைகளை ஆய்வு செய்தலும் சனாதிபதி அவர்களின் இணக்கத்துடன் ஆணைக்குழுவின் சிபாரிசின் பிரகாரம் மேற்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அவற்றை இயைபுள்ள நிறுவனங்களுக்கு அனுப்புதலும்

   iii. அறிக்கைகளை கூட்டிணைக்கும் மேற்போந்த ஆணைக்குழுவினால் முன்மொழிவு செய்யப்பட்ட பிற சிபாரிசுகளுடன் இயைபுள்ள நிறுவனங்களுக்கு அனுப்புதலும்.

4. நீதி முறைச் செயற்பாடுகள்

   i. அதிமேதகு சனாதிபதி எதிர்வாதியாக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் வழக்குகளிலும் சனாதிபதியின் செயலாளர் அல்லது சனாதிபதியின் பதவியினர்கள் தொடர்புபடுத்தப்பட்டு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் உள்ள விடயங்களை கூட்டிணைத்தலும் சமர்ப்பித்தலும்.

   ii. நீதிமன்றத்தில் கட்டுக்காப்பிலுள்ள சனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான ஆதனங்களை விடுவிக்குமாறு கோருகின்ற சமர்ப்பிப்புகளை கூட்டிணைத்தலும் சமர்ப்பித்தலும்

5. சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட பிற குழுக்கள்

   i. இயைபுள்ள குழு அறிக்கைகளை ஆய்வு செய்து அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் சனாதிபதியின் செயலாளருக்கும் சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.

6. சனாதிபதி செயலகத்தின் தினசரி உத்தியோகபூர்வ கடமைகளின் சட்ட விடயங்கள் மீது தேவையான ஆலோசனையை வழங்குதல்

   i. உள்ளக நிருவாகப் பிரிவு

   - சனாதிபதி செயலகத்தினால் கட்டப்பட்ட வாடகை தொடர்பில் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் மீது ஆய்வு செய்தல்
   - அரசாங்க நிறுவனங்களிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகள் பெறுகை செய்தல் தொடர்பிலான சட்ட ஆவணங்களை ஆய்வு செய்தலும் அவதானிப்புரைகளையும் சிபாரிசுகளையும் செய்தலும்

அ. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் பிரிவு

- செய்யப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் தொழினுட்ப சேவைகளைப் பெறுவதற்கான வரைவுகள் இப்பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் மீது இப்பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் மீது இப்பிரிவினால் அவதானிப்புரைகளும் சிபாரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆ. போக்குவரத்துப் பிரிவு

- சனாதிபதி செயலகத்தினால் வாடகை வாகனங்களுக்காக செய்யப்பட்ட உடன்படிக்கைகள் பற்றி இப்பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டு அவதானிப்புரைகளும் சிபாரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

ii. மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவும் தாபனம் கூட்டிணைப்புப் பிரிவும்

- சனாதிபதி செயலகத்தின் பணியாளர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களின் அவர்களினால் மீள் கொடுப்பனவுகள் செய்யப்படாத விடயங்கள் மீது இப்பிரிவினால் ஆலோசனை வழங்களும் சிபாரிசுகள் செய்தலும் மேற்கொள்ளப்படுகின்றன.
- சுதந்திரமான ஆணைக்குழுக்கள் தொடர்பிலான வரைவுகளும் சட்ட மூலங்களும் பற்றி ஆய்வு செய்தலும் அவதானிப்புரைகளும் சிபாரிசுகளும் சமர்ப்பிக்கப்படுதலும்.
- சனாதிபதி செயலகத்தின் கீழுள்ள தாபனங்களின் வரைவுகள் மற்றும் சட்டமூலங்கள் பற்றிய ஆய்வும் அவற்றின் மீதான அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகள் சமர்ப்பித்தலும்.

iii. அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட அலுவல்கள் பிரிவு

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் செய்யப்படும் நியமனங்கள் மீது ஆலோசனைகளை வழங்குதல்.
- சனாதிபதி அவர்களின் மீது அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பிற செயற்பாடுகளின் கீழ் செய்யப்படும் நியமனங்கள் மீது ஆலோசனை வழங்குதல்

iv. கொள்கை மற்றும் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டிணைப்பு கண்காணிப்புப் பிரிவு

- தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கைகளை ஆய்வு செய்து அவற்றின் மீதான அவதானிப்புரைகளையும் சிபாரிசுகளையும் செய்தல்

v. பதவியினர்கள் பிரிவின் பிரதாணி

- தேசிய ரீதியில் முக்கியத்துவமுடைய பிவிதென பொலன்னறுவை கருத்திட்டம் தொடர்பிலான அரசாங்க நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கு சட்ட உதவி வழங்குதல்

vi. பிரத்தியேகச் செயலாளர் பிரிவு

- நேரடியாக சனாதிபதி அவர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்ட பொதுமக்களின் கரிசனைகள் மீது நடவடிக்கை எடுத்தலும் தேவையான சட்ட நடவடிக்கைகளை வழங்குதலும்

vii. விசேட கருத்திட்டப் பிரிவு

- இப்பிரிவினால் பல்லின அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது தனியார்துறையுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளைப் பற்றி ஆய்வு செய்தலும் அவற்றின் மீது அவதானிப்புரைகளும் சிபாரிசுகளும் சமர்ப்பித்தல்
- NADep உடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் பற்றி ஆய்வு செய்தலும் தொடர்புடைய சிபாரிசுகளைச் செய்தலும்.

7. அமைச்சரவை உபகுழுவிற்கு தொடர்புபடுத்தப்பட்ட சட்ட வரைவுகள் மீது தீர்மானம் எடுப்பதற்கு சனாதிபதி செயலகத்திற்கு பங்களிப்புச் செய்தல்.

8. அமைச்சரவையினால் சனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பப்படும் புதிய சட்டவாக்கங்கள் மற்றும் சட்டங்கள் மீது தேவைப்படுமிடத்து சிபாரிசுகளை சமர்ப்பித்தல்

9. சட்ட அதிபருடனும் சட்டவரைஞர் திணைக்களத்துடனும் கூட்டிணைப்பை மேற்கொள்ளுதல்

10. நீதிகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கூட்டிணைத்தல்

11. அதிமேதகு சனாதிபதியினால் தெரிவிக்கப்படும் ஆலோசனையின் பிரகாரம் முறைமை தொடர்பில் சனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் கவனத்தைக் கோருதலும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுதலும்.

**2017 ஆம் ஆண்டில் எய்தப்பட்ட சாதனைகள்**

2016 ஆம் ஆண்டிலிருந்து முன் எடுத்துச் செல்லப்பட்ட வழக்குக் கோப்புகளின் எண்ணிக்கை. - 35

2017 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட வழக்குக் கோப்புகளின் எண்ணிக்கை - 21

**வழக்கு கோப்புகளின் மொத்த எண்ணிக்கை**

| விடயங்களின் மொத்த எண்ணிக்கை | 2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை | நீதிமன்றங்களில் இன்னும் முடிவுறாத நிலையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 56 | 08 | 48 |



# உள்ளக கணக்காய்வுப் பிரிவு

**முன்னுரை**

சனாதிபதியின் செயலாளரின் கீழ் நிறுவப்பட்டுளள இப்பிரிவிற்கு சனாதிபதி செயலகத்தினதும் அதன் கீழ் உள்ள பிற நிறுவனங்களினதும் உள்ளக கணக்காய்வுகளையும் சனாதிபதியின் செயலாளரினால் இப்பிரிவிற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வு புலன் விசாரணைகளையும் மேற்கொள்ளும் சிறப்புப் பணி குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

**பொதுக் குறிக்கோள்கள் / பணிகள்**

- ஒழுங்கீனங்களையும் மோசடிகளையும் தடைசெய்வதிலும் வெளிப்படுத்துவதிலும் மேற்கொள்ளப்படும் உள்ளகப் பரிசோதனைகளின் கிரம நிலையையும் போதுமானவைகளாக இருக்கின்றனவா என்ற நிலையையும் பற்றி தொடர்ச்சியான அளவையை பேணுதலும் சுதந்திரமான மதிப்பீட்டைச் செய்தலும்.

- வேலையினதும் முன்மொழிவுகளினதும் கருத்திட்டங்களினதும் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதில் சனாதிபதியின் செயலாளருக்கு உதவி புரிதல்.

**2017 ஆம் ஆண்டில் எய்தப்பட்ட சாதனைகள்**

| தொடர் இல. | திட்டம் | நிலைமை | வள நூற்றுவீதம் |
|---|---|---|---|
| 01. | அபிவிருத்தி மற்றும் விசேடக் கருத்திட்டப் பிரிவின் கீழ் போதைவஸ்துகளை தடை செய்தல் சனாதிபதி சிறப்புப் பணிப்படையினால் செய்யப்பட்ட உள்ளகக் கணக்காய்வு | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 02. | நிதி முகாமைத்துவப் பிரிவினால் பேணிவைத்திருக்கப்படும் கணக்குகளும் ஆவணங்களும் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 03. | அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் கீழ் நடாத்தப்படும் சிறுநீரக நோய்களைத் தடை செய்வதற்கான சனாதிபதி சிறப்புப் பணிப்படையின் பணி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 04. | “பிவிதும பொலன்னறுவை” மாவட்ட அபிவிருத்தி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 05. | அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சுற்றாடல் பேணுகை தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மீட்பு சுற்றாடல் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 06. | இலங்கை பவுண்டேசன் நிறுவகம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 07. | திறமுறை தொழில் முயற்சியாளர் நிலைக்கான முகாமைத்துவ நிறுவகம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 08. | சனாதிபதி நிதியம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 09. | சனாதிபதி செயலகத்தின் போக்குவரத்துக் கூறின் தொடர்பிலான நிதிக் கட்டுப்பாடும் நிருவாக விடயங்களும் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 10. | நெலும் பொக்குண மகிந்த ராஜபக்ஷ தியேட்டர் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 100% |
| 11. | திருகோணமலையிலுள்ள “சிரசர பிவிசும” மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | அறிக்கை சமர்ப் பிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளது | 75% |
| 12. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் (நடாத்தப்படுவதற்கு முன்மொழிவு செய்யப்பட்டுள்ள கூட்டம்) | 03 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன | 75% |

# ஊடகப் பிரிவு

**முன்னுரை**

சனாதிபதி செயலகத்தில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆதரவுடன் நடாத்தப்படும் விசேடக் கூட்டங்கள் / கலந்துரையாடல்கள்/ வைபவங்கள் தொடர்பில் செம்மையான தகவல்களை பிற ஊடக முகவர் நிலையங் களுக்கு பொறுப்புடன் வழங்க வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

**2017ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சாதனைகள்**

| பிரிவுக் கூறின் பெயர் : பதிப்புப் பிரிவு | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1. அரசாசாங்க அபிவிருத்தி நடைமுறையிலான இரண்டு ஆண்டுக்கால (2) அபிவிருத்திப் புத்தகத்தின் தொகுப்பு (சனவரி 08ஆந் திகதியின் ஞாபகார்த்தத்தைக் குறிப்பதற்கானது) | சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் 08 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்போந்த வெளியீடுகளுடன் சனாதிபதி ஊடகக் கூறினால் 21 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.<br>● தேவசாரக சங்வர்த்தன மெகேவர - இரண்டு ஆண்டுகளின் அபிவிருத்தி வேலைகள்<br>● திரசர தேவசர – (நிலைபேற்று நிலை இரண்டு ஆண்டுகள்) (சிங்களம்)<br>● திரசர தேவசர – (நிலைபேற்று நிலை இரண்டு ஆண்டுகள்) (சிங்களம்)<br>● பிவிதெமு பொலன்னறுவை<br>● மைத்திரி – திருப்புமுனை (தமிழ்)<br>● ஸ்ரீலங்காவே சங்வர்த்தன அபியோக (இலங்கையிலுள்ள அபிவிருத்திச் சவால்கள்)<br>● மொறகஹகந்த மற்றும் களுகங்கைகளிலான அபிவிருத்திக்கருத்திட்டம்<br>● மங்கள் தியவர ரெதவும் மாங்கல்ய |
| 2. அதிமேதகு சனாதிபதியின் உரைகளையும் உள்ளடக்கிய புத்தகமொன்றினை அச்சிடல் | “யுதுகம” புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. (யுதுகம) |
| 3. அதிமேதகு சனாதிபதி அவர்களின் கருதுகோகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட சமூகத்தை உள்ளிட்ட சஞ்சிகையொன்றை அச்சிடுதல் | “வெனச” சஞ்சிகையின் 06 தொகுதிகள் கடந்த ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. |
| 4. இந்நாட்டின் பல மாகாணங்களிலுள்ள பிரதேச பத்திரிகையாளர்களுக்கு கருத்தரங்குகளை நடாத்துதல் | அதிமேதகு சனாதிபதியின் செய்திகளை வெளியிடுவதில் ஈடுபட்டுள்ள பத்திரிகையாளர்களுடன் 10 கலந்துரையாடல் சுற்றுகள் நடாத்தப்பட்டுள்ளன. |
| ஏனையவை | சுகல அமைச்சுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகச் செயலாளர்களுடன் 02 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. |

| பிரிவின் / கூறின் பெயர் : வலைகடப்பிடங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1. அதிமேதகு சனாதிபதி அவர்களின் அரசாங்க கொடை முனைவுகளின் சமூக உட்சேர்ப்பு | கணிசமான அளவில் சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கத்தின் கொடைமுனைவுகள் அறிவிக்கப்பட் டுள்ளன. உத்தியோகப்பூர்வ வலைக்கடப்பிடங்கள் சர்வதேச மாநாடுகள் மற்றும் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள் மூலமாக பரந்த அளவிலான சேவைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. |
| 2. அதிமேதகு சனாதிபதி அவர்களின் நிகழ்ச்சித் திட்டங்களும் கிராமங்களுக்குள் புதிய அறிவை பரப்புதலும் | அபிவிருத்திச் செய்திகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஊடாக நாட்டிலுள்ள கிராமங்களின் அபிவிருத்தியும் கிராமங் களுக்குள் புதிய அறிவுடன் முறையாக பரப்பப்பட வில்லை |
| 3. அதிமேதகு சனாதிபதியின் வலையமைப்புத் தொழிற்பாடுகளும் தரமுயர்த்தலும் இற்றை வரையான தாக்குதலும் | இது தகுந்த முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதைப் போலவே அது சிறந்த மட்டத்திற்கு தரமுயர்த் தப்பட்டுள்ளது. |
| 4. ஏனையவை | அதிமேதகு சனாதிபதி அவர்களின் தோற்றப்பாட்டை கட்டி எழுப்புதல் சமூக ஊடகங்களுக்குள் செயலாற்றுகை தரமுயர்த்தப்பட்டுள்ளது. |

| பிரிவின் / கூறின் பெயர் : நிழற்படப் பிரிவு | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1. ஒளிப்படப் பிம்பங்களை அச்சிடல் | அதிமேதகு சனாதிபதி தொடர்பிலான நிழற்படங்களையும் இந்நாட்டின் அபிவிருத்தி மீதான செய்திகளையும் அனுப்புதல் |
| 2. ஒளிப்படப் பிரதிகளுக்கு சட்டமிடுதல் | ஏறத்தாழ ஒளிப்படச் சட்டங்கள் சனவரியிலிருந்து திசெம்பர் வரை பல்வேறு அளவுகளில் அச்சிடப்பட் டுள்ளன. |
| 3. விசேட வைபவங்களின் நிழற்படங்கள் அல்பத்தை தயாரித்தல் | அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்குபற்றியுள்ள சிங்களப் புத்தாண்டு வழக்கங்களைப் புரிதல் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் நடாத்தப்பட்ட பல்வேறு பிற நிகழ்ச்சிகளையும் பொலன்னறுவையில் நடாத்தப் பட்ட இளைஞர் முகாமின் விசேட நிகழ்ச்சிகள் மற்றும் போசன் தர்மசாலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் நிழற்படங்கள் அல்பத்தின் தயாரிப்பு |

| **பிரிவின் / கூறின் பெயர் : நிழற்படப் பிரிவு** | |
|---|---|
| 4.வெளிநாட்டு விஜயங்களின் நிழற்படங்கள் அல்பத்தின் தயாரிப்பு | இலங்கைக்கு விஜயம் புரிந்த வெளிநாட்டுப் பிரமுகர்கள் மற்றுத் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் வெளிநாடுகளுக்கு புரியப்பட்ட விஜயங்கள் தொடர்பில் போட்டோ அல்பங்களின் தயாரிப்பு<br>● மலேசியாவிற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● கட்டாருக்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● ரஷ்யாவிற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● அவுஸ்ரேலியாவிற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● பங்களாதேஷிற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● ஐக்கிய அமெரிக்க நாடுகள் இராச்சியத்திற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம்<br>● இலங்கைக்கு இந்திய முதலமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட விஜயம் |
| 5.உபகரணங்களின் பழுது பார்த்தல் | லாப்ரொப், கனன் IDX புகைப்படக்கருவி, நிக்கன் கமராவின் உபகரணங்கள் மற்றும் நிழற்படப் பிரதியெடுத்தல் பொறி ஆகியவற்றின் பழுது பார்த்தல் |
| ஏனையவை | திரசரா யுகயக்க தேவசரக்கா எரபுமவைக் குறிப்பதற்காக பண்டார நாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்தப்பட்ட வைபவத்திற்குச் சமாந்தரமாக கார்ட்டூன் பொருட்காட்சியொன்று நடாத்தப்பட்டது |

| **பிரிவின் / கூறின் பெயர் : சர்வதேச ஊடக மற்றும் ஆராய்ச்சிப்பிரிவு** | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1.தெரிவு செய்யப்பட்ட விடயங்களுக்கு அமைவாக வட்டமேசை கலந்துரையாடல்களை / கருத்தரங்குகளை நடாத்துதல் | ஊடகத் துறையினர்களுக்கு வட்டமேசை கலந்துரையாடல்கள் நிகழ்ச்சிகளின் சுருக்கக் குறிப்புகள் வழங்கல் மற்றும் 06 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |
| 2.தொழினுட்ப உபகரணங்கள் | - |
| 3.கடிதங்களை வரைதல் / மொழி பெயர்ப்புகள் | அதிமேதகு சனாதிபதியின் கருத்திட்டங்கள் தொடர்பில் 120 கடிதங்கள் வரையப்பட்டுள்ளன. |
| ஏனையவை | - |

| **பிரிவின் / கூறின் பெயர் : வீடியோ மற்றும் பதிப்புப் பிரிவு** | |
|---|---|
| செயற்பாடு | 2017ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட சிறப்புப் பணியின் விவரங்கள் |
| 1.அதிமேதகு சனாதிபதி பங்குபற்றிய சகல வைபவங்களின் விவரங்களை ஊடகங்கள் வெளியிட்டுள்ளதுடன் அவற்றின் அதிமுக்கிய விவரங்களை ஊடகங்களின் சகல மார்க்கங்களிலும் வழங்குதல் | நாளொன்றுக்கு அளாவப்பட்டுள்ள சராசரி ஊடக மார்க்கங்கள் 03 2017ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1,100ஊடாக அளாவுகைகள் செய்யப்பட்டுள்ளன. |
| 2.தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்<br>● வெளிவாரி வளவாளர்கள் மூலமாக வாராந்தம் சில 05 நிமிட ஆவண நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்<br>● தினசரி 01 நிமிட ஆவண நிகழ்ச்சித்திட்டம்<br>● மாதந்தோறும் 30நிமிட ஆவண நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குதல்<br>● மாதந்தோறும் சனாதிபதி சிறப்புப் பணிப் படையின் நிகழ்ச்சித்திட்டங்கள் மீது பாடசாலைப் பிள்ளைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை வழங்குதல்<br>● மூன்று மாதத்திற்கொருமுறை சனாதிபதி சிறப்புப் பணிப் படையின் நிகழ்ச்சித் திட்டங்கள் மீது பொதுமக்களுக்கான விழிப் புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குதல் | இல்லை |
| 3.நேரடி வலையமைப்பு வலைக்கடப்பு மார்க்கத்தை சீராக்குதல் - இந்த இடை வலையமைப்பு வலைக்கடப்பு மார்க்கம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு எதிரான சேறு பூசும் நடவடிக்கைக்கு எதிராக நேரடியாக எதிர்த்தாக்கம் நிகழ்த்தியுள்ளது. | இது தொடர்பில் புதிய ஊடகப்பிரிவு நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றது என்பதன் காரணமாக வலையமைப்பு மார்க்கத்திற்கு தொலைக்காட்சிப் பிரிவு பங்களிப்புச் செய்யவில்லை |
| 4.உபகரணங்களின் பழுது பார்த்தல் | 1.4 மில்லியன் |
| 5.பிற செலவினங்கள் (கசெற் நாடாக்கள், DVD, XD Cam, தூக்கிச் செல்லக் கூடிய ஹார்ட் டிஸ்க், ரோயிட்டர், இணைப்புக் கருவிகள் முதலியன) | 50 கசெற் நாடாக்கள்<br>DVD = ஏறத்தாழ 750 |
| ஏனையவை | இல்லை |

# நல்லிணக்கப் பிரிவு

## முன்னுரை

2015ஆம் ஆண்டு யூன் மாதத்தில் நல்லிணக்கப் பிரிவு நிறுவப்பட்டதுடன் அது தொழிற்படச் செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின் அதிமுக்கிய வகிபாகம் பிரசை ஒவ்வொருவரும் ஐக்கியத்துடனும் பல்லினத் தன்மைகளுக்கும் தேசிய அடையாளங்களுக்கும் செலுத்தப்படும் மதிப்புடனும் சமவாய்ப்புகளுடனும் வாழக்கூடியவர்களுக்கும் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்திற்கும் அடிப்படை ரீதியாக பங்களிப்புச் செய்து அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுமான நாடாகவும் இந்நாட்டைக் கட்டியெழுப்புவதாகும். இப்பிரிவானது சனாதிபதி அலுவலகத்தின் உல்லாவற்றையும் உள்ளிட்ட வாழிகாட்டலின் கீழ் முன்னாள் சனாதிபதியாகிய மாண்புமிகு சந்திரிகா பண்டார நாயக்கா அவர்களின் பணிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## பொதுக்குறிக்கோள்கள்

இப்பிரிவின் முதனிலைக் குறிக்கோள் வெவ்வேறு சமூகங்களுடனும் சமயத் தலைவர்களுடனும் சிவில் சங்க அமைப்புகளுடனும் மாகாண சபைகளினதும் பிராந்திய அரசியல் தலைமையகப் பீடங்களுடனும் நிலை பேற்று நிலைக் கலந்துரையாடல்களை செய்வதும் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுமாகும்.

2017ஆம் ஆண்டில் மேற்போந்த குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதற்காக பின்வருவோர்களுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

1. அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்
2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் பிரதிநிதிகள்
3. சிவில் சங்க அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள்.
4. சமயத்தலைவர்கள்
5. சமூக அடிப்படையிலான அமைப்புகள்

இக்கலந்துரையாடல்களின் விளைவாக முரண்பாட்டிற்கான தீர்வைக் காண்பதற்கான நோக்கத்திற்காகவும் சமயங்களுக்கும் இனங்களுக்குமிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கான இயைபுடன் இம்முரண்பாடுகள் மீளவும் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

- இத்துடன் கூடுதலாக வெளிநாடுகளின் தூதுவர்களினாலும் ஐக்கிய நாடுகள் அமைப்பிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகளினாலும் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகிய வங்கிகளினதும் மற்றும் அரசாங்க அமைப்புகளினதும் அரசாங்கம் சாராத அமைப்புகளின் பிரதிநிதிகளினாலும் பாரிய பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் சனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்க அம்மணியின் ஆதரவின் கீழ் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள் இராச்சியம், இந்தியா, பிரான்சு, ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம், சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளைப் பிர-திநிதித்துவப்படுத்தும் உயர் ஆணையாளர்கள் மற்றும் தூதுவர்களுக்கு ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி விளக்குவதற்கும் இந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அவர்களுடைய உதவியைக் கோருவதற்குமாக அவர்களுடன் கலந்துரையாடல்கள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் குறிக்கோளுடன் புதிய அரசியலமைப்பொன்றை வகுத்தமைத்தல் தொடர்பில் இந்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் பங்குபற்றுதலுடன் பல சுற்றுக் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் கலந்துரையாடல்களின் போது உடன்பாடு தெரிவிக்கப்பட்ட தீர்மானங்கள் மீதான அறிக்கைகளுக்கு மறுமொழிகள் அனுப்பப்பட்டுள்ளன.

மேலே விவரிக்கப்பட்ட பணிகளுடன் கூடுதலாக கம்பஹா மாவட்டத்தில் அபிவிருத்தி தொடர்பில் வீடமைப்பு, விளையாட்டுகள், கழிவுப் பொருட்களின் கையாளுகை, நீர் வழங்கல் மற்றும் தொழில்சார் பயிற்சி ஆகியவற்றை வழங்குவதுடன் பொருட்கள் இயைபுள்ள அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் கூட்டிணைத்து பணியாற்றி அப்பணிகள் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் மாண்புமிகு பிரதம அமைச்சருக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து பெருந்தொகையான மக்கள் முன்னாள் சனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அம்மணிக்கு தங்களுடைய கஷ்டங்களைப் பற்றி குறிப்பிடுவதற்கு வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதுடன் பொதுமக்களினால் எதிர்நோக்கப்படும் கஷ்டங்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்வது இப்பிரிவின் பிரதான பணிகளில் ஒன்றாகவுள்ளது.

நாடுமுழுவதிலும் உள்ள மக்களிடமிருந்தும் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்தும் கிடைக்கும் கடிதங்களுக்கு மறுமொழி அனுப்புவதும் அவற்றை இயைபுள்ள அமைச்சுகளுக்கும் நிறுவனங்களுக்கும் தொடர்புபடுத்துவதும் தொலைபேசி மூலமாக பெறப்படும் செய்திகளுக்கு விடையளிப்பதுவும் கூட இப்பிரிவின் ஓர் பணியாகும்.

இப்பிரிவு 2017 சனவரியிலிருந்து திசெம்பர் வரைக்கும் 4,500ற்கும் மேற்பட்ட கடிதங்களைப் பெற்றுள்ளதும் இக்கடிதங்களுக்கு தாமதமின்றி விடயங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் விளைவாக வெவ்வேறு இனங் களுக்கிடையே உடன்பாடின்மை காரணமாக பாடசாலைகள் தொடர்பில் எழுப்பப்பட்ட அநேக விடயங்களைத் தீர்வு செய்வது சாத்தியமாகியிருந்தது.